ஸ்ரீ ராம ஜெயம்

தெகிவளை

# ஸ்ரீ வெங்கடேஸ்வர மகா விஷ்ணு மூர்த்தி தேவஸ்தானம்

1382



# கும்பாபிஷேக மலர்

1 - 2 - 1979

மங்கல மகளாம் மலர்மகள் தனது
கொங்கையில் நின்றன் மார்பகம் கோப்ப
குங்குமச் சிவப்புக் குடிபுகுந்ததுவோ
கங்குல் நிறமே கருநிற வண்ணா
செங்க மலத்துத் திருவிழிக் கண்ணா
பொங்கும் உலகின் புகழ்மிகு மன்னா
தங்கும் வேங்கடத் தலைவா வெல்க
எங்கும் எதிலும் என்றும் வெல்க.

— கவிஞர் கண்ணதாசன்

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா உன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூட நெய்பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்

— ஆண்டாள்


# SONICS

*SPECIALISTS IN:*

- ★ **RADIO ENGINEERING**
- ★ **ELECTRONIC ENGINEERING**
- ★ **ELECTRICAL APPLIANCES**
- ★ **INDUSTRIAL ELECTRONICS**
- ★ **MARINE COMMUNICATION**
- ★ **TEXTILE FINISHING PLANTS**

146 1/1 GALLE ROAD,
WELLAWATTA.

தெகிவளை

ஸ்ரீ வெங்கடேஸ்வர மகா விஷ்ணு மூர்த்தி

தேவஸ்தானம்

# கும்பாபிஷேக மலர்

1979

දෙහිවල

ශ්‍රී වෙන්ගඩේස්වර මහා විෂ්ණු

මූර්ති දේවස්ථානය

# කුම්භාභිෂේක ස්මාරකය

1 - 2 - 1979

*With Best Compliments*

*from*

LEELA

**JEWELLERY PALACE**

*DEALERS IN GENUINE 22 CT. SOVEREIGN GOLD JEWELLERY*

(AIR CONDITIONED SHOW ROOM)

117 – 119, Sea Street,
Colombo - 11, Sri Lanka.

Telephone: 35639 - (Ex - 2 Lines)

Telegram: LEELAJEWELS

# ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு (ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் ஸ்ரீ மடம் காஞ்சீபுரம்)

## ஆசிச் செய்தி

இவ்வுலகத்தை ஒரு சக்திபடைத்து காப்பாற்றி வருகிறது. இச்சக்திக்கே கடவுள் என்று பெயர். கடவுள் எல்லா உலகங்களுக்கும் எல்லாப் பொருட்களுக்கும் தலைவராவர். இவர் நமக்கு பல அவயவங்களையும் உணவு முதலியவைகளையும் கொடுத்திருக்கிறார். அன்புடன் நம்மைக் காப்பாற்றுகிறார். இவரை நாம் உண்மையுடன் வழிபட்டால் இவருக்கு நம்மிடம் கருணையேற்பட்டு நம்மை எல்லா துக்கங்களினின்றும் விடுவித்து அழியாத ஆனந்தநிலையை அடைவிப்பார்.

கடவுளின் வழிபாட்டை எல்லோரும் அவரவர் வீடுகளில் செய்வதுடன், அனேக பக்தர்களுடன் ஒன்று சேர்ந்து சிற்பசாஸ்திரமுறையில் ஆலயங்களை நிர்மாணித்து, அவைகளில் சாஸ்த்ரீயமாக அமைக்கப்பட்ட இஷ்ட மூர்த்திகளைப் ப்ரதிஷ்டைசெய்வித்து இம்மூர்த்திகளை வழிபடுவது சீக்கிரம் விரும்பும் பயன்களை அளிக்கக்கூடியதாகும்.

இவ்வுண்மையை உணர்ந்து ஸ்ரீலங்கையில் தெகிவளையிலுள்ள ஆஸ்திகர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ஆலயமமைத்து அதில் கலியுகவரதரான திருப்பதி ஸ்ரீவேங்கடேச ஸ்வாமியின் பெயருடன் மஹாவிஷ்ணுவின் மூர்த்தியை ப்ரதிஷ்டை செய்வித்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்க முன்வந்திருப்பதை அறிந்து ஸந்தோஷிக்கிறோம்.

ஆஸ்திகர்கள் இவ்விழாவில் கலந்துகொள்வதுடன் இந்த ஆலயத்தின் நித்ய நைமித்திக பூஜைகள் உத்ஸவங்கள் இவைகளுக்கு தாராளமாக உதவி செய்துகொண்டு ஸ்ரீ வேங்கடேச மஹாவிஷ்ணுவின் அருளால் எல்லா மங்களங்களையும் அடைவார்களாக.

நாராயணஸ்ம்ருதி.

*With the Best Compliments*

*from*

**FAREED BROTHERS**

No. 47, ELKADUWA ROAD,
UKUWELA.

Telephone: 01 - 895 Matale

# ගරු අගමැතිතුමාගේ පණිවුඩය

දෙහිවල මහා විෂ්ණු මූර්ති කෝවිලට දකුණු ඉන්දියාවේ තිරුප්පති දේවස්ථානය මගින් ශ්‍රී වෙන්කතේස්වර මහා විෂ්ණු දෙවියන්ගේද ශ්‍රී පද්මාවතී දේවියගේද ගරුඩ වාහන යේද පිළිම තුනක් ප්‍රදනය කරනු ලැබීම ඉතිහාසගත වන වැදගත් සිදුවීමකි.

අවුරුදු 180 ක් පමණ පැරණිවූ මෙම කෝවිලේ ඉතිහාසයෙහි නව පිටුවක් මේ සිද්ධිය නිසා පෙරළෙන බව කිව යුතුය.

දනට අවුරුදු කීපයකට පෙර අති පරිශුද්ධවූ තිරුප්පති දේවස්ථානයට මා ගිය ගමන මේ මොහොතේ සිහිවන මගේ සිතට ඇතිවන්නේ බලවත් සතුටෙකි.

මෙම පිළිම වහන්සේලා තුන් නම ප්‍රදනය කිරීම හේතු කොටගෙන අප රටේ ජනතාව තුළ ආගමික හැඟීම වර්ධනය වීමට අතිශයින් මහෝපකාරී වේය යනු මගේ විශ්වාසයයි. මෙම කෝවිලේ පූජා කටයුතුවලට හින්දු ජනතාව පමණක් නොව බෞද්ධ ජනතාවද සහභාගි වනබව රට පුරා ප්‍රසිද්ධ කරුණෙකි.

මේ ආශීර්වාදලත් අවස්ථාවේ සියලුම බැතිමතුන් වෙත මගේ ශුභ ප්‍රාර්ථනා පිරිනමන්නේ හද පිරි බැතියෙන්ය.

ආර්. ප්‍රේමදාස
අග්‍රාමාත්‍ය

A NEW CONCEPT IN CONSTRUCTION

# TRIGON
# SLOTTED ANGLES

*For quick, economic, strong, elegant, and long lasting construction. Can be dismantled & reused again and again.*

*Trade Inquiries to:*

**HARRISONS & CROSSFIELD (Colombo) LTD.**

P. O. Box 69, 330, T. B. Jayah Mawatha, Colombo 10.

# பிரதம அமைச்சரின் ஆசியுரை

தென்னிந்தியத் திருப்பதி தேவஸ்தானம், ஸ்ரீமகாவிஷ்ணு மூர்த்தி பத்மாவதி அம்மையார் கருடாழ்வார் விக்கிரகங்களை தெகிவளை ஸ்ரீவெங்கடேச மகாவிஷ்ணு மூர்த்தி கோயிலுக்கு வழங்கியுள்ளமை இலங்கை மக்களுக்கு பெருமை தரும் நிகழ்ச்சியாகும்.

இந்நிகழ்ச்சி, 180 ஆண்டுதொன்மை வாய்ந்த இக்கோயிலின் வரலாற்றில் புதியதோர் சகாப்தத்தைத் தோற்றுவிக்கிறது எனலாம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் தரிசனத்தின் பொருட்டு திவ்விய தலமான திருப்பதி தேவஸ்தானத்துக்கு நான் இருமுறை சென்றுள்ளதை இப்போது நினைவு கூருமிடத்துப் பெருமகிழ்வடைகிறேன்.

தேவஸ்தானம் இவ்விக்கிரகங்களை வழங்கியுள்ளமை, நம் நாட்டுமக்களது ஆன்மிக உணர்வையும் தெய்வ நம்பிக்கையினையும் பெரிதும் வளர்க்கும் என்பதில் ஐயமில்லை. இக்கோவில் வழிபாட்டிலும் ஏனைய புனித பணிகளிலும் இந்துக்களேயன்றி பௌத்தமக்களும் ஈடுபடுவது யாவரும் அறிந்ததே.

இறையருள் கொழிக்கும் இந்நாளில் கோயில் அன்பர்களுக்கு எனது வாழ்த்துக்கள் உரித்தாகும்.

**ஆர். பிரேமதாச**
பிரதம அமைச்சர்

# *Prime Minister's Message*

*The gifting of three statues of Sri Venkateswara Maha Vishnu, Sri Pathmavati and Garuda Vahane to Sri Venkateswara Maha Vishnu Moorthy Kovil, Dehiwela by the Thirupathi Devasthanam, South India would be a historic occasion for the people of Sri Lanka.*

*This event opens yet another chapter in the history of this ancient Kovil which is 180 years old.*

*It is with great pleasure that I recall the two visits I made to the Sacred Thirupathi Devasthanam to pay my homage some years back.*

*The donation of these three statues will no doubt help develop the spiritual feelings of the people of our country. It is well known that not only the Hindus but also Buddhists participate in the religious activities of the Kovil.*

*I send my greetings to the devotees on this Blessed occasion.*

R. Premadasa
*Prime Minister*

# දෙහිවල මන්ත්‍රී තුමියගේ පණිවිඩය

දකුණු ඉන්දියාවේ තිරුපති දේවස්ථානය මගින් ශ්‍රී මහා විෂ්ණු, ශ්‍රී පද්මාවතී සහ ගරුඩවාහන යන මේ පිළිම වහන්සේලා දෙහිවල නැදිමාලේ ශ්‍රී විෂ්ණු දේවාලයේ තැන්පත් කිරීම සඳහා පරිත්‍යාග කොට ඇති බව අසා මම ඉමහත් ප්‍රීතියට පැමිණියෙමි.

දෙහිවල නැදිමාලේ පිහිටා ඇති විෂ්ණු දේවාලය අනාදිමත් කාලයක සිට පැවත එන්නකි. එය මේ පළාතේ ඇති විශාලම විෂ්ණු කෝවිල වන අතර බෞද්ධ හා හින්දු බැතිමතුන් දහස් ගණනින් වැඳ පුදා ගැනීමට පැමිණෙන ස්ථානයකි.

මා මේ ගැන විශේෂයෙන්ම ප්‍රීති වන්නේ හිටපු ධීවර ඇමති වූ මගේ පියාණන් ඔහුගේ අවසන් කාලය දක්වාම මේ දේවාලයට අත්‍යන්ත ගෞරවාදරය දක්වූ බැතිමතකුව සිටි බැවිනි. මෙම දේවාලයේ අනුහස නිසා මේ ප්‍රදේශයටම ඉතා ශාන්ත අති පරිශුද්ධ වාතාවරණයක් ඇතිවූ බව මගේ පියාණෝ තදින්ම විශ්වාස කළහ.

දැනට මෙම කොට්ඨාශයේ මන්ත්‍රී වරිය වශයෙන් මෙම දේවස්ථානයට මගේ ඇති ලැදියාව ඉමහත්ය.

මෙම පළාතේ මහජනයා තුළ ආගමික ශ්‍රද්ධාව දියුණුකොට භක්තිය හා පහන් සංවේගයක් ඇති පරිසරයක් ඇතිකිරීමට ඉවහල් වන්නාවූ මෙම දේවස්ථානයට පිළිම වහන්සේලා ප්‍රදානය කිරීමෙන් විශාල මෙහෙයක් කළ ඉන්දියාවේ තිරුපති දේවස්ථානයට මගේ ස්තුතිය පුදකරමි.

දේවස්ථාන ගර්භයෙහි පිළිම වහන්සේලා ප්‍රතිෂ්ඨාපනය කිරීමට අප විසින් ගන්නා මෙම ප්‍රයත්නයට ශ්‍රී වෙංකතේශ්වර විෂ්ණු දෙවි මහ රජාණන් වහන්සේගේ ආශිර්වාදය ලැබේවා.

සුනේත්‍රා රණසිංහ

With Best Compliments

from

**ASOKA HARDWARE STORES**

348, Old Moor Street,
COLOMBO 12.
(Sri Lanka. Ceylon)

Telephone: 35727 - 25797

*BRANCH:*

SRI DURGA HARDWARE STORES

125, Stanley Road,
JAFFNA.

Telephone: 7178

*GENERAL HARDWARE MERCHANTS*
*AND*
*COMMISSION AGENTS ETC.*

# Message from Dehiwala M. P.

*I am happy to learn that Sri Vishnu Temple at Nedimale, Dehiwala has received the idols of Maha Vishnu, Sri Pathmavathie, and Garuda Vahana as a donation From Thirupathy Devasthanam, South India. God Sri Vishnu is devotedly worshipped by Sri Lankans from the very ancient times.*

*The Vishnu Shrine at Nedimala, Dehiwala was founded at an ancient date beyond memory and yet it remains the largest Hindu Temple in the area and attracts the biggest crowd of pilgrims, both Buddhists and Hindus.*

*I am particularly happy in view of the fact that my father the Minister of Fisheries had been an ardent devotee of the temple until his last days. He had a strong conviction that the aura emanating from the temple kept the area in an atmosphere of peace and harmony.*

*Being the Member of Parliament for the area, I feel drawn to it and feel proud of it.*

*I am thankful to the Thirupathy Devasthanam for having given these Idols which shall make holy not only the temple but my electorate also and strengthen the spiritual feelings of the people of the area and help them to lead a life of piety and serenity.*

*May Sri Venkateswara Maha Vishnu bless us in our effort to house the Idols in the sanctum sanctorum*

***Sunethra Ranasinghe***

With Best Compliments

from

★

a

*Well*

*Wisher*

# தெகிவளை பா. உ. அவர்கள்

# வாழ்த்துகிறார்

தெகிவளை நெதிமாலையிலுள்ள விஷ்ணு கோவில், திருப்பதி தேவ ஸ்தானத்திலிருந்து ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தி, பத்மாவதி அம்மையார் கருடாழ்வார் விக்கிரகங்கள் பெற்றுள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இலங்கை வாழ் மக்கள் ஆதிகாலந்தொட்டே விஷ்ணு வழிபாட்டில் ஈடு பாடுடையவர்கள்.

பழம் பெருந் தொன்மைவாய்ந்த இவ்வாலயம் இப்பிரதேசத்தில் மிக உன்னதமானதாக விளங்குவதோடு பெருந்தொகையாடியார்களையும் ஈர்த்து மிளிர்வது. பௌத்தர்களும் இந்துக்களும் ஒருசேர வழிபடும் சிறப்பு மிக்க தலமிது.

கடற்றொழில் அமைச்சராகத் திகழ்ந்த எனது தந்தையார் தமது அந்திய காலம்வரை மிகுந்த பற்று வைத்து வழிபட்டுவந்த ஆலயம், இவ் வண்ணம் சிறப்புறுவது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது. இக் கோயில் பரப்பிய தெய்வீக ஒளியால் நமது பிரதேசம் அமைதியும் சாந்தியும் உடையதாய்ப் பொலிவுற்று வந்துள்ளதென அவர் உறுதியாக நம்பியவர்.

தெகிவளைப் பகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறை யிலும், இக்கோயில் காணும் இப்பெருவிழா எனக்கு மகிழ்ச்சியும் பெரு மையும் தருகிறது. திருப்பதித் தேவஸ்தானம் வழங்கியுள்ள விக்கிரகங்க ளின் பேரொளியால் கோயில் துலக்கமுறுவது மட்டுமன்றி எனது தொகுதி மக்களும் மேன்மையுறுவர். அவர்கள் ஆன்மிக உணர்வில் மேம்பட்டவர் களாகி, பக்தியும் நேயவுணர்வும் கொண்டு வாழ அருள் சுரக்கும் இவ் விரகங்களைத் தந்துதவிய தேவஸ்தானத்துக்கு நாம் கடப்பாடுடையேம்.

இச் சிலாமூர்த்திகளைத் தெகிவளை ஆலயத்தில் தாபிக்க நாம் மேற் கொள்ளும் முயற்சி நலமுற வேங்கடேசநாதர் கருணைபுரிவாராக.

சுனேத்திரா ரணசிங்க

*With Best Wishes*

*from*

# *Ananda Press*

**PRINTERS & PUBLISHERS**

*82/5, Wolfendhal Street,*
*Colombo - 13.*

☎ 35975

# நல்லூர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்
## திரு. மு. சிவசிதம்பரம் அவர்களின்
# வாழ்த்துரை

மானிட வர்க்கத்தின் காத்தற் கடவுள் மகா விஷ்ணுமூர்த்தி. கலியுகத்திலே பசியும் பிணியும் மடியும் மிடியும் பகையும் பூசலும் நீங்கி சுபீட்சமாக வாழவேண்டி நானிலத்தார் நாள் தோறும் வழிபடும் நாரணனுக்கு இந்தியாவிலும் இலங்கையிலும் கோயில்கள் பல உண்டு.

தெகிவளை நெடுமால் கோவில் பழம் பெருமை வாய்ந்த விஷ்ணு ஆலயம். இத்தலத்துக்கு, திருப்பதி தேவஸ்தானம் மகாவிஷ்ணுமூர்த்தி பத்மாவதி அம்மையார், கருடாழ்வார் சிலா விக்கிரகங்களை அளித்துள்ளதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். 1. 2. 1979 இல். விக்கிரக ஸ்தாபனமும் மகாகும்பாபிஷேகமும் நடைபெற உள்ளதும் மகிழ்ச்சிதரும் செய்தியாகும். கும்பாபிஷேக விழா இனிது நடைபெறவும், அதனால் மக்கள் சகல சுகங்கள் எய்தி வாழவும் கடல் வண்ணன் கருணை பொழியப் பிரார்த்திக்கிறேன்.

## *Message from M. Sivasithamparam Esq. M. P.*

As the Lord Preserver of mankind, Maha Vishnu is worshipped throughout the length and breadth of India and Ceylon. We worship Him to be blessed with a life which is free from misery, want, desease and sorrows, a life of peace and harmony.

The Vishnu Kovil at Dehiwala, an ancient shrine, has been, with its divine lustre, attracting large crowds of devotees both Buddhists and Hindus. I am happy to learn that the Thirupathy Devasthanam has donated to this temple the Idols of Mahavishnumoorthy, Sri Pathmavathy and Garuda-vahana which are to be consecrated at the renovated shrine on 1-2-1979. I offer my humble prayers to invoke Lord Vishnu's blessings to make this occasion sacrosanct and sublime.



Lord Venkateswara Mahavishnu
at Dehiwala Temple

# *Message from Tirupati*

*Dear Sri Ramarathnam,*

*Your kind letter dated 2nd December, 1978. I am extremely happy to note that the Mahakumbhabhishekam has been fixed on 1st February, 1979. I am also happy to note that you will be bringing out a souvenir on that occasion. This is to convey our good wishes on this Holy occasion, for the successful completion of Kumbabhishekam.*

*With regards,*

*Yours sincerely,*

P. V. R. K. Prasad

*Executive Officer*
*Tirumala Tirupati Devasthanams*

*With the Best Compliments*

*from*

*CONSULT THE EXPERTS*

*IN CLEARING AND*

*FORWARDING*

**M. F. A. CLEARING AGENCY**

No. 38, Hospital Street,

COLOMBO I.

Telephone: **2 3 1 3 2**

கொக்குவில் சைவப் புலவர் மணி

# திரு. த. குமாரசுவாமிப் புலவர் அவர்களின்

# ஆசிச் செய்தி

உலகரக்ஷகராகிய கார் முகில் வண்ணனும் கமலக் கண்ணன் தன்னை வந்து வழிபடும் மெய்யன்பர்கள் கேட்டதைக் கொடுக்கும் கருணாமூர்த்தி. மூவுலகையும் காத்தருளும் லோகபாலகன். திருப்பாற்கடலிலே அனந்த சயனத்தின் மீது அறிதுயில் கொள்ளும் ஆனந்தரூபன். நீலமேக சியாமள வண்ணனுக்கு தெகிவளையில் கோவில் அமைத்து புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நடைபெறத்திருமால் திருவருள் கூட்டிவைத்தமை அறிந்து அவனருளை இறைஞ்சுகின்றேன். இலங்கா புரியைக் காக்கும் தெய்வமாகத்திருமால் விளங்குகின்றான் என்பதும், உந்திக்கமலத்து பிரமதேவனைத் தோற்றுவித்து லோகோபகாரமாக பூதேவி ஸ்ரீதேவிசமேதராக விளங்கும் நெடுமால்சிலாவிக்கிரகமும், பத்மாவதி, கருடாள்வார் விக்கிரகங்களும் ஸ்ரீவேங்கடேஸ்வரப் பெருமான் கருணையுடன் திருப்பதியிலிருந்து தெருவிக்கப்பெற்றதும் ஈழவள நாட்டு ஆஸ்திகப் பெருமக்களது நற்றவப் பயனேயாகும்.

அப்பெருமானை மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்குவது எம்மை நல்வழிப்படுத்தி மெய்நெறி உய்க்கும் என்பது திண்ணம்.

தெகிவளை வெங்கடேஸ்வரப் பெருமான் கும்பாபிஷேகம் சிறப்புற நிகழவும், கும்பாபிடேகமலர் அருளொளி பரப்பி மக்களிதயத்தில் அறியாமை இருளகற்றிமெய்யறிவுணர்த்தவும் எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களையும் ஆசியையும் வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

இங்ஙனம்
த. குமாரசுவாமி

*With Best Compliments*

*from*

**GRANDPASS RUBBER COMPANY**

226, Grandpass Road,
COLOMBO 14.

Telephone: **25289**



**Sri Pathmawathy**
**at Dehiwala Temple**

# கலைமகள் ஆசிரியர் அவர்களின்
# ஆசிச் செய்தி

மரகதத் தீவாம் இலங்கையில் அன்பர்
வாழ்தரு தெகிவளைப் பதியில்
பரவுறு வேங்க டேசனைப் போற்றும்
பண்ணமை ஆலயத் தின்கண்
திருவெனும் பதுமா வதியினை மாலைச்
சிறைபொன்னும் கருடமூர்த் தியினைப்
பெருமையார் வேங்க டத்தினின் றேற்றுப்
பிரதிட்டை செய்கின்றார் நன்றே.

குடமுழுக் காற்றும் முயற்சிகள் நடக்கும்
குறிப்பினை யறிந்துளம் மகிழ்ந்தேன்;
அடைவுறு மந்தப் புண்ணிய நாளில்
அன்பர்கட் டுரைகவி பொதுளி
இடமுற எழில்கொள் மலர்மலர்ந் தின்பம்
ஈயும் என் பதனையும் அறிந்தேன்.
படமுறு மலர் நன் கலருக! கோயிற்
பதிட்டையும் நிறைவுற வாழி.

கி. வா. ஜகந்நாதன்

With the Best Compliments

from

*
*
*
*
*
*
*
*
*
*
*
*

**SEDAWATHE MILLS LTD.,**

P. O. Box 628,
180, St. Joseph's Street,
COLOMBO 14.

Telephone: **3 2 4 8 9, 3 5 2 2 8**

## பிரதமகுரு, வண்ணை ஸ்ரீவெங்கடேசவரதராஜப் பெருமான் தேவஸ்தானப் பிரதிஷ்டா சிரோமணி பிரம்ம ஸ்ரீசாமிவிஸ்வநாதக் குருக்கள் அவர்களின்

# ஆசியுரை

# ‘‘தத்விஷ்ணோ பரமம்பதம்’’

‘‘இது வேதவாக்கு’’

உலகின் கண்ணே ஆன்மாக்களைப் படைத்து காத்து. அளித்தற்பொருட்டே இறைவன் கருணை வடிவமாக பலவிதமான அவதாரங்களில் அமைந்து விளங்குகிறான். ஆகவே சிருஷ்டி என்பது படைத்தல் என்பதைக் குறிக்கும் இதற்கு காரணமூர்த்தியாக விளங்குபவரே சதுர்முகநாயகரானபிரம்மா. ஸ்திதி என்பது காத்தல் இரட்சித்தல் எனப்பொருள் இதற்குக் காரண மூர்த்தியானவரே ஸ்ரீமந். நாராயணப்பெருமான். இவரின் அவதாரங்கள் பத்து விதமாக அமையப்பெற்றது. அவை மற்சம, கூர்மம். வராகம் வாமனம் நாரசிம்மம் ராம. பலராம, பரசுராம கிருஷ்ண, கல்கி அவதாரங்கள் எனப் பெயர்பெறும்.

ஆகவே, விஷ்ணுவின் தத்துவத்தில். நின்ற திருக்கோலம். இருந்த திருக்கோலம் சயனத் திருக்கோலம் என உண்டு. நின்ற திருக்கோலமூர்த்தி ஸ்ரீவெங்கடாசலபதி வரத ராஜமூர்த்தி ஸ்ரீநிவாஸமூர்த்தி என பலவகை. இருந்த திருக்கோலத்தில் ஸ்ரீதேவி பூதேவி யுடன் பத்மாசனத்தில் அமைந்து விளங்கும். சயனத்திருக்கோலம். ஊர்த்வசயனம் யோக சயனம் போகசயனம் உத்தாரண சயனமென சிற்பத்தில் கூறப்படுகிறது. ஆகவே இலங்கா புரிமக்கள் செய்த புண்ணியப்பேற்றினால் தெகிவளை. ஸ்ரீவிஷ்ணுமூர்த்தி தேவஸ்தானத்திற்கு திருப்பதிஷேத்திரத்தின் காணிக்கையாக அர்ச்சாவதார மூர்த்தியான ஸ்ரீவெங்கடேஸ்வரர் விக்கிரகம் ஸ்ரீபத்மாவதித்தாயார் விக்கிரகம் ஆன்மாக்களின் நலனைக்கருதி தினமும் பதி யின் அருள்வேண்டி நிற்கும் கருடாழ்வார் விக்கிரகம் ஆகியவற்றை அனுப்பிவைத்தபெருமை ஷ திருப்பதி தேவஸ்தானத்திற்கு உரியதே. ஆகவே இந்தப் பெரிய உலகளந்த உத்த மூர்த்தியாகிய ஸ்ரீவெங்கடேஸ்வரப்பெருமாளுக்கும் ஸ்ரீபத்மாவதிதாயாருக்கும் ஸ்ரீகமலாசனி தனலட்சுமிக்கும் உற்சவநாயகர் கெருடாழ்வார் முதலான மூர்த்திகளுக்கும் சிறந்த கும்பாபி ஷேக விழாவானது. வேதோக்த வைகானஸ ஆகமப்பிரமாணத்திற்கு அமைய நிகழும் காலயுக்தி ஆண்டு தைத்திங்கள். 19ம் நாள் குருவாரம் மீனலக்கினத்தில் நடைபெறத் திருவருள் கூட்டி ஸ்ரீ முகத்தின் ஆசியுடன் நடைபெறுகின்றது. இவ்வைபவம்யாவும் அர்ச்சா வதாரமூர்த்தியும் கலிபிரத்தியஷ வைகுண்ட நாதருமாகிய பரந்தாமனின் பேரருளுடன் நடந்தேறவும் இதற்கு அங்கமாக மக்கள் மனதில் தினமும் மலர்ந்து சிந்தித்து விழிப் புடன் வாழமலரும் ஸ்ரீதேவஸ்தான கும்பாபிஷேகச் சிறப்பு மலரும் நிறைந்ததேன் சுவை மிகுந்ததாக மக்கள் மனங்களில் பதிந்து ஒளிவீசி சிந்தனைக்குரிய மலராக அமையவும் ஷ கும்பாபிஷேகதெரிசனத்தின் பலனாக நாட்டில் யாவரும் சுபீஷமான நல்வாழ்வு பெற வேண்டும் எனப்பிரார்த்தனை செய்து ஆசிகூறுகிறேன்.

தத்விஷ்ணோ பரமம்பதம்.

ஆதிமுதல் அந்தம் வளர விஷ்ணுவின் பரமபதத்தையே நாடுகிறோம்.

ஓம்தாத் ஸத்,

அஸத்துக்கள் நீங்கவும் ஸத்துகள் ஓங்கவும் நாம் நிதமும் நாராயணா என்னும் நாமத்தை உச்சரிப்பதே சாலசிறந்த வழியாகும்.

ஸ்ரீ. கோவிந்த நாமசங்கீர்த்தனம்.


பிரதிஷ்டாசிரோமணி

**பிரம்மஸ்ரீ. சாமி விஸ்வநாதக் குருக்கள்**

ஸ்ரீவெங்கடேஸவரராஜப் பெருமாள்

தேவஸ்தானம்

யாழ்ப்பாணம்.

*With Best Compliments*

*from*

# ANBU BROTHERS

**Dealers in Sri Lanka Produce**
**Importers & Exporters**

100, Old Moor Street,
COLOMBO 12.
SRI LANKA.

Telephone: **22987**
**&**
**33227**

Grams: **Anboo**

# வைத்யநாத ஐயர் அவர்கள்

# வாழ்த்துகிறார்

கோவில் இல்லா ஊரில் குடியிருப்பது நன்றல்லவென் பர்; ஆமாம் எல்லாம் வல்ல ஸ்ரீமத் நாராயணனிடமிருந்து —யோகம், ஞானம், ஸாங்கியம், வித்தைகள், சிற்பம் மேலும் ரிஷிகள், பிதுருக்கள், தேவர்கள் பஞ்ச மஹா பூதங்கள், போக போக்கியங்கள், ஜங்கம ஸ்தாவரங்கள் ஆகிய இந்த உலக னைத்தும் உண்டானதாலன்றோ, இலங்கையிலும் தெஹிவளை சேத்திரத்திலே பெரும் பொருளாகி ஒன்றேயாகிய மஹா விஷ்ணு, கோயில்கொண்டருளியுள்ளார். இதுகாறும் இச் சேத்திரத்தில் விஷ்ணு மூர்த்தியின் சக்கரச் சின்னமே நிறு வப்பெற்று வழிபட்டு வரப்பட்டது. இப்போது திருப்பதி தேவஸ்தானத்திலிருந்து கிடைக்கப்பெற்ற விக்கிரகங்கள் தாபிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. இதன் மூலம் இலங்கைவாழ் மக்களுக்கே அவனருள் பாலிப்பு எய் தப் பெறுகிறது.

கும்பாபிஷேகம் திருவருள்பாலிக்க, மதபேதமின்றி எம் மால் இயன்ற உற்சாகமான உதவிகளை அர்ப்பணித்து, சாந்த வடிவினராய், அரவணைமேல் சயனித்தவராய், நாபியில் தாமரை மலர்ந்தவராய், தேவர்கள் நாயகனாய் உலகிற்கா தாரமாய் ஆகாயத்திற்கொப்பானவராய், மேகம் போன்ற நிறமுடையவராய், லக்குமி தேவியின் உள்ளத்தைக் கவர்ந்த வராய், தாமரைக் கண்ணனாய் யோகிகளின் இருதயத்தில் தியா னத்தால் அடையப்படுபவராய் பிறவித் துன்பத்தைத் துடைப் பவராய் விளங்கும். ஸர்வலோக நாயகனிடம், சரீரத்தாலோ, வாக்காலோ மனத்தாலோ கருமேந்திரியங்களாலோ, ஞானேந் திரியங்களாலோ, இயற்கையின் இயக்கத்தாலோ எது எதைச் செய்கிறேமோ அஃது எல்லாவற்றையும் பரம புருஷனாகிய தெஹி வளையிலே பள்ளி கொள்ளும் ஜனார்த்தனனுக்கு தினமும் அவன் மலரடியில் சமர்ப்பித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய் வோமாக.

ஓம் தத்வத்.

இ. வைத்யநாத ஐயர்

With the Best Wishes

from

Sri Muthumari Stores

150, Colombo Street,

KANDY.

Telephone: 3247

# கொழும்புப் பல்கலைக் கழக தமிழ்த்துறைப் பேராசிரியர்

# வாழ்த்துகிறார்

கொழும்புவாழ் இந்துக்கள் மகா விஷ்ணுமூர்த்தியைத் தரிசிக்கும் சிறந்த தலமாக விளங்குவது தெகிவளை ஸ்ரீ வெங்கடேஸ்வர மகா விஷ்ணுமூர்த்தி தேவஸ்தானம். இத் தேவஸ்தானத்திற்குத் திருப்பதி தேவஸ்தானம் வழங்கியுள்ள மகா விஷ்ணுமூர்த்தி, பத்மாவதி, கருடாழ்வார் விக்கிரகங்களின் பிரதிட்டையும் குடமுழுக்கு விழாவும் 1. 2. 1979 இல் நடைபெறும் என்பதை அறிந்து பெரு மகிழ்ச்சி கொள்கின்றேன். இவ்விழாவிற்குப் பக்தகோடிகள் பல்லாயிரக் கணக்கில் வருகை தந்து ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமானைத் தரிசித்து ஆன்ம ஈடேற்றம் பெறுவார்களாக.

சுடச்சுடரும் பொன் போல இறைவனின் திருவருள் கிட்டும்பொழுது தான் எம்மைப் பற்றியிருக்கும் ஆணவமாகிய மலம் வலிகெட்டு ஞானஒளி பிரகாசிக்கும். பல திசைகளிலும்தம் மனதைப் பறிகொடுக்கும் மக்கள் சமயச்சடங்குகளின் போதும், சமய விழாக்களின் போதும் தம் மனதை ஒருமுகப்படுத்தி இறைவன் பக்கம் கொண்டுசெல்ல விழைகின்றனர். எனவே ஆண்டுதோறும் முக்கிய திருநாள்களில் இறைவனை மக்கள் தரிசித்துப் பேறடையும்வண்ணம் விழாக்கள் எடுப்பது சமயவாழ்க்கையில் மிக இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. ஸ்ரீ வெங்கடேஸ்வர மகா விஷ்ணுமூர்த்திக்குக் குடமுழுக்கு விழா எடுக்கும் இவ்வேளையில் பக்தகோடிகள் பெருந்திரளாகத் திரண்டு வந்து பெருமானைத் தரிசித்து உயர்பேறு எய்துவாராக.

இவ்விழா சிறப்படையவும், மலர் நறுமணம் மிக்கதாக உருப்பெற்றுச் சீரிய புகழ்பெறவும் எல்லாம்வல்ல இறைவன் துணைநின்று உதவ வேண்டுகின்றேன்.

அன்புள்ள

ஆ. சதாசிவம்

*With the Best Compliments*

*from*

**DIAMOND HOUSE**

244, Galle Road,

**Colombo 6.**

Telephone: **81919**

*With the Best Compliments*

*from*

★

**COLOMBO TRADERS**

189, Galle Road,

Wellawatte,

**Colombo 6.**

**SPECIALIST FOR FREE DELIVERY SERVICE**

# நன்றி

அன்று மங்கிக் கிடந்த மணிவண்ணன் கோயில், இன்று துங்கமுற்றுத் துலக்கம் பெற்று நிற்கும் நிலைகண்டுள்ளது. அறிதுயில் கொள்ளும் பரந்தாமன் அவன் ஆதலின் சென்ற சில ஆண்டுகளாகத் தூங்காமல் தூங்கிக்கொண்டிருந்தான் போலும். கோயில் மங்கிக் கிடப்பதும், மக்கள் 'இங்கு இப்பரிசு ஏன்' என ஏங்குவதுமாகிய நிலைகண்டு,

"அடியார் உளமெல்லாம் அன்றளந்து கொண்ட
கடிமா மலர்த்தாட் கடல்வண்ணன் — நெடிதே
துயிலுவது நீத்துத் துணையாம் பதும
மயிலோடு வந்தான் வலிந்து"

என்று சொல்லும் வண்ணமாக,

"நோவினையும் நோயினையும் நோய் செய்வினையினையும்
வீவினையும் தீர்த்தருளும் வேங்கடத்"திலிருந்து
வேலைசூழ் இலங்கைத்தென் மேலைத்திசை சார்
தெகிவளைச்செழும்பதிசேர்ந்த வரலாறு விந்தையானது; சுவைபயப்பது.

கோயிலில் இப்போது தாபிக்கப்பெற்றுள்ள விக்கிரகங்கள் திருப்பதி தேவஸ்தானத்தால் இலவசமாக வழங்கப் பெற்றவை. கடல் வண்ணன் கண்ணோட்டத்தில் காசினி முழுவதுமே வாழும் உண்மையை புலப்படுத்தல் போன்று கீழைத்தேயத்திலன்றி மேலைத் தேயத்திலுள்ள நாடுகளிலும் விஷ்ணு ஆலயங்களை அமைக்க உதவியும் விக்கிரகங்களை வழங்கியும் திருப்பதி தேவஸ்தானம் பேருபகாரம் செய்துவரும் கைங்கரியத்தின் தொடராக இவ்வாலயத்திற்கும் மூன்று விக்கிரகங்களைத் தந்து விஷ்ணுவழியாடு மேலோங்க வழி வகுத்தது. தேவஸ்தானத்துக்குப் பொதுவாக இலங்கைவாழ் மக்களும் சிறப்பாகத் தெகிவளை வாசிகளும் நன்றிகூறும் கடமைப்பாடுடையர். நன்றி பாராட்டுதலேயன்றி நாம் வேறு எவ்வகையில் கைம்மாறு ஆற்றவல்லோம்? இச்சந்தர்ப்பத்தில் வேங்கடேசப்பெருமான், தம் வருகைக்குக் கருவியாகக் கொண்ட பங்களூர் மோகன் அவர்களையும் அவரைக் கோவிலுக்கு அழைத்துவந்த பிரபலவர்த்தகர் திரு. கே. செல்வராஜா அவர்களையும் நினைவுகூர்வதோடு அவர்களுக்கு நன்றிசொல்வதும் நம் கடனாகும்.

வேங்கடேசப்பெருமானதும் பத்மாவதி அம்மையினதும் திவ்விய சொருபங்களை விக்கிரகத்தில் வடித்தெடுத்த திருப்பதி தேவஸ்தானத் தலைமைச் சிற்பி, அவர்களையும் அவரது உதவியாளர்களையும், சிலாமூர்த்திகளைத் தரிசிக்கும் தோறும் மக்கள் பாராட்டுவர் எனினும் நன்றிக் கடப்பாட்டைத் தெரிவிக்கும் நோக்கில் இங்கு போற்றுவதும் அவசியமாகிறது. இலங்கைமீதுள்ள பிரியத்தாற் போலும் தென்திசை இலங்கை நோக்கிக் கடல் நிறக் கடவுளெந்தை துயில் கொள்வாராகவும், கடல்கடந்து அப்பெருமானை இலங்கைக்குப் கொண்டுவருவதில் சிரமம் இல்லாமல் இல்லை. ஆனல் அச்சிரமத்தை தம் பேருதவியால் இல்லையாகச் செய்தவர் தென்தமிழ் நாட்டுத் தஞ்சை வாணன் மா. நடராசன் அவர்கள் அன்னார்க்கு . எமது இதயங்கனிந்த நன்றி. மூர்த்திகளைப் பிரதிஷ்டைசெய்யுங்கால் தாபித்தற்கு வேண்டிய யந்திரங்களைத் தயாரித்துப் பூஜையில் வைத்து தந்தருளியதோடு கும்பாபிஷேகத்திற்கு உகந்த சுபநாளையும் நிர்ணயித்து ஆசிர்வதித்த காஞ்சி ஸ்ரீமுகம் பெரியவர் அவர்களுக்கு உளமார்ந்த வணக்கமும் நன்றியும் உரித்து.

கும்பாபிடேகம் செய்யும் மகத்தான பொறுப்பினை ஏற்றுக்கொண்ட வண்ணை வரத ராஜப் பெருமாள் தேவஸ்தானம் பிரதமகுரு ஸ்ரீ விஸ்வநாதக்குருக்கள் அவர்களுக்கும் துணை புரியும் ஏனைய குருமார்க்கும் நன்றி உரியது.

கும்பாபிடேக விழாவையொட்டி மலர் ஒன்று வெளியிடவேண்டுமெனக் குறுகிய காலத்தின் முன்னரே, ஆலோசிக்கப்பட்டது. ஆயினும் அவ்வெண்ணம் நிறைவேறும் வகையில் வேண்டுகோளை மறுக்காது ஆசியுரைகள், வாழ்த்துக்கள் வழங்கிய சைவப் பெரியார்களுக்கும் கட்டுரைகள் தந்து உபகரித்த பேரறிஞர்களுக்கும் மனமார்ந்த நன்றி. தம் சிரமத்தை நோக்காது இம்மலர் இனிது அமைய உடனுழைத்த திருவாளர்கள் வே. ந. சிவராசா, கு. குருசாமி, ஆகியோர்க்கும் ~~அவர்களுக்கும்~~ நன்றி உரியது.

இன்னும் விளம்பரங்கள் தந்துதவிய பேருபகாரிகளுக்கு எவ்வகையில் நன்றி கூறுவது? அவர்கள் உதவியில்லையேல் மலர் வெளிவந்திருக்குமோ என்பது சந்தேகமே.

கோயில் பணி சிறக்கவேண்டும் என்னும் கொள்கையினால் குறுகிய கால அவகாசத்தில், பார்ப்போரிடத்து முகமலர்ச்சியும் மனமகிழ்ச்சியும் ஏற்படும் பான்மையில் இதனை வண்ணமலராக்கித்தந்த ஆனந்தா அச்சகத்தாருக்கு உளமார்ந்த நன்றி.

இனி கோயில் வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் உதவிய மெய்யடியார்களுக்கும் அன்பர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் இதய பூர்வமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.




மலர் ஆசிரியர்

# தெகிவளை வேங்கடேஸ்வரர் பஞ்சகம்

கரவைச் சிவன்

நந்தாழி வெஞ்சிலை தண்டா யுதங்கொண்ட நாரணனார்
செந்தாமரைமி னுடனாய் வடவேங் கடத்திருந்து
வந்தாயர் பாடி யெனச்சீர் வயங்கு தெகிவளையில்
நந்தாவருள்கொ டிருந்தார் வணங்கிட நண்ணுதுமே

அரவணைப் பாற்கடற் பள்ளிகொள் நீலவருட்கடலை
மருவளர் சோலை மருவு தெகிவளை மந்திரத்தே
ஒருமுறை யேனும் இருகரங்கூப்பி உணர்வுமொன்றி
பரவவல் லார்தமக் குண்டோ பிணிகளின் பற்றுகையே.

காவிக் கடிமலர்க் காட்டிடைப் பூத்துக் கவின்பெருக்கு
வாவிக் கமல மெனவிழி கைபதம் வண்ணச் செவ்வாய்
மேவிக்கிடக்கு மரகதமேனி விமலன் பொற்றாள்
சேவித்து மேன்மை யுறுவீர் தெகிவளை சென்றடைந்தே.

மங்கா வளம் சினம் பொங்கா மனம்வரி வண்டுறுவெண்
பங்கே ருகம்பயில் பாவையின் நாட்டம் பருவரல்நோய்
தங்கா வுடல்பெற்று வைகுந்த லோகமுஞ் சாரவெண்ணில்
செங்காவிக் கண்ணபி ரான்வாழ் தெகிவளை சேர்குவிரே.

காரானை வேண்டமுன் காத்தானை வாசங் கமழ்துளவத்
தாரானை யன்பர்க்கெல் லாந்தரு வானை வடமதுரை
ஊரானை வண்பருந் தூர்ந்தானை உம்பர்க் குணர்வரிய
சீரானைச் சென்று தெகிவளைக் கோயிலில் சேவிப்பிரே.

ஸ்ரீ வெங்கடேஸ்வர மகா விஷ்ணு
மூர்த்தியின் திருவருள் எங்கும்
பாலிப்பதாக.

**SARASWATHY STORES**
48, Old Moor Street,
**Colombo 12.**

Telephone: **35331**

With Best Compliments
from

**WELIMADA TRADERS**
*Commission Agents for Local Produces*
141, 4th Cross Street,
Colombo 11.

BRANCH:
**SRI SUBRAMANIYA STORES**
*Vegetable Seeds and Agricultural Service*
41, Nuwara Eliya Road,
Welimada.
Phone: **289**

# ஆழ்வார் பாசுரங்கள்

மின்னுருவாய் முன்னுருவில் வேத நான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள் தானாய்ப்
பின்னுருவாய் முன்னுருவில் பிணிமூப் பில்லாப்
பிறப்பிலியாய் இறப்பதற்கே எண்ணாது எண்ணும்
பொன்னுருவாய் மணியுருவில் பூதம் ஐந்தாய்ப்
புனலுருவாய் அனலுருவில் திகழுந் சோதி
தன்னுருவாய் என்னுருவில் நின்ற எந்தை
தளிர்புரையும் திருவடியென் தலைமே லவே

— திருமங்கையாழ்வார்.

பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு

அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறை யும்சுட ராழியும் பல்லாண்டு
படைபோர் புக்குமுழங்கும் அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே

— பெரியாழ்வார்

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந் நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளை போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்

— ஆண்டாள்.

மறம்திகழும் மனமொழித்து வஞ்ச மாற்றி
வன்புலன்கள் அடக்கியிடர்ப் பாரத் துன்பம்
துறந்(து) இருமுப் பொழுதேத்தி எல்லையில்லாத்
தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டரான
அறந்திகழும் மனத்தவர்தம் கதியைப் பொன்னி
அணியரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
நிறந்திகழும் மாயோனைக் கண்டென் கண்கள்
நீர்மல்க வென்றுகொலோ நிற்கு நாளே

— குலசேகரப் பெருமான்

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே

— தொண்டரடிப் பொடியாழ்வார்.

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம்

— திருமங்கையாழ்வார்.

ஸ்ரீ ராமஜெயம்

# மங்கிக் கிடக்குமோ மாயவன் கோயில்

— சடகோபன் —

பௌர்ணமி இரவில் நெற்றிக்கு நேரே நின்று நெறித்துப்பார்க்கும் சந்திரிகை, அமாவாசை இரவில் தொலைவில் சென்று ஒதுங்கிக் கொள்கிறதே! பாரபட்சம் இல்லாமல், மிச்சம் மீதி வைக்காமல் நிலவை வாரி வழங்கும் சந்திரிகைகூட, மறைந்து ஒதுங்கிக்கொண்டு, நிலவைச் சிக்கனத்தோடு கிள்ளித் தெளிக்கின்றதென்றால், அதன் அருள் அன்பில் குறைபட்டுக்கொள்வதா?

சமயங்களில் தெய்வமும் சந்திரிகை மாதிரியேதான். ஒரு சமயம் நேர்நின்று வாரி இறைக்கிறது. மறுசமயம் மறைந்து நின்று கிள்ளித்தெளிக்கிறது.

பால் நிலவைவாரி இறைக்கும் சந்திரிகையில் சிக்கனமான போக்கிலும், பிரபலிக்கமில்லாத ஒதுக்கமான வாழ்விலும் தவறு சொல்லமுடியாததுபோலவே அருளை அள்ளிச்சொரியும் தெய்வமும், சமயங்களில் ஒதுங்கிநின்று சிக்கனமான இருக்கத் தீர்மானித்தால் அந்தத் தெய்வத்தின் போக்கில் குறைபட்டுப் பயன் இல்லை.

### தெகிவளை மகாவிஷ்ணு

தெகிவளைப் பகுதியில், களுபோவில ஆஸ்பத்திரிக்கு அண்மையில், அண்டர்சன் வீதியில், ஒரு காலத்தில் பௌர்ணமி நிலவுபோல, ஓங்கி உலகளந்து நாடெல்லாம் அருள் அமுதை வாரி இறைத்த மகாவிஷ்ணு, அமாவாசை இரவில் சந்திரிகை ஒதுங்குவதுபோல ஒதுங்கிக்கொண்டார்.

இக்கோயிலின் தொன்மை 18ஆந் நூற்றுண்டுவரையில் எட்டுவதாகப் பேசிக்கொள்கிறார்கள். இந்தக் கோயில் களுபோவில, நெடிமால என்ற இரண்டு கிராமங்களுக்கு எல்லை வேலியாக நிற்கிறது. அந்தக் காலத்தில் இது ஒன்றே கற்கோவில். தமிழில் கற்கோவில் என்பது, சிங்களத்தில் "களுகோவில" "களுபோவில" என்று திரிந்தது.

ஆண்டாள் திருப்பாவையில் "கஞ்சன் வயிற்றில் நெருப்பன்ன நின்ற நெடுமாலே" என்கிறாள். நாராயணமூர்த்திக்கு நெடுமால் என்பதும் ஒரு பெயர். தெகிவளையிலுள்ள நெடிமால என்ற கிராமத்தின் பெயர் நெடுமால் அங்கு வீற்றிருந்ததால் வழங்கலாயிற்று என்பதில் என்ன சந்தேகம்?

அழகோடு ஒளி இறைத்த நிலவு; அமாவாசையில் இருள் கவ்வி முடங்கிக் கொள்வதில்லையா? அதுபோலவே பிரபல்யமான தெகிவளை மகாவிஷ்ணு, போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் வருகையின் பின்னர் தேய்நிலவாய் முடங்கி மறைந்துகொண்டார்.

நிலவுக்கு மீண்டும் ஒரு முறை வாழவும் பிரபல்யமும் வரும். இந்தமாதிரியே, தெகிவளை மகாவிஷ்ணுவுக்கும் பிரபல்யம் மீண்டும் வரும். மாயவன் சிங்கக்குட்டி. தூங்கும்போது சோம்பி முடங்குவான். விழித்தெழும்போது பிடரிமயிர் பொங்க சீறி எழுவான். இதனை ஆண்டாள் பாடுகிறாள்.

"சீரிய சிங்கம்...
வேரி மயிர்பொங்க
எப்பாடும் போந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப்
புறப்பட்டு"

சொல்லப்போனால், தெகிவளை மாயவன் கண்விழித்து எழுந்து விட்டான். தேடுவாரற்றுக் கிடந்த இந்தத் தென் இலங்கைத் திருப்பதியை நாடி நாடே திரள்கிறது. இந்தப் பிரபல்யம் தினகரன் வாரமஞ்சரியில் (15.6.75) வெளியான விரிவான கட்டுரைகளுடன் ஆரம்பமாகியது. அதன் பின்னர் துரித வளர்ச்சி தொடர்ந்

*With Best Compliments*

*from*

# METRO TRADES

*TEXTILE DEALERS*

199, Second Cross Street,
Colombo 11.

Telephone: **36978**

தது. இப்போது கும்பாபிஷேக விழாவில் நிற்கிறது. இந்த நிகழ்ச்சி ஒரு மைல் கல்; புகழ் மேலும் பரவும்.

### கோயில் வரலாறு

18ஆம் நூற்றுண்டில் ஒல்லாந்தர்கள் தெகிவளைப் பகுதியில் கால்வாய் வெட்டிய சமயத்தில், சிதைந்து, புதைந்து கிடந்த இந்தக் கோயிலின் மறுவாழ்வு ஆரம்பமாகியது.

தெகிவளைக் கால்வாயை வெட்டுவதற்கென தமிழ்நாட்டிலிருந்து வேலையாட்கள் அழைத்து வரப்பட்டனர். இந்த வேலையாட்களை மேற்பார்வை செய்வதற்கென தமிழர் ஒருவரே வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார். அவர் விஷ்ணு பக்தர். நாராயண மூர்த்தியை வேளை தவருமல் வழிபட்டு வந்தவர். ஒருசமயம், மகாவிஷ்ணு, அவர் கனவில் சந்நியாசி வேடத்தில் தோன்றி "அன்பனே! நின் வழிபாட்டை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனுல், நீ தீபமேற்றி வழிபடவேண்டிய இடம் இதுவல்ல; இங்கிருந்து கால்மைல் தொலைவில் இருக்கிறது. அங்கு சென்று தீபமேற்று" என்று சொல்லி மறைந்தார்.

### கன்று காட்டிய இடம்

அளவிலா மகிழ்ச்சியடைந்த அந்த அன்பர், விடிந்ததும் விடியாததுமாக, கனவில் தெய்வம் குறிப்பிட்ட இடத்தைத் தேடிப் புறப்பட்டார். திக்குத் தெரியாத காட்டில் எல்லாமே திகைப்பாக இருந்தது. தெய்வம் குறிப்பிட்ட இடம் புலப்படவில்லை. அன்பர் சோர்ந்துபோய் வீடு திரும்பினுர்.

மீண்டும் அன்று இரவு அதே சந்நியாசி சொர்ப்பனத்தில் தோன்றினுர். பிரம்பொன்றினுல் அன்பரை அடித்தார். அன்பர் திடுக்கிட்டு எழுந்துநின்றபோது "இன்று வா காண்பிக்கிறேன்" என்று சொல்லி மறைந்தார்.

அன்பர் கண்விழித்துப் பார்த்தபோது பொழுது புலர்ந்திருந்தது. குடிசையை விட்டு வெளியே வந்தனர், பசுக்கன்றென்று அவருக்காகக் காத்திருப்பதுபோல் தயாராயிருப்பதாகக் கண்டார். ஆச்சரியம் தாளாதவராகிக் கன்றைத் தொடர்ந்து நடந்தார். கன்று காட்டைத் துளைத்துக் கொண்டு வழிகாட்டி நடந்தது. அன்பர் கன்றின் தடம்பற்றி நடந்தார். கன்று ஓர் இடத்தில் நின்று சாணமிட்டது. அன்பர் கன்றை நெருங்கியபோது, அது மறைந்தது.

கன்று சாணமிட்ட இடத்தில் கையில் இருந்த கோலை நாட்டிய அன்பர் சுற்றுமுற்றும் பார்த்தார். ஆச்சரியம் தாங்காமல் திகைத்தார். சுற்றிலும் ஒரே கருந்துளசிச் செடி. நெருஞ்சியும் இலந்தையும் இருக்கவேண்டிய காட்டில், துளசி இருப்பதை அவரால் நம்பமுடியவில்லை. ஆர்வம் தாளாத அவர் அக்கம் பக்கம் பார்த்தார். அயலில் கிணறு ஒன்று தென்பட்டது. நீரை அள்ளிப் பருகியவர் ஔஷதத்தின் வேகத்தையும், சுனை நீரின் குளிர்மையையும் கவனித்துப் பிரமித்துநின்றுர். இன்று, அன்று அந்த அன்பர் கோல் ஊன்றிய இடத்தில் கர்ப்பகிரகம் அமைந்திருக்கிறது. அந்த நன்னீர்க் கிணறு சில ஆண்டுகளின் முன்னர்தான் தூர்ந்துபோயிற்று. மற்றப்படி சுற்றமும் சூழலும் ஏறத்தாழ அப்படியே இருக்கின்றன.

துன்பத்தில் ஏற்படும் களைப்பு, இன்பத்தில் ஏற்படும் திளைப்பு, இந்த இரண்டுமே அவிந்துவிடும் இடம் மூர்த்தி ஸ்தலம். சிந்தனை ஓட்டமும், மன எழுச்சிகளும் அடங்கி, மனம் தியானநிலையை அடைவதை நெடிமால் கோயிலை நெருங்கும் போதே உணரலாம்.

### சந்நியாசி இட்ட பெயர்

நெடிமால் கோவில் புகழ் தென் இலங்கை முழுதும் பரவியது. ஆயிரக்கணக்கான அடியார்கள் தரிசித்துச் சென்றுர்கள். அவர்களுள் புத்திரப்பேறு வேண்டி வந்த ஆறுமுகம் என்பவர் ஒருவர். ஆண் குழந்தை இல்லாத குறையைப் போக்க, அரங்கண்ணல் நெடுமால் நாராயணமூர்த்தியிடம் வந்துநின்றுர். வேண்டுவார் வேண்டியவாறே வழங்கும் அண்ணலும் அன்பர் ஆறுமுகத்தின் ஆவலை நிறைவேற்றினுர்.

குழந்தை பிறந்தது. ஆறுமுகம் தன் மகனை நாராயணமூர்த்தியின் தொண்டனுகவே வளர்க்க விரும்பிக் கோவில் தலத்தி

*With the Best Compliments*

*from*

# DELUXE

140 1/1, Galle Road,
Wellawatte,
COLOMBO 6.

**With one decade of time behind it DELUXE has maintained its rapidly built reputation based on its ability and experience in catering for a wide variety of customers. We are pleased to inform you that we are now fully equiped with an additionally imported Ibis permanent steam pressing machine to satisfy your urgent needs.**

லேயே விட்டுச் செல்ல நினைத்தார். அந்தச் சமயத்தில் கோயிலில் இருந்து சந்நியாசி ஒருவர் ஆறுமுகத்தின் குழந்தையை ஏற்றுக்கொண்டு, "தீரன்" என்று நாமம் சூட்டி வளர்த்துவந்தார்.

பிற்காலத்தில் இதே 'தீரன்' தான், தொண்டனாக இருந்து, திருப்பதிக்குச் சென்று சகஸ்ரநாமத்துடன் கூடிய வேலைக் கொண்டுவந்து, மூலஸ்தானத்தில் அமைத்து வழிபட்டு வந்தார். இன்று கோயிலில் காணப்படும் வேலும், சூலமும் அன்று தீரன் கொணர்ந்தவைதாம்.

நெடிமால் நாராயணனின் புகழ் பரவியதுபோலவே தீரனின் புகழும் பரவியது. மக்கள் அவரைச் சுவாமி தீரன் என அழைத்தனர். சுவாமி தீரன் சமாதியான இடம் இன்றுவரையில் பேணப்பட்டுள்ளது. மக்கள் நாராயணமூர்த்தியை வழிபடுவதோடு சுவாமிதீரன் சமாதியிலும் நின்று வணங்கிச் செல்கின்றனர். சுவாமிதீரன் சமாதியான இடத்தில் ஏழு பாம்புப் புற்றுக்கள் எழுந்ததாகவும், அங்கிருந்து நாகபாம்பொன்று வெளிவந்ததாகவும் அந்தப் பாம்புக்குப் பாலும் பழமும் தந்து பக்தர்கள் வழிபட்டதாகவும் பக்தர்கள் நம்புகின்றார்கள்.

சுவாமிதீரன் காலத்தின்பின், அதாவது 1829 - 1891 காலப்பகுதிக்குப் பின், சுவாமிதீரன் சந்ததியினரும், மகன் தம்பையாவும் இந்தக் கோயிலைப் பராமரித்து வந்தனர். இன்று தம்பையாவின் மகன் இராமரத்தினம் இந்தக் கோயிலைப் பராமரித்து வருகிறார்.

அனந்த சயனம் சிலை

இந்தக் கோயிலிலேயே எல்லோரையும் அதிகமாகக் கவர்வது அங்குள்ள திருமாலின் அனந்தசயனம் சிலை. இந்தச்சிலை, இங்குவந்த வரலாறே ஒரு கதை. 1922 - 1928 காலப்பகுதியில், கொழும்பில் இருந்த தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட வர்த்தகர் ஒருவர் திருமாலுக்குக் கொட்டாஞ்சேனைப் பகுதியில் கோயில்கட்ட வேண்டும் என்ற அவர் ஆவல் நிறைவேறாமல் திடீரென்று காலமானார். அவர் காலமாகவே, அவர் உறவினர்கள் சிலையை என்ன செய்வது என்று தெரியாது, சிலையை எந்தக் கோயிலுக்கு வழங்கலாம் என்பதைத் திருவுளச்சீட்டுப் போட்டுப் பார்த்து அறிந்தனர். சிலை நெடிமால் கோயிலுக்கு வழங்கப்படவேண்டும் எனத் திருவுளம் இருக்கக் கண்டு சிலையை நெடிமால் கோயிலுக்கு வழங்கினர்.

இவ்வாறே கோயில் திருப்பணியையும், ஆளுக்கொன்றாகப் பலர் செய்து வந்தனர். லேடி அருணாசலம் கோயில் கொடிமரம் அமைத்துத் தந்தார். முன்னைநாள் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனாவின் தந்தை, கருடவாகனம் ஒன்றை வழங்கினார். காலஞ்சென்ற திரு. டீ. எஸ். சேனநாயக்கா அவர்கள் பல சமயங்களில் பண உதவி வழங்கினார். இவ்வாறு பல அன்பர்களின் ஆக்கபூர்வமான பணிகளால் கோயில் புகழ்பெற்று விளங்கியது.

அண்மை வரலாறு

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் கோயில் நாடறிந்த கோயிலாக இருந்தது. ஆண்டுதோறும் பத்துநாள் திருவிழா நடைபெற்று வந்தது. திருவிழா எட்டாந் நாளில் சுவாமி ஊர்வலமாகப் புறப்பட்டு, தெகிவளை, காலிவீதி, கோட்டை, ஜம்பட்டா வீதி, கொட்டாஞ்சேனை, மருதானை, சின்ன பொரளை, ஹவ்லக் டவுண், பாமன்கடை ஆகிய இடங்கள் வழியாகச் சென்று பத்தாம் நாளில் கோவிலை அடைந்து, பதினோராம் நாள் கொடி இறக்கித் திருவிழா முடித்துக்கொண்ட வரலாறு இன்றும் பலர் நினைவில் பசுமையாக இருக்கிறது.

1958ஆம் ஆண்டு இனக் கலவரம் எல்லாவற்றிற்குமே முற்றுப்புள்ளி வைத்தது. அயலில் இருந்த தமிழர்கள் குடிபெயரவே கோவில் பராமரிப்பு இல்லாமல் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்தது.

நீண்ட இடைவேளைக்குப் பின்னர், அதாவது 1971ஆம் ஆண்டு கரவெட்டியைப் பூர்வீகமாகக் கொண்ட திரு எஸ். சிவசுப்பிரமணியம் என்ற அன்பர் தன் சொந்தச் செலவில் மூலஸ்தான வெளிப்புறத்தைப் புதுப்பித்து உதவினார். இதே அன்பர் நண்பர்களையும் உறவினர்களையும் அழைத்துச்சென்று இந்தக் கோவிலை அறிமுகம் செய்துவருவாராயினர். இந்தமாதிரி

FOR EXPORT QUALITY

PRODUCTS ON

1. CINNAMON OF ALL GRADES

2. CINNAMON LEAF OIL

3. CITRONELLA OIL

# K. S. de SILVA

AMBALANGODA.

Telephone: 097 — 331

யான அவர் அறிமுக முயற்சியொன்றின் போது தினகரன் ஆசிரியர் திரு. சிவகுருநாதன், திரு. செல்வச்சந்திரன், திரு. அமிர்தானந்தன், கட்டுரை ஆசிரியர் சடகோபன் ஆகியோர் இக் கோவிலைத் தரிசிக்க நேர்ந்தது. இதனை அடுத்து, 15.6.1975 ஞாயிறு தினகரன் வாரமஞ்சரியில் தினகரன் ஆசிரியரின் செய்திக் கட்டுரைகளும் ஆசிரியர் சடகோபனின் கோவில் வரலாற்றுக் கட்டுரையும் வெளிவந்தன. தினகரன் ஆசிரியர் திரு. சிவகுருநாதனின் தயக்கமில்லாத போக்கால் கோவில் பற்றித் தொடர்ந்தும் பல அறிமுகக் கட்டுரைகள் வெளிவந்தன. 1975 ஆகஸ்ட் 31ஆந் தேதி நடந்த கிருஷ்ண ஜெயந்தி பற்றிய விமரிசையான விளம்பரத்தின் பின்னர் கோவில் புதிய ஒரு சகாப்தத்தில் அடி எடுத்து வைத்தது என்று சொல்லலாம்.

### கொடைகள் குவிந்தன

பிரபல வர்த்தகர் திரு. ஆவுடையப்பன் பெரும் கைராசிக்காரர், தினகரன் பத்திரிகையில் கோவில் அறிமுகக் கட்டுரையைப் படித்துவிட்டு, காலை பத்து மணிக்கே கோவிலைத் தேடிக் கண்டுபிடித்து தரிசிக்க வந்துவிட்டார். கோவில் நிலை கண்டு வருந்தினார். கையில் எடுத்து வந்த சில பத்து ரூபா நோட்டுக்களைக் கொடுத்து "முதலில் ஒரு உண்டியல் கட்டுங்கள்ஐயா" என்று சொன்னார். அவர் சொன்ன வாய்க்கு சர்க்கரை இடவேண்டும். பொன்னும் பொருளும் குவிந்தது. கொடைவள்ளலும் பிரபல வர்த்தகருமான நாராயணசாமி அவர்கள் அம்பாளுக்கு தனிக்கோயில் ஒன்றை அமைத்துத்தந்தார். வங்கிமுகாமையாளர் கோ. நடேசன் மகாலக்ஷ்மிக்கு விக்கிரகம் அமைப்பதற்கான செலவைப் பொறுத்துக்கொண்டார். யாழ்ப்பாணம் நடேசு ஆசாரியார் இந்த விக்கிரகத்தைச் செய்தார்.

### மகிந்தன் வந்தான்

இலங்கையில் பௌத்தம் பரவுவதற்குக் காரணமாயிருந்த மகிந்தன் கி. மு. 3ஆம் நூற்றுண்டில் இங்கு வந்ததாக ஐதீகங்கள் கூறுகின்றன. மகிந்தன் வருகையே இலங்கையில் பௌத்தம் பரவியதற்குக் காரணம். எதற்கும் காலமும் வேளையும் வரும்போது சாதனைகாரார் தெய்வ அநுக்கிரகங்களோடு வந்து குவிந்துவிடுகிறார். இது தெய்வ அருள். காரியம் கைகூடவேண்டும் என்று தெய்வம் விரும்பியபோது, தீர்க்கதரிசன வார்த்தைகளும், செயல்திறனும் கொண்ட சேவையின் நாயகன் எப்படியோ வந்துசேர்ந்துவிடுவார் இனிவரும் நாட்களில் இலங்கையில் வெங்கடாசலபதியின் நாமம் நாடுபூராவும் ஒலிக்கக் கேட்கும் நிலையை ஏற்படுத்த தெய்வம் பங்களூர் மோகனை அனுப்பிவைத்ததோ என்னவோ, அவர் இங்கு வந்த காலமும் வேளையும் அப்படி இருந்தது.

சென்ற ஆண்டில் மூலஸ்தான திருப்பணி வேலைகளை ஆரம்பித்து, கர்ப்பக் கிரகத்திலிருந்த சங்குசக்கர வேலை சற்றே அகற்றிவைத்திருந்த சமயம் அது. கோவில் நம்பிக்கைப் பொறுப்பாளர் திரு. இராமரத்தினம் அவர்கள், நித்திய நைவேத்தியங்களை, தேய்ந்துபோன வேல் இனிமேலும் தாங்காதே, ஏதாவது கருங்கல் விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்யும் வாய்ப்பு ஏற்படாதா? என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்த சமயமும் அது.

இலங்கைக்கு வியாபார காரியமாக வந்திருந்தார் திரு. மோகன் அவர்கள். ஏகாதசியன்று வெங்கடாசலபதி வழிபாட்டுக்கு வாய்ப்பில்லையே என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அவர் நண்பர் தே. செல்வராஜா மகாவிஷ்ணு கோவில் இருப்பதைச் சொன்னார்கள். அவரும் கோவிலுக்கு வந்தார் கர்ப்பக் கிரகம் காலியாக இருப்பதைப் பார்த்தார். அவருக்கு என்ன தோன்றியதோ தெரியாது, அருகில் நின்ற இராமரத்தினத்தைப் பார்த்து "என்ன விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்ய இருக்கிறீர்கள்?" என்று கேட்டுவைத்தார். "இதுவரையில் எந்தத் தீர்மானமும் இல்லை" என்று இராமரத்தினம் பதில் சொன்னாரோ, இல்லையோ "விக்கிரகங்களை திருப்பதியிலிருந்து எடுத்துவாருங்களேன்" என்றார் மோகன். இதனை அடுத்துத் திரு. மோகன் திரு. இராமரத்தினத்திடம் கோவில் வரலாற்றையும், விக்கிரகங்களை திருப்பதியிலிருந்து பெறுதற்கான விண்ணப்பத்தையும் ஏற்று திருப்பதி தேவஸ்தானத்தோடு தொடர்புகொண்டு, விக்கிரகங்கள் இங்கு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். வெங்கடாசலபதியில் நாமம் இனிமேல்

With Best Compliments

from

*Manufacturer of*

45 GALLON DRUMS

# SEDAWATHE DRUMS LTD.

180, St. Joseph's Street,
COLOMBO 14.

Telephone: 3 2 4 8 9

இலங்கை பூராவிலுமே பரவி கலிந்து கொள்ள இருக்கும் வரலாற்று வளர்ச்சியை நினைத்தால், மோகன் ஒரு மகிழ்ந்தன்.

**கண்திறந்தது**

கோவிந்தன் உலகளந்தவன். அவன் எங்கும் வியாபித்திருக்கிறன். அவன் சாய்ந்து தூங்கும் பாணியில் இருப்பது உலகளாவிய அவன் இயல்புக்குச் சான்று. மேற்குத் திசையில் முடியை வைத்திருக்கிறன். கிழக்குத் திசையில் கால்நீட்டித் தூங்குகிறன். அவன் முதுகுப்புறம் வட திசையைப் பார்க்கிறது. அவன் திருமுகம் இலங்கையை நோக்குகிறது. குறிப்பாகச் சொல்லப்போனல் தென்னிலங்கையை நோக்குகிறது. கடல் நிறக்கடவுள் கண்ணனின் எண்ணமெல்லாம் இலங்கையின்மேல் தான்.

"குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாகம் நீட்டி,
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை"
(திவ்யப் பிரபந்தம்)

தென் இலங்கையில் இஷ்டதெய்வமாக இருக்கவேண்டியவர் திருமாலே தான். தென்னிலங்கை மக்கள் உண்ண உரைக்க வேண்டிய நாமம் நாராயண என்னும் நாமம் மட்டுமேதான். மூப்பு, இறப்பு என்பவைபற்றி தத்துவம் கற்றிருந்தாலும், தென்னிலங்கை மக்கள் அச்சுதனின் நாமத்தை உரைப்பதிலுள்ள சேமத்தை உணராதவரையில், திசை தவறியவர்களே, இதனையே இதுவரையிலுள்ள தென்னிலங்கை வரலாறு காண்பிக்கிறது.

அண்மையில் அப்பன் கண்திறந்தானே என்னவோ, தென்னிலங்கையில் அவன் திருநாமம் உரைக்கக் கேட்கிறது. தென்னிலங்கையில் கண்ணபிரான் வந்து வீற்றிருந்த ஐதீக உண்மையை மக்கள் தெரிந்து கொண்டார்களோ என்னவோ, தெகிவளை, நெடுமால் கோவில் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இனிமேல் தென்னிலங்கையில் எல்லோருமே நாராயணன் நாமத்தை மட்டுமே உரைப்பார்கள். அந்த நாள் வெகு தொலைவில் இல்லை. எதற்கும் காலத்தைக் கவனிப்போம்.


*With Best Compliments*

*from*

**V. SHANMUGARAJAH JEWELLERS**

118, Sea Street,
COLOMBO 11.

Telephone: 25946

# ශ්‍රී ලංකාවේ විෂ්ණු වන්දනාව

විෂ්ණු දෙවියෝ හින්දු භක්තිකයන්ගේ ත්‍රිමූර්තියට අයත් දෙවිවරුන් තිදෙනාගෙන් දෙවැන්නා වෙති. එම ත්‍රිමූර්තිය නම් බ්‍රහ්ම-විෂ්ණු-මහේශ්වරය. වේදයෙහි නම් විෂ්ණුහු ප්‍රධාන පන්තියේ දෙවියකු සැටියෙන් නොපෙනෙති. එහෙත් පුරාණ ග්‍රන්ථ ලියැවුණු කාලය වනවිට (එනම් ක්‍රි. පූ. 1000 සිට ක්‍රි. ව. 100 දක්වා විෂ්ණු දෙවියා ත්‍රිමූර්තියේ අංගයක් වශයෙන් මහත් සැලකිලි ලද බව පෙනේ. ඇතැම් තන්හි බ්‍රහ්මයා පවා විෂ්ණුගෙන් බිහිවිය යන අදහස් දක්නට ලැබේ. මෙයින් විෂ්ණු ඇදහිල්ල ඉතා බලවත්ව පැවැති බව මනාව ස්ඵුට වේ. විශේෂයෙන්ම උතුරු ඉන්දියාවේ විෂ්ණු ආගම ඉතා ප්‍රචලිතව පැවති බව ගුප්ත යුගයට අයත් විෂ්ණු දේව රූප වලින් සිතාගත හැකිය. මෙතෙක් සොයාගෙන ඇති පැරණිම විෂ්ණු රූපය වශයෙන් සලකනු ලබන්නේ උත්තර භද්‍රා (පණ්ඩිත රාධා ක්‍රිෂ්ණ) නගරයෙන් සම්භ වූ කුෂාණ විෂ්ණු පිළිමයයි. එය අර්ධෝන්නත පිළිමයකි. එම පිළිමයට අත් හතරක් ඇත. ඉන්දියාවෙන් හා ලංකාව වැනි අනිකුත් රටවලින් සොයාගෙන ඇති විෂ්ණු පිළිම වල අත් දෙකේ සිට විසිහතර දක්වා ඇති අවස්ථා ඇත. මුහුණු පිළිබඳව බලන විට එක් එක් කාලවලදී නෙලන ලද පිළිම වල වෙනස් කම් දක්නට ඇත.

වේද ග්‍රන්ථ වලින් ආරම්භවූ දේව ඇදහිලි වල සෑම අංග ලක්ෂණයක්ම විෂ්ණු දෙවියාට ආරෝපණය කිරිමට දොළොස්වන සියවස පමණ කාලයේදී උත්සාහයක් දරා ඇති බව ඉන්දියානු කලා ශිල්ප හා සාහිත්‍ය කෘති විමසා බැලීමෙන් අනුමාන කළ හැකිය.

වේද කාලයෙන් පසුව ඉන්දියාවේ පහළ වූ ජෛන, බෞද්ධ සහ හින්දු ආගම් වල විෂ්ණු දෙවියාට කවර හෝ සම්බන්ධ තමක් ඇති බවද මනාව ප්‍රකට කරුණකි. විෂ්ණුහුගේ දශ අවතාරයට බුද්ධ අවතාරයක්ද එක්කොට ඇති බව ජයදේව කවියා විසින් විරචිත ගීත ගෝවින්දයෙන් පෙනේ.

ලංකාවේ විෂ්ණු දෙවියන් ඇදහිල්ල පොළොන්නරු යුගයේදී ප්‍රචලිත වූ බව කන්තලේ වැනි ස්ථාන වල දක්නට ලැබෙන විෂ්ණු දේවාලවල නෂ්ටාවශේෂ වලින් හෙළි වේ. දේශපාලන වශයෙන්ද කලා ශිල්ප අංශයෙන්ද සාහිත්‍ය අංශයෙන්ද ලංකාවට ඉන්දියාවෙන් ආභාසය ලැබෙන්නට - ලබාගන්නට පටන් ගත් මුල් අවධියේ සිටම විෂ්ණු දේව ඇදහිල්ලද ලාංකික ජනයා අතර පැතිර ගිය බවට ඉතිහාස ගත සාක්ෂි එමට ඇත. මේ බලපෑම විශේෂයෙන්ම 6 වන පැරකුම්බා රජුගේ කාලයේදී (කෝට්ටේ) තදින්ම ලාංකික ජනතාව තුලට කාවැදී යන්නට ඇතැයි පිළිගැනීමට සාක්ෂි ඇත. විශේෂයෙන්ම විෂ්ණු භක්තික ඉන්දියානු සෙන්පතිවරුන් (සෙම්බගප්පෙරුමාල් - සපුමල් කුමරු) හා උගතුන් මෙ රටට පැමිණ ලංකාවේ රජවරුන්ගේ විශේෂ සම්මාන වලට බඳුන් වූ යුගවලදී විෂ්ණු දේව ඇදහිල්ල ලංකාවට ආවේය. සන්දේශ කාව්‍ය වලින් ලැබෙන ශිව විෂ්ණු හා සමන් දේවාල ගැන තොරතුරු මීට දෙස් දෙයි. මහනුවර රාජධානිය කරගෙන සිටි රජවරුත් ඊට කලින් සීතාවක රජ කළ රාජසිංහ රජවරුත් හින්දු කෝවිල් වලට ගම් බිම් ප්‍රදානය කොට ඇත. බුද්ධාගම සමග සමතැනක විෂ්ණු - කතරගම - පත්තිනි - සමන් දේවාලද පැවැති බව මහනුවර සතර දේවාල දෙස බැලීමෙන් තේරුම් ගත හැකිය.

පිරිවෙන් අධ්‍යාපනය ලංකාව පුරා පැතිර ගොස් ථෙරවාද බුද්ධාගමේ පවතින මහායාන හා හින්දු සංකල්ප ඉවත් කළයුතුය යන අදහස බෞද්ධ මහතෙරුන් වහන්සේලා අතර පැතිර යාමට කලින් අපේ පන්සල් වල සෑම බුදු ගෙයකම විෂ්ණු පිළිමයක් නෙලන ලද බව ලංකාවේ විහාර ගෙවල් පරික්ෂා කර බලන විට ඔප්පු වේ. මීට හේතුව එකල බෞද්ධ ජනතාව විෂ්ණු දෙවියන් බුද්ධාගම ආරක්ෂා කරන දෙවියා වශයෙන් සලකන්නට පුරුදු වී සිටීම විය හැකි නොවේද? සමන් දෙවියන් හා විෂ්ණු දෙවියන්ද එකම දෙවි කෙනකු යයි සිතූ අයද සිටින්නට ඇතැයි අනුමාන කළ හැකිය. ලංකාවේ අද පවතින බුද්ධාගම ආගම් හා ඇදහිලි රාශියක සංකලනයක්ව පවතින බව ඉතා පැහැදිලි නිසා අද මෙන් විද්‍යා දැනුම ලබාගැනීමට

*With the Best Wishes*

*from*

# *Ansons Traders*

161, Prince Street,
PETTAH.

Telephone: **2 8 5 0 1 - 4** Cable: REHANA

Dealers in all Sri Lanka Produce &
Importers, Exporters
& Commission Agents

නොහැකි වැඩවසම් යුගයක විසූ සාමාන්‍ය ජනතාවට බුද්ධාගමේ වැඳුම් පිදුම් ක්‍රමත් හින්දු ආගමේ වැඳුම් පිදුම් ක්‍රමත් එකක්ම වූවාට සැකයක් නැත. මේ චින්තන පරිසරය යටතේ විෂ්ණු පිළිම බුදුමැදුරට පැමිණීමත් බෞද්ධ ජනයා විෂ්ණු දේවාල පන්සල් භූමියේ තනාගෙන වන්දනාමාන කිරීමත් සිදුවිය.

එතරම් විද්‍යා දැනුමක් නැතිව පැවති කාලයේ පැවති ආගමික සහනය සෑම අතින්ම දියුණුයයි සලකන වර්තමාන ලංකාවේ දක්නට නොලැබීම කණගාටුවට කරුණකි. කෝට්ටේ යුගයේ හෝ මහනුවර යුගයේ රජවරුන් කළ වික්‍රමයක් අද අපට කළ නොහැකි වුවද ආගම් අතර සහනශීලී ආකල්පයක් ඇතිකර ගැනීමට බැරිකමක් නැත. බුද්ධාගම අනුව අවසාන අරමුණ වශයෙන් මාර්ගඵල අවබෝධ කර ගැනීමට අපට බැරි නම් අඩුම ගණනේ ඉවසීම පුරුදු පුහුණු කරගැනීමටවත් පුළුවන් නම් එය විශාල දියුණුවකි. ආගම අබින් යයි කියන අයගේත් ආගම නිසා මිනිසාගේ නිදහස් චින්තනයට බාධාවක් වේයයි කියන වර්තමාන දර්ශනිකයන්ගේත් (ක්‍රිෂ්ණ මූර්ති වැනි) අදහස් මදකට අමතක කොට ලොව සෑම ඇදහිලි ක්‍රමයකින්ම බලාපොරොත්තු වන්නේ කුමක්දැයි සිතා බලමු. මෙලොව හා පරලොව ශුභසිද්ධිය සඳහා අවශ්‍ය වන නිවුණු සිතක් ඇතිකර ගැනීමට හෙවත් චිත්ත ඒකාග්‍රතාවයක් ඇතිකර ගැනීමට වන්දනාමාන කිරීම හා කවර හෝ වස්තුවක් හෝ දෙවියකු හෝ බඹෙකු හෝ ඇදහීම ගැන සාමාන්‍ය ජනතාවට දෙස් කිව නොහැකිය. ''බහුං වෙ සරණං යන්ති පබ්බතානි වනානි ච... මනුස්සා භය තජ්ජිතා'' ගස් ගල් පර්වත දෙවි දේවතාවුන් සරණ ගිය අය එදත් සිටියහ. අදත් සිටිති. එහෙත් නිවන් අවබෝධ කරගත් අය ඉතා ටික දෙනෙකි. මේ තත්ත්වය වෙනස් කළ නොහැකි, හැමදම ලොව පවතින ධර්මතාවකි. බෞද්ධ ජනයා දෙවියන් ඇදහිය යුතු නැතැයි සිතන ''ප්‍රබුද්ධ'' පිරිසක් අප අතර සිටින නිසා මේ අදහස් ටික දැක්වීමි. එහෙත් ඒ ''ප්‍රබුද්ධ'' යන් අතර තමාගේ හිත පාලනය කරගත හැකි උපශාන්ත මනො කම්ම-වචී කම්ම - කාය කම්ම ඇත්තේ කී දෙනාටද? කතරගම - පත්තිනි - සමන් - විෂ්ණු යන දෙවි දේවතාවන් ඇදහීමෙන් බෞද්ධ ජනයා නිවන් දැකීමට බලාපොරොත්තු නොවන බව පුන පුනා කිවයුතු නැත. අද සංකීර්ණවූ මේ සමාජයේ පවතින අසහනය නැතිකර ගැනීමේ මගක් වශයෙන් ඔවුන් එසේ කරන බව රහසක් නොවේ. බාර හාර නොවන බෞද්ධ යෝත් ඇද්ද? නැත. හේතුව මෙලොව වශයෙන් ලැබෙන මානසික සහනයයි.

දෙහිවල මේ විෂ්ණු දේවාලයේ කුම්භාභිෂේක මංගල්‍යය පවත්වනු ලබන්නේද බෞද්ධ ජනයා එයට සහභාගි වන්නේද ඉහත කී හේතුව නිසා යයි මම සිතමි. ඇවිලෙන මහ ගිනි කඳෙකින් වෙලී ගිය ලාංකික ජනයාගේ ගතත් සිතත් මේ අභිෂේක මංගල්‍යයේ ශීතල ජලධාරාව නිසා නිවී සැනසී යනු නොඅනුමානය.

විශ්වනාත් වජිරසේන

With Best Compliments

from

(*MOST MODERN RECORD BAR IN SRI LANKA*)

**HAREENDRA RECORD BAR**

(*AIR CONDITIONED*)

AT

SAMARASINGHE BROS.

(*DEPARTMENTAL STORES*)

3, Galle Road,
Bambalapitiya,
COLOMBO 4.

Telephone: 88186

With Compliments

from

**RAJAH'S ELECTRICALS**

DEALERS & REPAIRERS OF RADIO & ELECTRICAL GOODS - WIRING CONTRACTORS

395, Galle Road,
Bambalapitiya,
COLOMBO 4.

Telephone: 83429

# ஆழ்வார்கள் பக்தி நெறி

— ஆசிரியர் க. கணபதிப்பிள்ளை

திருமால் நெறி, தமிழ் நாட்டுத் தொன்மை நெறி என்பதை "மாயோன் மேய காடுறை உலகம்" என்னும்" தொல் காப்பியச் சூத்திரம் தெளிவு செய்கின்றது. இதன் பிற்கால வளர்ச்சியை "நீலமேனி நெடியோன் கோயிலும்" என்னும் சிலம்பு மொழி வெளிப்படுத்துகின்றது. இத்தகைய பண்டைய நெறி, பின்னாளில் பல்லவர் ஆட்சிக்காலத்தில் வடநாட்டில் வழங்கி வந்த விஷ்ணுவின் அவதாரக் கதைகளையும் வேறுபல புராண வரலாறுகளையும் தம்முள் அடக்கி வைணவ நெறியாக மாறியது என்பது ஆராய்வு தரும் உண்மை. அதனால் வடக்கே நிலவிய வழிபாட்டு முறைகளும் பக்திப் பிரிவுகளும் ஏறக்குறைய கி. பி. 500 தொடக்கம் கி. பி. 850 வரைவாழ்ந்த ஆழ்வார்கள் பலராலும் மேற்கொள்ளப் பட்டன என்றால் அது மிகையாகாது. இவ் வாழ்வார்கள் பலரும், சைவ நாயன்மார் களைப் போலவே உயர்ந்த பக்தி நெறியில் நின்றவர்கள். பயன்கருதியோ அல்லது பயத் தினாலோ திருமாலை வழிபடாதவர்கள். மேலும் திருமாலை அன்றி வேறு தெய்வங் களை மறந்தும் வழிபடாத கௌணபக்திக் குரியவர்கள். சாதாரண நடையை ஒத்த சாந்த பக்தியில் நில்லாது விரைந்த நடை யுடைய தீவிர பக்தியில் நின்றவர்கள்.

பக்தியின் பல்வேறு கோணங்களை வேதப் பாசுரங்கள் உபநிடதங்கள் கீதையில் பல் வேறு பிரிவுகள் வகுத்துக்கூறுகின்றன. இவ் வாறு வடநூலார் காட்டும் பக்தியின் பேதங் களை ஆழ்வார் வழிபாடுகளில் நாம் காண முடிகின்றது. இவ்வாறமைந்த பக்திகளுள் ஒன்று தாஸ்யம். தாஸ்யம் என்பதையே சித்தாந்த நெறிதாச நிலை என்கிறது. என் கடன் பணிசெய்து கிடப்பதே' எனக்கூறும் அப்பர்காட்டும் ஆண்டான் அடிமை நிலை இதுவாகும். இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றார் நம்மாழ்வார்.

"ஒழிவு இல்காலம் எல்லாம் உடனாய் மன்னி
வழு இலா அடிமை செய்யவேண்டும் நாம்
தெழிகுரல் அருவித் திருவேங்கடத்து
எழில்கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே."

எனத் தொழும்பு பூண்டு நிற்கின்றார் நம் மாழ்வராகிய சடகோபர். இது அவரது அடிமைக்குரல். இவரைப்போலவே ஏனைய ஆழ்வார்களும் இந்த நிலையில் நின்றனர் என்பதை அவர்தம் பாசுரங்கள் ஆங்காங்கே தெளிவு செய்கின்றன. இதனையே பின்னாளில் 'கண்ணன் என் சேவகன்' எனப் புதிய தோர் வடிவில் தீட்டியுள்ளார் பாரதியார்.

அடுத்து, கீதை காட்டும் பக்திப்பிரிவு களுள் ஒன்று 'ஸக்யம் என்பது இதற்குச் சகமார்க்கம் எனவடிவு கொடுக்கின்றது சித்தாந்தம் சகமார்க்கம் என்பது இறை வனைத் தோழனாக மதித்துப் பக்தி செலுத் துவது. சைவத்தில் சுந்தரர் நிலை இது வாகும். சகமார்க்கத்தை ஆழ்வார்கள் ஆங் காங்கே தத்தம் பாசுரங்களில் தொட்டுச் செல்லினும் திருமங்கையாழ்வார் பாடல் கள் இப்பண்பினைப் பெரிதும் புலப்படுத்து கின்றன வெனலாம்.

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து
மாழை மான் மடநோக்கி உன்தோழி
உம்பி எம்பி என்றொழிந்திலை உகந்து
தோழன் நீயெனக் கிங்கொழி என்ற
சொற்கள் வந்தடியேன் மனந்திருந்திட
ஆழிவண்ணா! நின் அடியிணையடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்தம்மானே.

என்பது திருமங்கையார் அரங்கத்தம்மானைத் துதிக்கும் பாடல்களுள் ஒன்று. இதில்; இராம பிரான் குகனைத் தோழன் என அழைத் தமையை அறிந்த யானும் நின்னடியிணை அடைந்தேன் என்கின்றார் அவர்.

Agents to Blend

and Pack

Quality Teas

for Export

★

*Tea House*

*7/1, Hunupitiya Road,*

*Colombo 2.*

Telephone: 23246

வடநூலார் காட்டும் பக்திப் பிரிவுகளுள் மற்றொன்று 'வாத்ஸல்யம்'. வாத்ஸல்யம் என்பது தாயன்பைக் குறிப்பது. இறைவனைத் தந்தையாகவோ தாயாகவோ போற்றி வழிபடுவது சைவத்துள்ளும் வைணவத்துள்ளும் காணப்படும் பொதுப்பண்பாகும். அம்மையே அப்பா! என்பர் மணிவாசகர் இதற்கு மறுதலையாக, கண்ணனைக் குழந்தையாக்கித் தன்னைத் தாயாக்குகின்றார் விட்டுணுசித்தர். அவர் பெரியாழ்வார். குழந்தைக்குத் தீங்கு வரும்போது மனந்துடிப்பதும் அதன் அழகும் பிற்சிறப்புக்களும் கண்டு மனம்மகிழ்வதும் தாய் அன்பைக்காட்டும் வாத்ஸல்யமாகும். இங்கே பெரியாழ்வார் ஆயர் பாடியில் வாழும் யசோதைத்தாயார். அவள் தம் செல்வக்குழந்தைதான் கண்ணன் பெரியாழ்வாரது தாயன்பைக்காட்டும் பகுதிகள் பலவுண்டு. அவற்றுள் ஒன்று கண்ணன் அவதாரச் சிறப்புக்கண்டு மகிழ்வது.

ஆயர் பாடியில் கண்ணன் பிறந்தான் என்பதைக் கேள்வியுறுகின்றனர் ஆய்ச்சியர்கள். கேள்வியுற்றவர்கள் வந்து குழந்தையைப் பார்க்கின்றார்கள். பார்த்தவர்கள் குழந்தையின் பேரழகுகள் யாவற்றையும் வியந்து யசோதைப் பிராட்டியுடன்கூடி ஆரவாரஞ்செய்கின்றார்கள். இவ்வாறு யசோதையாகவும் ஆய்ச்சியராகவும் நின்று அகமகிழ்கின்றார் பெரியாழ்வார் தமது திரு. மொழியில் கண்ணன் பிறந்தமையை உலகியலோடு சார்த்திக் கூறினும் அவனது தெய்வநிலையையும் அவர் மறக்கவில்லை. அவற்றுள் ஒன்று கண்ணன் அவதரித்த திருநாள்.

> பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தனில்
> காணத்தாம்புகுவார்; புக்குப்போதுவார்
> ஆணொப்பான் இவன் நேரில்லை காண், திரு
> வோணத்தான்; உலகாளும் என்பார்
> களே.

என்பது குழந்தையைப் பார்க்க வந்தவர்கள் வந்து திரும்பியவர்கள் கூறும் பகுதிகளைப் பொதிந்துள்ள பெரியாழ்வார் பாடல் இங்கே கண்ணன் அவதரித்த புனித நாள் திருவோண நாள் என்கிறார்கள் ஆய்ச்சியர். திருவோணத்தில் பிறந்த பிள்ளை ஒரு கோணத்தை ஆளும் என்பது இன்றுவரையுள்ள ஊர்ப்பேச்சு. கண்ணன் திருவோண நாளில் தோன்றியமையால் இவன் உலகாளப்பிறந்தவன் என்னும் இறைவனது சர்வவியாபகத்தையும் ஆணொப்பான் இவன் நேரில்லை என்பதனால் முடிவில் ஆற்றலுடைமையையும் மலரவைக்கின்றார் ஆழ்வார். இத்தகைய தெய்வநிலைகளை மேலும் மேலுந் நீட்டிச்செல்கின்றார் அவர்.

குழந்தை பிறந்ததும் அதன் கைகால்களை நெறிப்படுத்தி நிமிர்த்தி, அதன் நாக்கிலுள்ள அழுக்கைச் சிறுமஞ்சள் கொண்டு தூய்மைசெய்து குளிப்பாட்டுகின்றாள் யசோதை. அவ்வாறு குழந்தையினது நாக்கின் அழுக்கை நீக்கும்போது குழந்தை வாயை அகல விரிக்கின்றது. அப்போது அதன் வாயுள் ஏழுலகங்களையும காணுகின்றாளாம் யசோதை.

> கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
> பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
> ஐய நாவழித் தாளுக்கு அங்காந்திட
> வைய மேழும் கண்டாள் பிள்ளை
> வாயுளே.

என்பது பெரியாழ்வார் கண்ணனுக்குக்காட்டும் தெய்வப் பண்புப்பாடல்.

கண்ணன் திருப்பாதங்களைக் கமலங்களுக்கு ஒப்பிட்டுக்கூறிய இடைக்குல மகளிர் அவனது விரல்களை உற்றுநோக்குகின்றனர். விரல்களை கூர்ந்து நோக்கியவர்கள் வியந்து நிற்கின்றனர் காரணம், பாதவிரல்கள் ஐந்தும் ஒத்திருந்தமைதான். இது தெய்வ அம்சம்.

> முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்
> னும்
> தத்திப்பதித்துத் தலைப்பெய்தாற்போல்
> எங்கும்
> பத்து விரலும் மணிவண்ணன் பாதங்
> கள்

ஒத்திட்டிருந்தவா காணீரே; ஒண்ணுதலீர்வந்து காணீரே. என்பது பெரியாழ்வார் சித்திரம்.

மேலும், இத்தகைய தெய்வ அம்சங்களை கண்ணனது திருமேனி யழகைக் கண்டுகளிக்கும் போது பாதாதிகேசமாகக் காணுகின்றார் பட்டர். இவ்வாறே திருப்பாணாழ்வாரும் தமது 'அமலனாதிபிரான் என்று தொடங்கும் பத்துப்பாடல்களில் வடித்துள்ளார். பாதந்தொடங்கித் திருமுடிவரை காண்பது தெய்வத்துக்குரியது. சிரசு தொடங்கிப் பாதங்கள் முடியக்காண்பது

*With the Best Compliments*

*from*

# ANANTHA STORES

**GENERAL MERCHANTS & COMMISSION AGENTS**

132, Dam Street,
**COLOMBO 12.**

*Telephone:* **2 6 8 5 6**

மனிதர்க்குரியது. இத்தகைய ஒருமைப் பாட்டை நாம் சைவத்திருமுறைகளிலும் காணலாம். பெரிய புராணத்தில் சம்பந்தர் திருமணத்தில் அவருக்கு அலங்காரஞ் செய்யும்போது அந்தணர்கள் பாதாதி கேசமாக அழகு செய்வதைக் காட்டுகின்றார் சேக்கிழார். இதுபோலவே திருவிசைப்பா வழங்கியதிருவாலியமுதனாரும் அம்பலக்கூத்தனைப் பாடும் போது பாதாதிகேசம் பாடுகின்றார்.

பாதாதிகேசமன்றிக் கண்ணன் கருவிருந்த காலத்திலும் தெய்வப்பண்பைப் பேரியாழ்வார் காட்டுகின்றார். மனித இயல்புக்கு மாதங்கள் பத்து. ஆனால் தெய்வ நிலைக்கு மாதங்கள் பன்னிரண்டு என்கிறார் பட்டர் பிரான். ''பன்னிருதிங்கள் வயிற்றில் கொண்ட அப்பாங்கினால் என் னி ள ங் கொங்கை அமுதூட்டி எடுத்தியான்'' என்று யசோதை கூற்றில் தருகின்றார் அவர். இக்கருத்திலேயே கம்பநாட்டாரும் கோசலைப் பிராட்டியார் தமது மணிவயிற்றில் இராமனைப் பன்னிருதிங்கள் சுமந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு கண்ணனது அவதாரச்சிறப்புக்களை மனித இயல்பிலும் தெய்வநிலையிலும் கூறவந்த பெரியாழ்வார் கண்ணனைத் தாலாட்டுவது அம்புலிகாட்டுவது. செங்கீரைப்பருவத்தவழ் நடைகாண்பது. சப்பாணி கொட்டவேண்டுவது. அணைத்து அகமகிழ அழைப்பது; தன் முதுகைக்கட்டிக் கொள்ளும்படி கண்ணனைவேண்டுவது; கண்ணன் மூச்சிகாட்டும் அழகைக்கண்டு இன்புறுவது; காதுகுத்திக் குழையணியக் கூப்பிடுவது, குழல்வாரக் காக்கையை அழைப்பது; திருட்டி தோஷம் போக்கத் திருவந்திக் கூப்பிடுவது என்றெல்லாம் வாத்ஸல்ய பக்தியை ஆங்காங்கே மலரவைக்கின்றார். இத்தகையவாத்ஸல்ய பக்தியில் ஆழ்வார்பிறரும் நிற்பதைக் காணமுடிகின்றது. இதுவரை கூறியவை தாய்க்குரிய வாத்ஸல்யப்பகுதிகள் இதுபோலவே தந்தையின் வாத்ஸல்யப்பகுதிகளையும் காட்டுகின்றார் குலசேகரப் பெருமாள். அவர், தனயன் கான்புக அதுகேட்டுப் புலம்பிய தசரதனாகநைந்துருகுகின்றார் தமது ஒன்பதாந் திருமொழியில். இத்தகைய வாத்ஸல்யத்தையே பாரதியார் கண்ணம்மா என் குழந்தை' எனவரைந்துள்ளார்.

இவற்றை விடச் சிறந்த பக்தியாகக் கீதையில் குறிக்கப்பட்டது மதுரபக்தி, இது பக்தன் தன்னைக் காதலியாகவும் இறைவனைக் காதலனாகவும் பாவிப்பது. இந்தப் பக்தி நிலையை ஆழ்வார் பாசுரங்களில் தலைவி கூற்று, தோழியர்கூற்று, செவிலியர்கூற்று, நற்றாயிரங்கல் தூது என்னும் பகுதிகளில் பரக்கக் காணலாம். ஆனால் இத்தகையஅகத்துறைப்பகுதிகளில் ஒரு துறை சிறிது மாறுபட்டு நிற்கின்றது. அது மடலேறுதல் ஆகும். தலைவியைக் கூடும் வாய்ப்பினை இழக்கும் போது தலைவன் மடலேறித்தம் உயிர்போக்குவது சங்கத் தமிழர் வழக்கு ஆனால், ஆழ்வார் பாடல்களில் தலைவனை அடையும் பேறு தமக்குக் கிடைக்கமாட்டாதென்பதை அறிந்த தலைவி மடலேறுவது புதியன புகுதலாகும் இப்புதுவழக்கைப் புகுத்தியிருக்கின்றார் பெரிய திருமடல், சிறிய திருமடல் என்னும் பகுதிகளில் திருமங்கையாழ்வார்.

— பெருந்தெருவே

ஊரார் இகழிலும் ஊரா தொழியேன்
நான்.
வாரார்பூம் பெண்ணைமடல். என்பது
அவர்வாக்கு.

இவர்போலவே நம்மாழ்வாரும் ''கோணைகள் செய்து குதிரியாய் மடலூர்துமே'' என்கிறார். திருவிடைக்கழிமுருகனுக்குத் திருவிசைப்பா சமர்ப்பித்த சேந்தனாரும் பெண்பாலுக்கு மடலேறும் வழக்கைப் புகுத்தியமையை ஒன்பதாந்திருமுறை காட்டுகின்றது.

மேற்கூறிய பக்திநிலைகளிலும் சிறந்து விளங்கும் பக்தி ஒன்றுக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லப்படுவது, ஒருபெண் சோரபுருஷனுடன் கூடி அனுபவிக்கும் இன்பநிலை. மதுர பக்தி, தலைவன் தலைவி கூட்டத்தைக் குறிப்பது அது உலகவழக்குடையது. தடையற்றது. ஆனால் பிந்திய கூட்டம் தடையுள்ளது நெறிதப்பியது ஆயிற்றே என்றும் நாம் எண்ணக்கூடும் இங்கே தடையும் நெறிதப்பியதும் பிரதானமல்ல. அதன் வெறியையும் வேகத்தையும் உவமை காட்டுவதே வடநூலார் குறிக்கோளாகும். தடை அதிகமாக ஆசையின் வேகம் மிக்குத்தோன்றுவது மனிதவியல்பு ஸ்ரீபாகவதத்தில் வரும் பகுதியொன்று இதற்கு உதாரணமாகும் பிருந்தாவனத்தில் கோபியர்கள் கண்ணனது வேய்ங்குழல் ஓசைகேட்டு அதில் மயங்கித் தத்தம்

*With Best Compliments*

*from*

**GENERAL SUPERINTENDANCE CO. LTD.,**

P. O. Box 161,

36, D. R. Wijewardane Mawathe,

Colombo 10.

வீட்டுக் கருமங்களையும் கைவிட்டு ஊருக்கு வெளியில் புதர் மறைவுகளில் கண்ணனைக் கூடினார்கள் என்பது பாகவதப்பகுதி. இத்தகைய பக்தி நிலையை நாம் ஆழ்வார் பாசுரப்பகுதிகளில் அதிகம் காண முடியாது விடினும் பெரியாழ்வார் பாடிய 'காலிப்பின் வரும் கண்ணனைக்கண்டு கன்னியர் காமுறுதல்' என்னும் பகுதியும் குலசேகரப் பெருமாள் வரைந்த ஆய்ச்சியர் ஊடி அமலனை எள்கியுரைத்தல் என்னும் பகுதியும் ஓரளவு புலப்படுத்துகின்றன. இதனை ஒத்தபக்திக்கு நைமிசாரணியத்து முனிவரது மனைவியர் சிவபிரானது பிட்சாடணத் திருக்கோலம் கண்டு அவர் பின்சென்றதையும், இறைவன் திருவுலாப்பிரபந்தங்களில் வரும் எழுவகைப் பருவமகளிர் நிலையையும் ஒப்பிடலாம்.

கேசவன் பக்தியில் மூழ்கிய ஆழ்வார்கள் அவன் அடியார்களையும் பாடிப்பரவத் தவறவில்லை. பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர் மதுரக வியாழ்வார் அவரே திருவாய் மொழி பாடிய நம்மாழ்வாரைப் பதினொருபாட்டுக்களால் அர்ச்சிக்கின்றார். இது சைவத் திருமுறைகளில் திருத்தொண்டத் தொகை பாடிய சுந்தரரையும் நம்பியாண்டார் நம்பியையும் நினைவு செய்கிறது. அடியார்க்கும் அடியேன் என்பது சுந்தரரது திருமந்திரம்.

இவையன்றி ஆழ்வார் பக்தி நெறியில் காணப்படும் மற்றொரு பண்பு நைச்சியானுசந்தானப் பகுதிகள். நைச்சியம் என்பது பழி பாவங்களாகிய நீசத்தன்மை.அனுசந்தானம் என்பது இடையறாது கூறுதல். எனவே, அடியவர் ஒருவர் தமது குறை குற்றங்களையோ தாழ்வுகளையோ பரம் பொருளிடத்தில் இடையறாது கூறித்தம் பிழைபொறுக்குமாறு வேண்டுதலே நைச்சியானுசந்தானம். கற்றுவல்ல முதன் மந்திரியாகக் கடமை புரிந்த வாதவூரரே தம்மை 'கல்லா மனத்துக்கடைப்பட்ட நாயேன் என்பர். குணம் பொல்லேன் குலம் பொல்லேன் என்பர் அப்பர். எனவே, நைச்சியானுசந்தானம் என்பது உலகத்தவர் நிலையில் தம்மை வைத்து ஆண்டவரிடம் முறையீடு செய்தல் எனப் பொருள் விளக்கம் செய்வார்கள் பெரியவர்கள், இத்தகைய நைச்சியம் நவிலும் பகுதிகளைப் பெரியாழ்வார், திருமங்கை யாழ்வார் பாடல்கள் மலரவைக்கின்றன.

மேலும் இராகவன் புகழ் பாடவந்த ஆழ்வார்கள் இராம-இராவண யுத்தத்தில் தோல்வியுற்ற அரக்கர் நிலையில் தாமேநின்று சக்கரவர்த்தித் திருமகனை வாயாரப் புகழ்ந்து பாடித்'தம்பக்திப் பிரவாகத்தை பாய விடுகின்றார்கள். தோற்றவர்கள் வென்றோர் புகழ்பாடியாடும் வழக்கு அக்காலத்தில் இருந்தமையும் அதற்குப் பயன்பட்ட கூத்துக்களையும் ஆழ்வார்கள், பாடற்பகுதிகளில் இணைத்துள்ளனர். அக்கூத்துக்கள் இரண்டு அவற்றுள் ஒன்று குழ மணிதூரம்; மற்றொன்று 'பொங்கத்தம் பொங்கோ' என்னும் ஒலிக்குறிப்புடையது. குழமணிதூரம் என்பது குணலைக்கூத்துப்போல்வது. இக்கூத்துக்கள் தாள அறுதியுடன் பறையடிக்கும் போது தோற்றவர்கள் வென்றோர் புகழ் பாடியாடுவன. இங்கே தோற்றவர்கள் அரக்கர்கள்.

இவ்வாறு இராகவன் புகழை இராட்சதர் கூறுவதுபோலவே நாட்டார் வாய்களிலும் திருமால் புகழை ஒலிக்கச் செய்துள்ளனர் ஆழ்வார்கள் அத்தகைய நாட்டார் பாடல்களே நாலாயிர திவ்விய பிரபந்தங்களில் காணப்படும் உந்தி பறத்தல், சாழல் பகுதிகள்! இவை சைவத்திருமுறைகளில் திருவாசகப் பகுதியில் வரும் நாட்டார் பாடல்களை நினைவூட்டுகின்றன. இந்த வகையாகத் பக்தியின் பலவடிவங்களில் பரந்தாமனின் திருக்கோலத்தையும் அவனது தெய்வப் பண்புகளையும் தாமே அனுபவித்தது மட்டுமன்றி நம்மையும் அனுபவிக்க வைத்தவர்கள் ஆழ்வார்கள். அவர்கள் நம்மையும் வைகுந்தபதவிக்கு அழைத்துச் செல்வதால் ஆன்மயாத்திரைத்தலைவர்கள் ஆகின்றனர்.

*With Best Compliments*

*from*

***M. H. M. Rasheed***

UKUWELLA.

# வேதத்தில் விஷ்ணு மூர்த்தி வழிபாடு

## சிவஞான வாரிதி திரு. கு. குருசாமி அவர்கள்

உலக இலக்கியங்களுள் மிகமிகப்பழமை யானதென்று இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் இருக்கு வேதத்தை ஏற்றுக்கொள்கின்றனர். இருக்கு வேதகாலம் கிட்டத்தட்ட 5,000 ஆண்டுகட்கு முற்பட்டதென்றும் தொல்காப்பியகாலமும், இருக்குவேதகாலமும் ஒன்றாயிருக்கலாம் என்றும், ஆரியர் திராவிடர் கலப்பு ஏற்பட்ட காலத்திலே திராவிடர் ஆரியரிடமிருந்து விஷ்ணுவழிபாட்டைக் கடனாகப் பெற்றுக்கொண்டனர் என்றும் சரித்திர ஆராய்ச்சியாளர் பலவகையாகக் கூறுவதில் மகிழ்வடைகின்றனர்.

சமயவழிப்புகுந்து ஆராயமுற்படும் போது, உலகம் தோன்றியகாலத்து, அதாவது கண்ணுக்குப் புலனாகும் வரையிலே உலகம் உற்பத்தியானபோது, முதலில் நீர் தோன்றியதென்றும், அந்த நீர் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தவன் "கரன்" என்றும், அந்த கரனே உலக முதல்வன் என்றும், அந்த கரனிடமிருந்து தோற்றிய நீர் நாரா என அழைக்கப்பெறுவதாயிற்று என்றும், நாரா என்னும் நீரிலே பிரயாணம் செய்தவன் நாரா+அயனன் - நாராயணன் என்றும், அந்த நாராயணன் என்னும் பெயரை உடையவனே உலகத்தைக் காக்குக் தொழிலை மேற்கொண்டு சர்வ லோக வியாபகராயிருப்பதனால் விஷ்ணு என்னும் பெயரை உடையவராக விளங்குகின்றார் என்றும், உலகு நிலைபெறுவதற்குச் செல்வம் இன்றியமையாதது எனவே, உலகை நிலைபெறச் செய்யும் நாராயண மூர்த்திக்குச் சக்தியாக விளங்குபவள் செல்வம் யாவற்றுக்கும் அதிதேவதையாகிய இலக்குமிதேவி என்றும் விதந்தோதப் பெறுகிறது.

இருக்கு வேதத்தில் மகாவிஷ்ணு மூர்த்தியைப்பற்றி 6 பாடல்களே எமக்குக் கிடைக்கின்றன. ஏனையவை வியாசபகவானால் தொகுக்கப் பெறாது மறைந்தொழிந்தது என வேதநூல் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

> "ஈரடியாலே மூவுலகளந்து
> நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
> போற்றிசெய் கதிர் முடித்திரு
> நெடுமால்"

என்று திருவாசகத்திலே மணிவாசகப் பெருமான் குறிப்பிடுகின்ற நெடுமால் பற்றிய குறிப்பு இருக்கு வேதத்திற் காணப்படுகிறது. (R.1.154(i) விஷ்ணோர்னுகம்வீர் யாணி பிரவோசம்

> யஹ பார்த்திவானி விமமே ராஜாம்ரி//
> யோ அகமாயதுத்தரம் ஸதஸ்தம்

விசகரமாணவிற் த்ரைதோருகாயஹ// "விஷ்ணு" என்னும் தலையங்கத்தின் கீழுள்ள முதலாவது ஸ்லோகத்திலே தேவ லோகத்தைக் காக்கும் பொருட்டு விஸ்வ ரூபம் எடுத்து மூன்று அடியினாலே உலகம் முழுவதையும் அளந்த வலிமைமிக்க விஷ்ணு மூர்த்தியின் பெருமைகளை நான் இப்பொழுது கூறத் தொடங்குகிறேன் என்பதனாலே காக்கும் தெய்வமாகவே மகா விஷ்ணுமூர்த்தி கருதப்பெற்றதும், வாமனாவதாரச் சிறப்பும், மகாவலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டுப் பெற்றுக் கொண்டதும். ஓர் அடியினாலே பூமி முழுவதையும், மற்றும் ஓர் அடியினாலே தேவ லோகத்தையும் வானுலகத்தையும் அளந்து, மூன்றாவது அடியை மகாவலிச் சக்கரவர்த்தியின் சிரசிலேவைத்துப் பாதாளலோகத்திற்கனுப்பிய வரலாறு முழுவதையும் நனைவிற்குக் கொணருமாறு அமைந்திருப்பது படித்துச்சுவைத்தின்புறுதற்குகந்ததாம்.

(1.154.4) நான்காவது துதிப்பாடலிலே, "குறைவின்றி என்றும் பேரின்பத் தேன் சொரியும் பாதங்களையுடையவர். அவருடைய மதியூகத்தினால் மட்டிலுமே பூவுலகத்தையும், சுவர்க்க லோகத்தையும், ஏனைய உயிர் வர்க்கத்தையும் பாதுகாக்க முடிந்தது" என்று குறிப்பிடுவதனாலே நிச்

With Best Wishes

from

# NADARAJAH & CO.

*GENERAL MERCHANTS & COMMISSION AGENTS*
*LICENSED DEALERS IN RUBBER AND*
*OTHER CEYLON PRODUCE*

196, Old Moor Street,
COLOMBO 12. Telephone: 36084

சயமாக, உலகத்தைக் காக்கும் தெய்வமாக விஷ்ணு போற்றப்பட்ட உண்மை தெளிவு படுத்தப்பெற்றது. அந்த விஷ்ணு பதத்தை அடைவதே தனது நோக்கம் என்று இருக்கு வேதத்திலே துதிக்கப்பெறுவதனுலும், "யத்ர தேவயவோ மதந்தி" என்று குறிப்பிட்டிருப்பதனுல், விஷ்ணுவுக்குப் பிரிய மானவர்கள் என்றும் நித்திய கல்யாண குணசீலராகப் பேரின்பப் பெருவாழ்விலே திளைக்கிருர்கள் என்றும், "விஷ்ணோஹே பதே மரமே மத்வ உத்ஸஹ" என்றும் துதிக்கப்பெறுவதனுலே விஷ்ணுவினது பாதாரவிந்தங்களிலே என்றும் ஆனந்தத் தேன் சொரிந்துகொண்டிருக்கும் எனவும் வேதத்தில் விதந்தோதப் பெறுகிறது (1.154.6) இருக்குவேதத்தின் முதலாவது காண்டத்தின் 154 பாகையின் 6 ஆவது ஸ்லோகத்திலே "பரமம் பதம் அவபாதி பூரி" எனக் குறிப்பிடப்பெற்றிருக்கிறது. எல்லோராலும் துதிக்கப்பெறும் பெருமை யுடைய மேலான கருணையுடன் உயிரினத் தைக் காக்கும் பாதாரவிந்தங்களையுடைய விஷ்ணுமூர்த்தியானவர் பிரகாசமான பார் வையைக் கீழே செலுத்தியவாறு வீற்றிருக் கின்ருர் என்று துதிக்கும்பொழுது, தேவ லோகத்திலே ஒளிபொருந்திய தனது பாதங் களுடன் கூடி விளங்குபவராகிய விஷ்ணு மூர்த்தி பூலோகத்திலுள்ள மனிதர்களைக் காக்கும் பொருட்டுக் கீழேயும் தனது கருணைக் கண்பார்வையினைச் செலுத்திக் காத்தருளத் தயாராக இருக்கும் பான்மை யினை விளங்கவைத்தமை உய்த்துணரற் பாலது:

'உறுகாயமாணஹ'' என்னும் பதத் திற்குக் கருத்துக் கூறும்போது, ''காய்' என்னும் வடமொழிச் சொல்லுக்குப் "பாடுதல்" "துதித்தல்" என்னும் கருத் துக்கள் அமைந்திருப்பதனுல், சாயனுச்சாரி யாரது விளக்கத்தின்படி உலக மக்கள் அனைவரும் தம்மைக் காத்தருளுமாறு கம லக் கண்ணனைக் கரங்குவித்து வேண்டுதல் செய்யும் கருத்தும் உள்ளடக்கியிருப்பது நோக்கத்தக்கது.

"உறுக்கிரமஹ" என்னும் பதத்திற்கு நீண்ட பாதங்களை உடையவர் என்ற பொருள் விரித்துரைக்கப்பெறுகிறது. (1.154 5) பரந்த அடியை உடையவன் என்னும் கருத்தும் உரைக்கப்பெறுவதைக் காண்க.

மகாவிஷ்ணு மூர்த்தி எல்லோராலும் தினந்தோறும் துதிக்கப்படும்போது, தீமை யைச் சாய்த்து நன்மையைச் சுரந்தளிப் பவனுகவும் பிரார்த்திக்கப்பெறுகிருன். இதே தொடர்பிலேயே வேதங்களிலே அசு ரர்களைக் கொன்று தேவர்களைக் காக்கும் பணியில் முன்னணியில் இருப்பவனுக இந் திரன் வணங்கப்பட்டான். அகலிகையுடன் இந்திரனது கதை பின்னிப்பிணைந்தபோது இந்திரன் தனது தலைமைப்பீடத்தை இழந் தான். விஷ்ணு அந்த இடத்தில் போற்றப் படும் நிலைக்கு உயர்த்தப்பெற்று அசுரர் களை அழித்து, தீய குணங்களை மாற்றி நல்லவர்களையும் நற்குண நற்செய்கைகளை யுமே உலகிலே பரவுவதற்கு உதவிசெய் பவராக வழிபாடு செய்ய மகாவிஷ்ணு மூர்த்தி துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்பவராக விளங்குகிருர். இத்தொடர் பிலேயே விஷ்ணுமூர்த்திக்குப் பத்து ஆதா ரங்கள் கற்பிக்கப்படுகின்றன. இந்தப் பத்து ஆதாரங்களிலும், மிகவும் அல்லற்படும் அன்பர்கள் வேண்டுதல் செய்து துதிக்கும் போது அவர்களது இன்னல்களை நீக்கிக் காத்தருள் புரியும் பொருட்டு நான் தோன்று வேன் என மகாவிஷ்ணுமூர்த்தி அருளியதாக கிருஷ்ணவதாரத்திலே கூறப்படுகிறது.

மகாவிஷ்ணுமூர்த்தி நெடுமாலாக, திருமாலாக, நாராயணனுக, நரசிம்மனுக, ஆன்மாக்களுக்கு அருள்புரிவதற்கென்றே காத்திருக்கின்ருன். நாமும் அவனது பாதார விந்தங்களை வணங்கி அதிலிருந்து துளிக் கும் பேரானந்தப் பேருவியில் மூழ்கித் திளைக்கும் அருமையான வாய்ப்பு ஒன்று திருமால் திருவருளினுலே கிடைத்திருக் கிறது.

வேதகாலம் முதல் இன்றுவரை காக் கும் தெய்வமாக வழிபடும் விஷ்ணுமூர்த்தி யைச் சிறப்பித்துக் கூறும் பாகவதம், விஷ்ணுபுராணம், மகாபாரதம் போன்ற இதிகாச புராணங்களைத்தவிர, விஷ்ணு சகஸ்ரநாமம், முகலாய துதிநூல்கள் பல வும் விஷ்ணுவழிபாட்டிற்கு உகந்தனவா யிருக்கின்றன.

With Best Compliments

from

**Ceylon Export Syndicate**

7/1, Hunupitiya Road,
**COLOMBO 2.**

*Telephone:* **23246**

ஆரியர்களது சிறப்பு நூலாகிய வேதம் எழுதாமறை என்று விதந்தோதப்பெறும். பல முனிவர்கள் குருசிஷ்ய பாரம்பரியத்திலே ஓதப்பெற்ற பெருமையுடைய வேதத்திற்கு "சுருதி" என்றொரு சிறப்புப் பெயரும் உண்டு. "சுரு" கேட்டல் என்னும் பொருளைத் தரும். எனவே சுருதி என்பதற்குக் கேட்கப்பெற்றது எனவும், இறைவனாலே அருளிச் செய்யப்பெற்று முனிவர்களினாலே கேட்கப்பெற்று வேத வியாசரினாலே தொகுக்கப்பெற்ற தொன்மையுடைய வேதங்களினுடைய காலம் வேத வியாசருடைய காலம் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். மகாபாரதத்திலே காணப்பெறும் உள்ளீடு உவமங்களை ஆதாரமாகக் கொண்டு நோக்கும்போது, கலியுகம் பிறப்பதற்கு முன் நிகழ்ந்தது மகாபாரதப் போர் என்பது நிரூபணமாகிறது. ஆகவே கலியுகம் பிறந்தது கி. மு 3101. கிருஷ்ணாவதாரம் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது தெளிவு. எனவே, வேதங்களின் தொடக்க காலம் இதுவரை திட்டவட்டமாக யாராலும் கூறப்படாமையாலும், வேதங்களை மண்டலங்களாகவும், சம்ஹிதைகளாகவும் தொகுக்கப்பெற்ற காலம் 5,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்றும் ஆதாரபூர்வமாக ஒப்புக்கொள்ளக்கூடிய இலக்கியச் சான்றுகள் இருப்பதனாலும், விஷ்ணுவழிபாடு இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்று நாம் அறியக்கூடியதாயிருக்கிறது.

மேலும், சிந்துநதி நாகரீக காலத்து வழக்கிலிருந்த திராவிடரது பேச்சு மொழி தமிழ் என்று ரஷ்ய விஞ்ஞான ஆராய்ச்சியாளர் உறுதியாக அறுதியிட்டுக் கூறுகின்றனர். தமிழ் மக்களது பழம் பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலே பொருளதிகாரம் நானிலத்தை நால்வகை நிலமாகப் பகுத்து "மாயோன் மேய காடுறையுலகும்" எனக் குறிப்பிடுவதனாலே காடும் காடு சார்ந்த இடமுமாகிய முல்லை நிலத்திற்கு அதிதேவதையாகத் திருமாலை, மாயக் கண்ணனை, மயக்கும் செல்வனை வழிபாடியற்றிய பெருமையினைப் பேசுகின்றது. இதிலிருந்து ஆரியர்களது வழிபடு கடவுளாக மட்டுமின்றி, திராவிடத் தமிழ் மக்களது வழிபடு கடவுளாகவும் திருமால் விளங்கினார் என்பது பெறப்பட்டது. உலகந் தோன்றுதற்கு ஆதிகாரணனாயிருந்த முழுமுதற் கடவுளே பலவேறு நாமரூபங்களிலும் அதிட்டித்து நின்று பஞ்சகிருத்தியங்களையும் செய்து ஆன்மாக்களுக்கு மெய்நெறி காட்டி ஆட்கொண்டருள் புரிகிறான் என்று சைவசித்தாந்தம் பேசுகிறது. அவ்விதம் பஞ்சகிருத்தியம் செய்யும்போது பிரமனாக இருந்து படைத்தலையும், விஷ்ணுவாக இருந்து காத்தலையும், உருத்திரனாக இருந்து அழித்தலையும், மகேஸ்வரனாக இருந்து மறைத்தலையும், சதாசிவனாக இருந்து அருளலையும் செய்து ஆன்மாக்களை உய்திபெறச் செய்கிறான் என்னும் கருத்தினை வேதமந்திரம் மிக அழகாக விளங்கப்படுத்துகிறது. ஏகம் வைத் விப்ரா பகுதா வதந்தி அக்னிர்யமோ மாதரீஸ்வனம் ஆஹுஹு உண்மைப் பொருள் ஒன்றே அதை உணர்ந்தவர்கள் தமது அநுபவத்திற்கும் பக்குவ நிலைக்கும் ஏற்பப் பல பெயர்களை இட்டு அழைத்தனர். "அக்கினி" என்றும், "யமன்" என்றும், "மநத" என்றும் வழிபட்டனர்.

யார் யார் எந்த எந்தப் பெயரிட்டு அழைத்தாலும், மனத்தூய்மையுடனும் உள்ளன்புடனும் வழிபாடு செய்தால், வழிபட்ட பலாபலனை நிச்சயமாக அடையலாம் என்பதே உண்மை.

வேதகாலத்திலும், அதற்குப் பிற்பட்ட காலத்திலும் காத்தற்கடவுளாகக் கமலக் கண்ணன் விளங்கினான் என்பதனை எவரும் சந்தேகத்திற்கிடமின்றி ஒப்புக்கொள்வர் இந்த உண்மையை எடுத்துக்காட்டுதற்கு அநேக புராணக் கதைகள் இடம் பெற்றுள்ளன. கல்மழை பொழிந்தகாலத்து, கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து ஆனிரை காத்துக் கோபாலனும், ஜலப் பிரளயத்து பூமி நீருள் மூழ்கிய காலத்து, வராக அவதாரம் எடுத்துப் பூமியை முன்னுள்ள நிலைக்குக் கொண்டுவந்த வராக மூர்த்தியாகவும், உலக உபகாரமாகப் பல அவதாரங்களையும் எடுத்ததன் நோக்கம் உலகத்தைக் காக்கும் பொருட்டே என்று நாம் நன்கு அறிவோம்.

கலியுகத்தில் உள்ள மக்களுக்கு வேண்டிய இராஜதந்திர முறைகளைக் கற்பித்து மக்களினத்தை நன்னிலைப்படுத்துவதற்கு கிருஷ்ணாவதாரம் எடுத்தார். மகாபாரதத்

*With Best Compliments*

*from*

# FAREED BROTHERS

UKUWELLA.

*Telephone: 01 - 895 Matale*

தின் கதாநாயகனுக விளங்கும் கிருஷ்ண பரமாத்மா கௌரவர்களை அழித்துப் பாண்டவர்களை வாழவைத்த கதையை அறியாதார் யார்?

வேதகாலம் முதல் இன்றுவரை வழிபடு தெய்வமாக மகாவிஷ்ணு மூர்த்தி விளங்குகின்ருர். எம்மைக் காத்து எமக்கின்னருள் புரியும் மூர்த்தியாக விளங்கும் நெடுமாலை வணங்கி உய்தி பெற்ருேர் அநேகர். அந்தவகையிலே ஆயர்பாடியில் யசோதை செய்த தவம் பெரிதாகவே மதித்து எண்ணப்பெறுகிறது. உலகளந்த பெருமானைத் தனது மடியிலும் தோளிலும் சீராட்டித் தாலாட்டிப் பாலூட்டி வளர்த்த பெருமையுடையவள் யசோதை. மனிதர்களுள் மனிதனுகவே அவதாரம் எடுத்து வந்து மனிதரது இன்னல் தீர்க்கும் பெருமாள் நல்ல பெருமாள். பூதேவி ஸ்ரீதேவி சமேதராக வீற்றிருந்து மக்களது வறுமைப் பிணி நீக்கும் மாமருந்து. பாற்கடலே சயன அறை. நஞ்சுமிடும் பாம்பே படுக்கை. திருமகள் இதயத்திருக்க நிலமகள் அருகிருக்க, ஆரும் அறியாவகையில் அறிதுயில் கொள்ளும் மாயனை எங்கே நினைப்பினும் அங்கேவந்து அபயம் தந்து ஆதரிப்பவன். அறிமின் தொழுமின் அரங்கநாதன் பதம். விழுமின் பணிமின் தெகிவளை ஸ்ரீ வெங்கடாசலபதி தலம்.

ஆரணமுங் காணு வருமறையி னுட்பொருளைத்<br>
தேரரிய தெய்வத் திருவுருவார்—காரணனை<br>
நாடித் தெகிவளையில் நண்ணி யருள் பெறுவீர்<br>
பாடிப் பரவிப் பணிந்து.

*With Best Compliments*

*from*

★

★

★

**THARTPARA TRADERS**

*GENERAL MERCHANTS & COMMISSION AGENTS*

103, Old Moor Street,<br>
COLOMBO 12.

Telephone: **36171**

With the Best Compliments

from

*
*
*
*
*
*
*
*
*
*
*
*

Menaka Copra Stores

341, Grand Pass Road,
Colombo 14.

Commission Agents for Ceylon Products

# *The Significance of Kumbhabhishekam*

Many deities and idols of many gods and goddesses are installed in a temple. Mahakumbhabhishekam is performed when the temple is consecrated. Afterwards, re-consecration (Jirnodharanakumbhabhishekam) has to be performed once every 12 years in order to retain the divine presence in the temple.

Kumbhabhishekam is an occasion to remind us of our swadharma and the imperative need to protect the dharmas expounded in the various religious works such as the Ramayana and the Mahabharata etc. On the Kumbhabhishekam day, we gather in great numbers at the temple to witness the great event. At the same time, we should also remind ourselves of the dharmas which we have to follow.

At the time of Kumbhabhishekam, sacred waters from the holy rivers and teerthas from all over the country are brought, kept in waterpots and worshipped in the yagashala (sacrificial room). Then these sacred water-pots are poured over the temple kealasas over the sanctum sanctorum and also the kealasas on the gopurams. These waters then trickle down on the deity through a silver wire. As a result of this abhisheka, the deity gets consecrated and becomes divinised.

As a result of the cooling of the Lord by the pouring down of the sacred waters on him, the hearts of the people are also cooled. The Lord whose mind is cooled will show us the way and make our minds also cool.

After the main Kumbhabhishekam ceremony. for about 45 days, Mandala-abhisheka is to be performed. The divinity of the deity is increased as a result of these abhishekas for 45 days after the Kumbhabhishekam. Thus the power of the deity to bestow His grace on the devotees and fulfil their wishes and desires also gets increased.

Let all people participate in the Mandala-abhisheka functions and help in the cooling down of the Lord so that their minds will also get cooled and they may also have their wishes fulfilled.

His Holiness **Jayendra Saraswathi Swamigal**
Kanchikamakodi
Peedathipathy

*With Best Compliments*

*from*

**Vijaya Trade Centre**

28, St. John's Road,

Colombo – 11.

# கடல் வண்ணன் பின்போன நெஞ்சங்கள்

**'சொக்கன்'**

'காரார் கடல் வண்ணன் பின்போன நெஞ்சமும் வாராதே என்னை மறந்தது'

என்று திருமங்கையாழ்வார் தவிக்கும் நிலையினை அவர்தம் 'சிறிய திருமடல்' எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. கார்நிறத்து மேனியனும் கண்ணபிரானை நினைந்து உருகித் தவிக்கும் நிலை அவருக்கு மட்டும் உரிய ஒன்றன்று. பல்லாயிரம் ஆண்டுகளாகப் பாரத மண்ணிலே தோன்றி வாழ்ந்து மறைந்த பரமபாகவதர் பலருக்கும் இந்த நிலைதான் ஏற்பட்டது.

'ஞாலம் முழுதும் நயந்தளந்த' நெடுமால் தன் அடியார்களுக்காக இதுவரை ஒன்பது அவதாரங்கள் எடுத்தருளினன். இவற்றுள்ளே அடியவர்களின் நெஞ்சங்களை மிகுதியும் ஈர்த்து மாலாக்கிய பெருமை ஸ்ரீகிருஷ்ணவதாரத்திற்கே உண்டு. பாலகனாய்க் குறும்புகள் செய்தும், இளைஞனாய் எழிலனாய்க் காதல் புரிந்தும், தன்னைச் சரணென அடைந்தோர்க்கு உறுதுணையாய் நின்று மாயங்கள் பல நிகழ்த்தியும், ஆசாரியனாய்க் கீதையருளியும் ஸ்ரீகிருஷ்ணன் நடத்தியருளிய திருவிளையாடல்களும் அநந்தம்! இவற்றையெல்லாம் நினைந்து நினைந்து உருகிப் பரவசநிலையிலே பாடிப் பரவிய பாகவதர்களின் தொகையும் அநந்தம்!

ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு யமுனாநதி தீரத்திலே கோபியர்கள் என்னும் அடியார் கூட்டம் கண்ணபிரானின் திவ்விய ஒளி வடிவிலே மயங்கிப் பித்தாகிக் கிடந்தது. அது, சர்வ சமர்ப்பணமாகிய பிரபத்தியில் ஆழ்ந்து தன்னை அவனோடு அத்துவிதமாகக் கலந்து விடுவதிலே பேரானந்தம் கண்டது. இந்தக் கோபியர்களின் பெருமை இவ்வளவு என்று கூறுதல் இயலாத காரியம்.

தமக்கென உரிய உலகபந் தங்கள்
　　தளையென அறுத்திடு திறலர்
இமைப்பொழு தேனும் கண்ணனின் நாமம்
　　இதயத்தில் மறந்திடார் என்னில்
நமக்கிவர் நிலையை அடைந்திடல் தகுமோ?
　　நான்பிறந் தாவன மண்ணில்
குமைத்தெழு பூண்டாய் மறுபிறப் பெய்தக்
　　குறித்துமே அவரடி பூண்பேன்.

கோபியர் வரிசையிலே வந்த கண்ணன் அடியார்களையும், அவர்களின் பத்திப் பாசுரங்களையும் அறிமுகம் செய்யும்முறையிலே பங்கி பிஹாரி (Bankey Behari) என்பார் 'கடவுட்பாவாணர்கள்' என்றோர் ஆங்கில நூல் (Minstrels of God) எழுதியுள்ளார். இந்நூல் இரண்டு பாகங்கள் கொண்டது. இதனைப் பவான் புத்தகப் பல்கலைக்கழகம் (Bavan's Book University) வெளியிட்டுள்ளது. இந்நூலிலிருந்து ஸ்ரீ கிருஷ்ண பக்தர்கள் சிலரின் வாக்குகளை தெரிந்தெடுத்துச் சுருக்கமாக வாசகருக்குத் தருவதே இக்கட்டுரையின் நோக்கம்

## 1. மீராபாய் (1547 - 1614)

கடவுட் பாவாணர்கள் வரிசையிலே முதலிடம் பெறுபவள் மீராபாய். இராஜபுதனத்திலே தோன்றியவள் இம்மாதரசி. தமிழ் நாட்டில் அவதரித்த 'சூடிக்கொடுத்த

With Best Compliments

from

★

a

Well

Wisher

சுடர்க்கொடியான ஸ்ரீ ஆண்டாளுக்கு நிகராக இவளைக் கொள்ளலாம் (இவளின் வாழ்வை யும் வாக்கையும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 'அன்பின் வெற்றி' என்ற தலையங் கத்தில் பாடியுள்ளார்.)

மீராபாய், சிறுமியாய் இருந்த காலத்திலே தாய் விளையாடக் கொடுத்த கண்ணன் பொம்மையிலே அவளுக்கு அன்பு உண்டாயிற்று. இந்த அன்பு வயது வளர வளரப் பத்திக் காதலாய் முதிர்ந்து கனியலாயிற்று. மீராபாயின் மனநிலையை அறியாத பெற் றோர் அவளை இராஜபுதனத்து இளவரசனான போஜனுக்கு மணமுடித்து வைத்தனர். ஆனால் கண்ணனைத் தவிர வேறெவரையும் மணவாளனாகக் கொள்ள இசையாமையால் மீராபாய்க்குப் பல சோதனைகள் ஏற்பட்டன. கணவனும் அவன் தாயும் மீராபாயின் உயிரையே போக்கமுற்பட்டனர். எனினும் கண்ணன் அருளால் அது கூடவில்லை.

இத்தகைய ஒரு சோதனைக் கட்டத்தில் மீராபாய் தன் மாமியை நோக்கிக் கூறு வனவாகப் பின்வரும் பாடல்கள் அமைந்துள்ளன.

மாமியே! என்னை ஞானியரோடு
மருவுதல் தவிர்த்திட வேண்டா
தேமலர் அளிகள் இரைத்திடு துளாய்த்தார்த்
தேவனின் வடிவமென் நெஞ்சில்
ஏமமாய் ஊன்றி ஆழவே ரோடி
இருந்திடப் பிச்சியாய்ப் போனேன்
ஆமிதே உண்மை ஆதலால் வசைகள்
ஆகுமோ? தவிர்த்திடு வீரே.

"உலகெலாந் துயிலின் அமைதியிற் கிடக்க
ஒருகண மாயினுந் தூங்கா
தலகைபோல் அலைந்தேன் அழுகிறாய்?" என்பீர்
அகிலத்தீர் அறிவிரோ உண்மை?
நிலவிடும் அன்பை நிமலனில் வைத்தல்
நீங்கிய மடையர்நீர் அன்றோ?
குலவிடும் இறையன் புடையவர் தூங்காக்
கொள்கையர் ஈதுநீர் அறிவீர்.

குளத்திடை மழைநீர் நிறைந்திருந் தாலும்
கோலமார் சாதகப் பறவை
விளைத்திடு தாகம் பொறுத்திடும் அன்றி
மேவியந் நீர் அருந் திடுமோ?
அளத்தலைக் கடந்த வான்மொழி மழையாம்
அமுதநீர்த் துளியதே அருந்தும்
இளைத்துயிர் வெறுத்திவ் வுலகினில் அலுத்தேன்
ஏழையை ஆண்டருள் ஐயா!

## 2. ஜைதியோ

"சமஸ்கிருத மொழி உள்ளவரை ஜைதியோ என்பாரின் (Jaideo) பெயர் நின்று நிலவும். பத்திப் பெருங்கோயிலில் அவரின் திருநாமம் எக்காலத்திலும் பொறிக்கப்பட்டி ருக்கும்" என்று ஜைதியோ பற்றிப் பிஹாரி கூறியுள்ளமை கருதத் தக்கது.

"இராதையே! நீலநிற யமுனாநதி தீரத்திலே ஸ்ரீகிருஷ்ணன் மீண்டும் ஒருமுறை உனக்காகக் காத்திருக்கிறான். நீ முதன்முதல் அவன் கன்னத்திலே முத்தமிட்டு மிக்குயர்ந்த காதல் எது என்று அவனுக்குக் கற்பித்தாயல்லவா? அந்தச் சுகானுபவத்தை மீண்டும்

With the Best Compliments

from

*
*
*
*
*
*
*
*
*
*
*
*

TRIDENT MARINE EXPORT LTD.

28, MOOR ROAD,

COLOMBO 6.

பெறவே அவன் காத்திருக்கிறான். உதட்டிலும் உள்ளத்திலும் உனது நாமத்தையே உச்சரித்த வண்ணம் இருக்கும் அவனை உனதருகில் இழுத்துக்கொள். உற்சாகமற்று வாடிக் கருகியிருக்கும் அவன் நெஞ்சிலே மணம் நிறை காதல் மீண்டும் மலர்ந்திட அருள்வாய்'' என்று ஜைதியோ பாடுவது தனது ஆன்மநாயகிக்கே கட்டளையிடுவது போலத் தோன்றுகின்றதல்லவா?

பல்லவி

தாமத மேன்ராதே — ஸ்ரீகிருஷ்ணன்
தாழ்த்திட மாட்டானே. (தாமத)

அநுபல்லவி

முன்னொரு கால் அவனின் கன்னத்தில் முத்தமிட்டுப்
பன்னருங் காதலுக்குப் பாடம் நீ சொன்ன பின்னும் (தாமத)

சரணம்

அந்தநற் பேரின்பம் ஆசைத்தீ யாய்மூள
இந்தக் கணம் உனக்காய் ஏங்கியமுனை வந்தான்
வெந்து கருகுமுள்ள வேதனை போக்கியன்பு
சிந்திடு மழையாகச் சேர்த்துமுத் தம்அளிப்பாய்
(தாமத)

## 3. பில்வ மங்கள் (1300—)

சிவபத்தராய் இருந்தவர்; சிந்தாமணி என்னும் தாசியின் நேசத்தால் தம்மை மறந்தவர்; அர்த்த யாமத்திலே அவளின் இல்லத்தை அடையப் பெருகிவரும் வெள்ளத்திலே பிணத்தைப் புணையாகக் கொண்டு நீந்திச் சென்றவர்; சுவரிலே தூங்கிய பாம்பைக் கொடி என்று நினைத்து அதைப்பற்றி ஏறிச் சுவரைக் கடந்து போனவர்; ஆசைக்கே அடிமையாய் வாழ்ந்தவர், பில்வமங்கள் (கி. பி. 1300). ஆயின் காலம் அடுத்தபொழுது கணிகையான சிந்தாமணியிடமே அறிவுரை பெற்றுச் சிறுமை நீங்கிக் கண்ணன் அடியவராய் மாறிவிட்ட இவர் தெக்கணத்தைச் சேர்ந்தவர்; ஸ்ரீ கிருஷ்ண கர்ணாமிர்தம் என்ற பாசுரத் தொகுதியை இயற்றியுள்ளார். ''எனது இதயத்தின் மாணிக்கமாக ஸ்ரீ கிருஷ்ணாமிர்தத்தைப் பூண்டுள்ளேன்'' என்று பரமபாகவதரான சைதன்ய மகாப்பிரபுவே கூறுவார் எனில், இவர்தம் பாடலின் மகிமைதான் எத்தகையது! உதாரணத்திற்கு மூன்று பாடல்கள் தருகின்றேன்.

வேதத் துள்ளே மாயவனை
　　வீணே தேடி அலைகின்றீர்
சீதக் களபக் கமலத்தான்
　　சேரும் இடம்நீர் அறியீரோ?
ஓதும் உபநிட தத்துள்ளும்
　　ஒளிர்வன் எங்கள் கண்ணபிரான்
காதற் கோபி மாருடனே
　　காசூழ் பிருந்தா வனத்துமுளான்

களங்க மற்ற தூயனவன்
　　கடம்ப மரத்து நீழலிலே
துளங்கும் பத்மா சனமிட்டுத்
　　தொல்லை வினைகள் போக்கவென

*With Best Compliments*

*from*

**PRABAA CHEMICAL TRADERS**

50 3/3, Third Floor,
Hendrick Building,
Reclamation Road,
Colombo 11.

Telephone: **25640**

**IMPORTERS - DEALERS IN YARN CHEMICALS DYES**

விளங்கும் கோலம் காணீரோ?
வேய்ங்குழல் கீதம் கேளீரோ?
வழங்கும் இன்னிசை ஏற்றிநிதம்
மாபே ரின்பம் மாந்திடுவீர்.

கண்ணா! நீமன் மதனேயோ?
கதிர்வாழ் இரவி ஆவாயோ?
எண்ணில் அளவில் பாற்கடலோ?
என்றன் விழிக்கோர் அமுதோநீ?
மண்ணில் பேச மொழிசுவாய்
மரகத மே! என் மனவரசே!
விண்ணும் காணா வியப்பிளமை
வீறும் வீரா! முன்னில்லே.

## 4. சூர்தாஸ் (1479 — 1584)

சூர்தாஸ் பிறவிக் குருடர். 'சூர்சாகர்' என்னும் நூல் இயற்றியவர். ஸ்ரீ வல்லபாச் சாரியார் என்ற வைணவ சித்தாந்த மகாஞானியின் சீடர். தமது பழவினைகளையும் பாவங் களையும் போக்கிடத்தமக்குக் கண்ணும் கண்ணின் மணியாகவும் கண்ணபிரானையே கொண்ட இவர், உளமுருகிப் பாடுந்திறம் எவர் உள்ளத்தையும் கசிவிக்கும்.

உன்னுடனே வாழ்கின்றேன் என்னவனே! உன்றன்
உளவிருப்பம் உள்ளவரை இவ்வுலகில் இருப்பேன்
என்னிதய வேதனைகள் நல்விழைவு யாவும்
ஏன்உரைக்க வேண்டுமவை யாவையும் நீ அறிவாய்.

அன்புகனிந் தருளான என்னிறையே கண்ணா!
அன்னமதைக் குவையாய் நீ அளித்தாலும் அன்றி
என்புருவாய் யான்மெலியப் பசித்திடவைத்தாலும்
எல்லாம்உன் திருவருளே ஏன்அதற்கு வருத்தம்?

ஒரொருகாற் குஞ்சரத்தில் ஏறியுலா வரினும்
ஒருகாலத் தொருவர்சுமை யான் சுமந்த போதும்
சீரிழிவு யான்கருதேன் யாவையுமுன் செயலே
செங்கமல மாயவ! யான் உன்றனுக்கே அடிமை.

சூர்தாஸாம் யான்உரைக்க ஒன்றுண்டு கேட்பாய்
சொல்லரிய நல்வரமாய் நீயடியார்க் குள்ளாய்
பேரரிய துளாய்மார்ப! யான்என்னை உன்றன்
பிறங்குமலர்ப் பாதத்தில் வைத்திடுவன் ஏற்பாய்.

## 5. நர்சிமேதா (1414 – 1481)

குஜராத்தி நாட்டைச் சேர்ந்த நர்சிமேதா ஸ்ரீ கிருஷ்ணன் போலவே வேடந்தரித்துக் கொண்டு கையிலே கர்த்தல் என்னும் வீணையைத் தாங்கி மாயவனின் பெருமையை மன மார வாக்காரப் பாடித்திரிந்த பரம பாகவதர்; குஜராத்தி நாட்டுப்பாடல் அமைப்பில் இவரின் பத்திப்பாடல்கள் அமைந்துள்ளன.

பத்தி யாலே பித்துப் பிடித்துப்
பரமன் நாம அமுதினை
உற்றுச் சுவைக்க எண்ணி டாமல்
உறங்குந் தொழும்ப! எழுந்திராய்.

*With the Best Compliments*

*from*

**Maritime Agencies Limited**

*P. O. Box 765,*
*Colombo.*

கிருஷ்ணன் நாமம் ஒன்றே யன்றிக்
கிளரும் யாவும் தூசென
ஒருவிக் கோகு லத்துளானை
உன்னி என்றனை இழந்தனன்

அவனின் அருளே அகிலமெங்கும்
அணைந்து பரவிக் கிடக்குமே
எவையும் அவனின் திறத்தி ஞலே
இகத்தில் சிறக்கும் அல்லவோ?

அன்னை தந்தை உறவு யாவும்
அவனே அல்லால் வேறில்லை
இன்னல் உலகில் இருந்து செல்ல
இவனே அன்றித் துணையில்

கண்ணன் பெயரும் கண்ணன் உருவும்
கணக்கில் வேறு வேறல்ல
எண்ணி 'நர்சி' கூறும் உண்மை
இதயத் திருத்தின் முத்தியே.

## 6. சண்டிதாஸ் (1417 – 1477)

'அழகே உண்மை, உண்மையே அழகு, என்பதை உணர்ந்து அழகனும் மெய்யனு மான ஸ்ரீகிருஷ்ணனை 'ரமி' என்ற பெண்ணுரமுதத்திற் கண்டு, அவளிலே பித்தாகி அவளையே ஸ்ரீகிருஷ்ணனுக உபாசித்துத் திரிந்த விநோத புருஷரே சண்டிதாஸ். இவர் வங்காள தேசத்தினர் இவரின் பாசுரமெங்கும் ரமியை அழைக்கின்ற பிரலாபமே கேட்ட வண்ணம் இருக்கும்.

கண்ணனது விளையாடல் கருத்தி ருத்திக்
காடுகளிற் பகலிரவாய் அலையும் உன்றன்
வண்ணமுகம் மறைந்ததனுல் துன்பங் கொண்டேன்
மாயுமொரு கணமெனக்கு யுகமாய்த் தோன்றும்
எண்ணமெலாம் நீயேயாய் இருக்கும் என்றன்
இதயத்தே பிரிவுதுளை இட்டுச் செல்ல
நண்ணரிய இடருற்றுப் புலம்பு கின்றேன்
நங்கையே! ரமி! என்னை நாடி வாராய்.

எனதிமையில் திரைவீழ்ந்து விழிமறைக்க
என் உயிரே! நீ மறைய வாதை யுற்ற(து)
இனைத்தெனவென் னுலியம்ப வியலா தென்போல்
இழியூழில் இருப்பவர்கள் எவரோ அம்ம!
அனைத்துளவுன் யாவுமே எனக்கென் னுக
அதற்கிணையாய் எனையளித்த பின்னர் நாங்கள்
இனிப்பிரித லியலாது ரமியே! இந்த
ஏழைகுரல் கேட்டுடனே ஓடிவாராய்.

*With Best Compliments*

*from*

**LANKA TRICOTTING INDUSTRIES LTD.**

Gaffor Building,
29 3/2 Main Street,
Colombo – 1.

Phone: 2 2 4 4 5 – 6

Gram: LATRICOT

## 7. வித்யாபதி (1400-1507)

இறைவனைப் பற்றிப் பிடிக்கும் மார்க்கங்களிலே உயர்ந்தது நாயக நாயகி பாவ மான சன்மார்க்கமே. பாடல்களில் உயர்ந்த ரசமாகக் கொள்ளத் தக்கது சிருங்காரமே. சிருங்காரத்தில் உயர்ந்த உணர்வு விரகதாபமே. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் அளித்த நல்லோர்களான ஆழ்வார்களில் ஸ்ரீ ஆண்டாள், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் முதலானோர் இத்தகைய பாசுரங்களைப் பாடுவதிலே தலைசிறந்து விளங்கினர்.

மைதிலி மொழிக் கவிஞரான வித்யாபதியும் 'விரகதாபம்' உற்றவராகவே விளங்கு கின்றார். கண்ணனைக் காணுமற் காதல் கைம்மிக்கு அவர் பாடுவன இவை:

நீலமணி வண்ணனை நான் நேருறவே காணுவிடில்
நிலத்தினில் வாழுவனோ— சகியே!
நீசஉயிர் போக்கிடுவேன்— சகியே!
நீசஉயிர் போக்கிடுவேன் (நீலமணி)

சொல்லுவதைக் கேட்டிடுவாய் ஜோதி உயிர் நீங்குகையில்
சொல்லென்றன் காதினிலே— மாயச்
சுந்தரனின் நாமத்தினைச்— சகியே!
சுந்தரனின் நாமத்தினை (நீலமணி)

செத்தபின்னர் என்னுடலைச் செந்நெருப்பி லேயிடாமல்
சீர்கடம்பிற் கட்டிடுவாய்— கண்ணன்
சியாமநிறம் அல்லவோடி— சகியே
சியாமநிறம் அல்ல வோடி (நீலமணி)

பூம்பொழிற்பி ருந்தாவனப் பொய்கையினை நாடியந்தப்
பேரழகன் வந்திடுவான்— என்றன்
பித்தமதைக் கண்டிடுவான்— சகியே!
பித்தமதைக் கண்டிடுவான் (நீலமணி)

அம்புயம்போற் பொங்குமெழில் ஆணழக னின்முகத்தில்
அன்புகொண்டு நான்பிழைப்பேன்— என்றும்
அண்ணலுக்கே நான் உரியேன்— சகியே!
அண்ணலுக்கே நான் உரியேன் (நீலமணி)

கெட்டவிதி காரணமாய்க் கேசவனைக் காணுவிடில்
கீழுற நான் தேய்ந்தொழிவேன்— பின்னும்
க்ருஷ்ண க்ருஷ்ண என்றிடுவேன்— சகியே
க்ருஷ்ண க்ருஷ்ண என்றிடுவேன் (நீலமணி)

## 8. துக்காராம் (1568-1650)

துக்காராம் ஒரு வன்றொண்டர். சுந்தரர்போல் ஈசனுக்குத் தம் வசையையே இசை யாக்கியவர்; மகாராஷ்டிரப் பத்திப் பாவாணர் வரிசையிலே தலைசிறந்து விளங்கும் இப் பெரியாரின் இளமைப் பருவம் பாராட்டத்தக்கதாய் இருக்கவில்லை. இவ்வகையில் இவர் ஒரு அருணகிரியார். இறைவனுகிய ஸ்ரீ கிருஷ்ணனின் அருள் கிட்டாத நிலையில் 'பரந்து கெடுக' என்று பழித்துப் பாடும் இவரின் வைராக்கிய நிலையைப் பின்வரும் பாடலால் நாம் நன்குணரலாம்.

*With Best Compliments*

*from*

# LINGAM TRADES

**IMPORTERS GENERAL MERCHANTS AND COMMISSION AGENTS**

*DEALERS IN: CEYLON PRODUCE AND CURRY STUFFS*

No. 224, Keyzer Street,
COLOMBO 11.

Telephone: **23406**

மயிற்சிற குலாவுமுடி மாதவனெ னைப் பொறுத்த
வரையிலே மாண்டு விட்டான்
மற்றவர்க் கப்பிரான் உயிருடைய ஞயினென்?
மாண்டதென் வரையி லுண்மை
பயிற்றிய அவன்மொழியி லேயழைத் திடினுமென்?
பரிந்தென்முன் வரவு மாட்டான்
"பாவிநீ" என்கிறீர் உண்மையே அவன்பெயர்
பகர்ந்ததென் பெரிய பாவம்!

இயற்றியிது நாள்வரையி லேசேர்த்த பாவங்கள்
இவையிலும் பெரிய சத்தி
இலாததோ யானறிய விழைகுவன் கண்ண! உன்
எழிலார்ந்த கமல பாதம்?
மயற்பெரிய கொடியராய் யாமிலாப் போழ்துநீ
மாபாவம் போக்கல் யார்க்கோ?
மாயவா! பாவியாம் என்பெயர்ப் பின்னரே
விமோசனன் வாழ்வை யன்றே!

இவ்வாறு காலங் கடந்து தேசங் கடந்து கண்ணபிரானின் கமலமார் பாதங்களை அருச்சித்த கவிவாணரின் புகழும் பெருமையும் எண்ணி மாளுமோ? எழுத்திற்குள் அடங்குமோ?

வாழி அன்னவர் மாபெரும் புகழ்!
கண்ணன் பதமே எண்ணுக மனமே!


அரி ஓம் நம நன்றாக

*With Best Compliments*

*from*

**அர்ஜுன் பகவன்தாஸ் அனுஷா இந்துமதி**

***Arajun Bagawandas Inthumathi***

*No. 39 - 36th Lane, Colombo 6.*

*With Best Compliments*

*from*

# A. K. GOLD HOUSE

*JEWELLERS & GEM MERCHANTS*

56 - 58, Sea Street, COLOMBO - 11.

*Telephone:* 28991 - 33712

ඒ. කේ. ගෝල්ඩ් හවුස්

ஏ. கே. கோல்ட் ஹவுஸ்

ARTICLES ARE ALL GUARANTEED AND GENUINE

# LORD VENKATESWARA MAHAVISHNU AT DEHIWALA TEMPLE

(V. N. SIVARASA, C. A. S.)

The deification of the Srinivasan and Patmawathi images chiselled as replicas and brought from Thirupathy is an event significant to the Vishnu temple at Dehiwela as well as to the country and to the whole humanity during this era which in Hindu cosmology is featured as the Kaliyuga.

To the temple concerned the installation, as 'Mula moorthy' in the sanctum sanctorum, of the image which is a perfectly featured Idol of worship in the Hindu tradition is in itself a landmark.

The Vishnu Image is generally shown in one of the three poses –

Sthanaka – the standing pose,
Asana – the sitting pose,
Sayana – the reclining pose

There are sub-categories for each of these main categories, The newly deified image, like the Lord's image at Thirupathi, is a Sthanaka or standing pose. Vishnu Images in the Sthanaka pose can be Yoga, Bhoga, Veera or abicharika murthis- with sub-types in each.

Examining the image at Thirupathi, PIDATALA SITAPATHI has stated as follows:

"The figure is syama in colour, and has four arms. It is not a Yoga-Sthanaka Vishnu, as the right hand, according to Maricha Samhita has to be an Abhaya Hastha. In fact, the Lord only exhibits a Varada Hasta and not an Abahaya Hasta. The other features mentioned as essential for a Yoga Sthanaka image are absent. The image is also not a Bhoga or a Veera or an Abhicharika murthi as one or the other of the characteristics mentioned in the Maricha Samhita is not satisfied by the Murthi.

One can therefore argue that the Lord's image is a super Agamic Manifestation, that is, one that existed before the Agamas came into being. Another plausible argument is that the image is a class by itself and not a simple Vishnu image. It is one that combines in itself the Hari and Hara aspects of the Supreme Spirit.

From the Hindu point of view, the Lord is ONE and answers devotees by whatever name the Lord's Chaitanyam or Active Principle is invoked. In fact devotees who flock to the Lord at Thirupathi worship in various forms as their "Ishta Deivam" as Lord Vishnu, Skandha or Subramaniya, Siva, Sakthi, a combination of the Trimurthis Brahma, Vishnu and Siva, or as Venkateswara a combination of Hari and Hara. There is absolutely no doubt that the Srinivasan and Pathmavathi images shall bestow their blessing as Vishnu and Luximi to the whole humanity and be a leading light in Sri Lanka amidst the encircling flow of Kaliyuga.

*With Best Compliments*

*from*

# Tilly's Hardware Stores

424, Skinners Road South,

Colombo 10.

# சரீரமும் சரீரியும்

கி. லக்ஷ்மண ஐயர்,
வித்தியாதிபதி,
கல்வி அமைச்சு.

தமிழிலே இயற்றப்பட்ட இலக்கியங்களுள் காலத்தால் மிக முற்பட்டவை சங்க இலக்கியங்கள் எனப்படும். இவை ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப் பட்டவை. இவைகளைப் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என இரு பிரிவுகளாக பிரிப்பது வழக்கம். பத்துப் பாட்டிலே பத்து நூல்களும், எட்டுத் தொகையிலே எட்டு நூல்களும் உள. இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கடவுள் வாழ்த்துமுண்டு. பத்துப்பாட்டு முழு வதற்கும் திருமுருகாற்றுப்படையாகிய ஒரு நூலையே கடவுள் வாழ்த்தாகக் கொள்வது மரபு. எட்டுத் தொகையில் பதிற்றுப்பத்து என்னும் நூலுக்கு இயற்றப்பட்ட கடவுள் வாழ்த்துக் கிடைக்கவில்லை. ஆகவே எட்டுத் தொகையில் ஏழு நூல்களுக்கு மட்டுமே கடவுள் வாழ்த்து உண்டு. இவற்றுள் நாலு நூல்களுக்குள்ள கடவுள் வாழ்த்து சிவனைக் குறித்துப் பாடப்பட்டது. இரண்டு நூல்களுக்குள்ளவை விஷ்ணுவைக் குறிப்பவை. ஒரு நூலுக்குள்ள கடவுள் வாழ்த்து முருகனை நோக்கிப் பாடப்பட்டது. புறநானூறு, அக நானூறு, கலித்தொகை, ஐங்குறுநூறு ஆகிய நான்கு நூல்களிலுமுள்ள கடவுள் வாழ்த் தும் சிவனைக் குறித்துப் பாடப்பட்டது. நற்றிணை, பரிபாடல் ஆகிய இரண்டு நூல்களி லும் உள்ள கடவுள் வாழ்த்து விஷ்ணுவைக் குறித்துப் பாடப்பட்டது. குறுந்தொகை என்னும் நூலிலுள்ள கடவுள் வாழ்த்து மட்டும் முருகனைக் குறித்துப் பாடப்பட்டது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மக்கள் சிவன், விஷ்ணு, முருகன் ஆகிய தெய்வங்கள் பற்றித் திட்டவட்டமான கருத்துக்கள் கொண்டிருந்தார்கள் என்பது இங்கு சிந்திக்கத்தக்கது. விஷ்ணுவைப் பற்றி நற்றிணையிலே இடம் பெற்றுள்ள கடவுள் வாழ்த் திலே பொருந்தியுள்ள தத்துவச் சிறப்பைக் குறிப்பிடுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

விஷ்ணு என்பதற்குப் பதிலாக திருமால், நெடுமால் எனவும் கூறலாம். இனி நற் றிணைக் கடவுள் வாழ்த்துக்கு வருவோம். அங்கு திருமாலின் தோற்றம் உலகளாவியதாக விபரிக்கப்பட்டிருக்கின்றது. பூமி முழுவதுமே அவனுடைய பாதங்கள்; சங்குகள் நிரப்பிய சமுத்திரமே அவனுடைய ஆடையாகும். ஆகாசம் முழுவதும் அவனுடைய உடலாகும். திக்குகள் அவனுடைய கைகள். சூரியனும் சந்திரனும் அவனுடைய இரு கண்களாகும் சக்கர ஆயுதத்தையுடைய திருமாலின் தோற்றம் நற்றிணையிலே இவ்வாறு வர்ணிக் கப்பட்டுள்ளது.

With the Best Compliments

from

*
*
*
*
*
*
*
*
*
*
*
*

Mysore Cafe

*130, Galle Road,*
*Wellawatte,*
*Colombo 6.*

"மாநிலம் சேவடியாகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கையாக
விசும்பு மெய்யாகத் திசை கையாக
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண்ணாக
இயன்றவெல்லாம் பயின்றகத்தடக்கிய
வேதமுதல்வனென்ப
தீதற விளங்கிய திகிரியோனே,"

என்பதே அக்கடவுள் வாழ்த்து.

பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே வாழ்ந்த வைஷ்ணவப் பெரியாராகிய இராமானுசர் என்பவர் பிரம்மசூத்திரம் என்னும் முக்கியமான தத்துவ நூலுக்கு விளக்கம் எழுதினார். அந்த விளக்கத்தின் விளைவாக எழுந்ததே விசிஷ்டாத்வைதம் எனப்படும் வேதாந்த தத்துவம். அந்தத் தத்துவத்தின்படி உலகமும் உலகத்திலுள்ள உயிர்களும் இறைவனுக்குச் சரீரமாகும். இறைவன் அந்தச் சரீரத்துக்குரிய சரீரி. உடலுக்கு உயிர் எப்படியோ, அப்படியே இந்த உலகுக்கும் உலகிலுள்ள உயிர்களுக்கும் இறைவன் உயிராகின்றான். உலகத்தைச் சரீரமாகவும் இறைவனை அந்தச் சரீரத்துக்குரிய சரீரியாகவும் கொள்ளும் இக் கொள்கையே மேலே சங்க இலக்கியமாகிய நற்றிணை என்னும் நூலின் கடவுள் வாழ்த்திலே நாம் கண்ட கொள்கையுமாகும். பதினோராம் நூற்றாண்டுப் பிற்பகுதியிலே வாழ்ந்த வைஷ்ணவ தத்துவஞானி ஒருவர் கண்ட தத்துவமுடிவொன்றை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ் மக்கள் அறிந்திருந்தது மட்டுமன்றி அழகிய தமிழிலே திட்ப நுட்பமும் அற்புதமும் பொருந்தப் பாடி வைத்தமை சிந்தனைக்கு விருந்தாயும் உள்ளத்துக்கு உவப்பாயும் அமைகின்றது.


With Best Compliments

from

S. SANTHOSA NADAR LTD.

GENERAL MERCHANTS & IMPORTERS

85, Prince Street,
COLOMBO 11.

Telephone: 26269 Residence: 82390

*With the Best Compliments*

*from*

# GOKULA DISTRIBUTORS

44, 7/2, YMBA Building,
2nd Floor,
COLOMBO I.

Telephone: **26381 - 26459**

# කුම්භාභිෂේක මංගල්‍යයේ ඇති වැදගත් කම

දේවාලයන්හි බොහෝ දෙවි දේවතාවන්ගේ පිළිම ප්‍රතිෂ්ඨාපනය කිරීම සිරිතය. මේ සියලුම දෙවි දේවතාවන්ගේ පිළිම පිහිටුවීමෙන් පසුව දේවාලය අභිෂේක කිරීම සඳහා කුම්භාභිෂේක උත්සවය පවත්වනු ලැබේ. එය දේවාලයක් තැනීමෙන් පසුව කරනු ලබන ඉතාම වැදගත් උත්සවයයි. ඉන්පසුව සෑම 12 අවුරුද්දක් පාසාම දේවාලය පිළිසකර කොට දෙවොලේ දේවතාධිගෘහිත භාවය අලුත් කිරීම සඳහා ජීර්ණ උද්ධරණ කුම්භාභිෂේක උත්සවය පැවැත්වීමද සිරිතක්ව පවතී.

අපගෙන් ඉටුවිය යුතු කුල පරම්පරානුයාත යුතුකම්ද රාමායණය හා මහාභාරතය වැනි පැරණි ග්‍රන්ථ වලින් නිර්දිෂ්ඨ වූ පරාර්ථ චර්යාවද නොපිරිහෙලා ඉටු කළ යුතු බව මතක් කරන කදිම අවස්ථාවක් වශයෙන් කුම්භාභිෂේක උත්සවය පවතී. කුම්භාභිෂේකය පවත්වන දිනයේදී දේවාලය කරා දහස් ගණනින් එක් රොක් වන අපි අපෙන් ආගමික වශයෙන් ඉටුවිය යුතු සේවාව අමතක නොකළ යුත්තෝ වෙමු.

කුම්භාභිෂේකයේදී පිළිපදිනු ලබන චතාවත් සැකෙවින් මෙසේය. ගංගා නම් ගඟ වැනි ශුද්ධ වූ නදියකින් හෝ රට පුරා ඇති වෙනත් පුණ්‍ය තීර්ථ වලින් හෝ ශුද්ධ ජලය ගෙනවුත් දේවාලයේ යාග ශාලාවේ බඳුන් වල බහා තබනු ලැබේ. මන්ත්‍ර ජපකිරීම් ආදියෙන් මේ ජලය තවත් පිරිසිදු කොට දේවාලයේ මූලස්ථානයේ ඇති කලස් මත හා ගෝපුර වල තනා ඇති කලස් මත එම ශුද්ධ ජලය වක්කරනු ලැබේ. අභිෂේක කිරීම යනුවෙන් අදහස් කරන්නේ එයයි. එම කලස් වලට දමන ලද ජලය බිඳෙන් බිඳ රිදී නූලක් දිගේ ගලා විත් දේව රූප අභිෂේක කරයි. මේ හේතුවෙන් දේවරූප අභිෂික්ත වී දේව හාස්කම් යුක්ත තත්ත්වයකට පත්වේ.

ශුද්ධ ජලය අභිෂේක කිරීමෙන් දේවරූප සිසිල් කිරීම වනාහී මිනිස් හදවත් කරුණා සීතල ජලයෙන් තෙත් විය යුතු බව සංකේත වශයෙන් දක්වන්නකි. කරුණාවෙන් සිසිල් වූ හදවතක් ඇති දෙවි මහ රජානන් වහන්සේ අප සන්තානයන්හි ඇවිලෙන ගින්නද සිසිල් කොට වදාරණ සේක.

දින 45 ක් පමණ පවතින මහා කුම්භාභිෂේක මංගල්‍යය අවසන් වූ පසුව මණ්ඩල අභිෂේක මංගල්‍යය පවත්වනු ලැබේ. මෙසේ වේද මන්ත්‍රානුසාරයෙන් කුම්භාභිෂේකය දින 45 ක් පැවැත් වීමෙන් පසුව දේවාලයෙහි අනුහස් වැඩිවී එමගින් දෙවියන්ගේ පිහිට පතා එන බැතිමතුන්ගේද මනෝරථ පූරණය වන්නේය.

මේ මහා කුම්භාභිෂේක උත්සවයට හැමදෙනම සහභාගි වී කරුණා ශීතල හදවතක් ඇති දෙවි මහ රජානන්ගේ ආශිර්වාදය ලබාගෙන රාග ගින්නෙන්ද ක්‍රෝධ ගින්නෙන්ද මෝහ ගින්නෙන්ද දැවෙන අපගේ සිත් සතන් නිවා ගැනීමට අදිටන් කර ගනිමු.

කාංචී කාම කෝටි පීඨාධිපති
**ජයේන්ද්‍ර සරස්වතී ස්වාමි**

*With Best Compliments*

*from*

# *Kala Traders*

Importers and Exporters, General Merchants
and Commission Agents

151, Dam Street,
COLOMBO 12.

Telephone: **35284**
Residence: **26562**

*Mill: Kelaniya*
Phone: **248**

# தெகிவளை
# விஷ்ணு மூர்த்தி ஊஞ்சல்

(வ — சிவராசசிங்கம்)

## விநாயகர் வணக்கம்

*ஈழமெனும் பெயர்கொளலால் இதுவேபொன்னு*
*டெனவிமையோர் தாமயங்கும் இலங்கைமேற்பால்*
*சூழுமெழில் தெகிவளையில் கோயில்கொண்டு*
*தொழுமடியார் பழவினைகள் நெகிழ வண்டு*
*வீழ்துளவ மாலைதவழ் விஷ்ணுமீது*
*மிகுவிருப்பால் செந்தமிழில் ஊஞ்சல்பாட*
*வேழமுக மாமருகர் துணையாய் நின்று*
*விக்கினங்கள் நீக்கவருள் வேண்டினேனே.*

---

*விரைகமழும் கற்பகப்பூம் பந்தர்நாப்பண்*
*விளங்குமணிப் பவளக்கால் நிரைய நாட்டி*
*பரவுமொளி வயிரத்தால் விட்டம்பூட்டி*
*பைந்தரள வடமாட்டி மாணிக்கத்தால்*
*உரகபட மெனச் சமைத்த பீடமேவி*
*உலகசரா சரங்களெலாம் இனிதுவாழ*
*மரகதமே னிப்பெருமான் ஆடீரூஞ்சல்*
*வண்தெகிவ ளைப்பதியீர் ஆடீரூஞ்சல்* 1.

*மென்மதுர வாக்கியொடு கமலமேவும்*
*வேதாவும் ஓர்தரள வடந்தொட்டாட்ட*
*மன்மதனும் ரதியுமொரு வடந்தொட்டாட்ட*
*வாசவனும் சசியுமொரு வடந்தொட்டாட்ட*
*மின்னொளிர்வேற் குமரனொடு வள்ளிமாது*
*விநயமுடன் ஒருவடந்தொட் டாட்ட நீங்கா*
*அன்பெனும்நீள் வடந்தொடுத்துன் னடியார் ஆட்ட*
*ஆழிமழைக் கண்ணபிரான் ஆடீரூஞ்சல்* 2.

*With Best Compliments*

*from*

# KAMIL TRADING CO.

*Dealers in All Ceylon Produce, Importers and Exporters*

113 & 213, Old Moor Street,
Colombo 12.

Telephone: 3 1 4 8 6

ஆரலெனு மறுமக்ளிர் கவரிவீச
அடைப்பைமுத லானவையெண் வசுக்கள் தாங்க
வாருலவு நகில்விஞ்சை மடவார் பாட
வனப்புறுமே னைகமுதலோர் நடனமாடக்
காருலவு சோலைமணி வண்ணம் காட்டும்
கவினுரும் தெகிவளைவாழ் தொண்டர்பாட்டுத்
தாருலவு மணிமார்பா ஆடீரூஞ்சல்
தாமரைநா யகிதலைவா ஆடீரூஞ்சல் 3.

கண்டுநிகர் மதுரமொழி மடவார் வேணு
கானமெனச் சங்கீதம் இசைத்தல்கேட்டு
மண்டியபே ருவகையினல் சிரசமாட
மணிதிகழ்குண் டலநிரைகள் வயங்கியாட
வண்டுளப வண்டுகளும் மலர்மேல்மங்கை
மழைக்குழல்சார் வண்டுகளும் மாறியாட
அண்டர்தொழும் அரிப்பெருமான் ஆடீரூஞ்சல்
அனந்தநா ராயணரே ஆடீரூஞ்சல் 4.

மனமாலை யழித்திடெனும் அடியார் ஓர்பால்
மணமாலை அளித்திடெனும் மடவார் ஓர்பால்
தனமேலைச் செல்வமருள் என்பார் ஓர்பால்
தரியேமிப் பிறவியொழி என்பார் ஓர்பால்
இனிநாமுன் அடிமையென்பார் ஒருபாலாகி
ஏத்திநிற்பார் விரும்பியவா றருளமஞ்ஞை
இனமாலும் தெகிவளையில் கோயில் கொண்ட
இலக்குமிதன் மணவாளர் ஆடீரூஞ்சல் 5.

திரைபொருபாற் கடலிடையே யவதரித்த
செங்கமல மங்கையுடன் சேடன்தாங்கு
தரைமகளும் இருமருங்கி லாடப் பாஞ்ச
சன்னியமும் சக்கரமும் கரத்திலாட
விரை கமழும் நறுந்துளவம் தோளிலாட
வில்வீசு கவுத்வமணி மார்பிலாட
மரைமலர்க்கண் பொழிகருணை யருவியாட
மரகதமே னிப்பெருமான் ஆடீரூஞ்சல் 6.

முருக்கலர்போல் அரக்குநிற மதுரவாயில்
முரளியுற வியற்றுதவம் என்னேவென்று
செருக்குறுசெவ் வரிவிழியில் இரக்கந்தோயத்
திகைத்துநிற்கும் அரமகளிர் தருணம்பார்த்து
பெருக்குறுதங் காதலைத்தூ தனுப்பும் வண்டுப்
பெடைதண்ணந் துளாய்ப்படியும் சுரும்பரோடு
நெருக்கமுறக் கலந்தயரும் பச்சைமேனி
நீள்பதும நாபரே ஆடீரூஞ்சல் 7.

*With the Best Compliments*

*from*

**S. M. A. TRADING CO.**

*Dealers in Sri Lanka Produce and Commission Agents*

169, Old Moor Street,
**Colombo 12.**

மாடுமனை மக்களுற வென்றுபேதை
மனமூச லாடுவதிங் கொழியவுன்னைப்
பாடுவதே பணியாக அருளென்றன்பர்
பரிந்துநின்றார் வானவ நாட்டதிபன் நாலு
கோடுபயில் வெள்ளானை யிழிந்து தேவர்
குலத்திேேனாடு கும்பிடுதற் கயலே நின்றான்
நாடுமிவர் விழிகளிப்ப ஆடீரூஞ்சல்
நப்பின்னை நாயகரே ஆடீரூஞ்சல் 8.

பண்தழுவு வேயூது வாயும் சங்கு
பரிதிதரித் திடுகரமும் கருணையூறும்
கண்மலரும் பாண்டவர்கள் தமக்காயன்று
கண்ணிலியின் குமாரன்பால் நடந்ததாளும்
வண்ணமுறு செங்கமல வடிவுகாட்ட
மார்புதடந் தோள்பச்சை வனப்புக்காட்ட
உண்ணெகிழு மடியார்கள் உவகைகொள்ளும்
உருத்திகழும் மணவாளர் ஆடீரூஞ்சல் 9.

மண்ணளந்த வாமனரே ஆடீரூஞ்சல்
வனசமகள் மாமனரே ஆடீரூஞ்சல்
பண்முரளி வாரிதியே ஆடீரூஞ்சல்
பார்த்தனது சாரதியே ஆடீரூஞ்சல்
விண்ணளந்த நெடுமுடியாய் ஆடீரூஞ்சல்
வினைகள்வலி கெடமுடிப்பாய் ஆடீரூஞ்சல்
தண்ணருள்செய் தடியருளக் கவலைமாற்றும்
சந்தானகிருட்டினரே ஆடீரூஞ்சல் 10.

## வாழ்த்து

கார்முகில்பொய் யாதுமழை பெய்து வாழி
கழனியுறு பயிர் வாழி கற்றோர்வாழி
ஏருழவர் வாழியற வோர்கள் வாழி
இந்துமதம் வாழி யரு மறைகள்வாழி
நேரியம்பவரியதமிழ் நீடுவாழி
நெடுமாலின் புகழ்படிப்போர் கேட்போர்வாழி
சீருலவு தெகிவளையில் மேவி வாழும்
சீதரனின் அடியார்கள் வாழி வாழி.

*With the Best Wishes*

*from*

# LANKA COPRA STORES

240, Layards Broadway,

COLOMBO 14.

Phone: **20817**

உ

ஸ்ரீ ராமஜெயம்

# அண்டினோர் துயர் தீர்க்கும் நெதிமாலை நெடுமால்

*ஆயர்பாடி ஆழ்வார்*

**ஸ்ரீ. வே. த. மயில் வாகனம்**

பல வருடங்களுக்கு முன்பாக தெஹிவளை பகுதியில் மகாவிஷ்ணு மூர்த்தி ஆலயம் ஒன்று இருப்பதாக ஒருவர் எனக்கு அறிவித்தார். உடன் கொழும்பு சென்று, இன்னும் சில பக்தர்களுடன் நானும் அவ் ஆலயத்திற்கு சென்று எம்பெருமானை வணங்கியும் போற்றியும் தரிசித்தோம்.

இப்புண்ணிய தரிசனம் பெற உதவியவர் யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் ஸ்ரீகிருஷ்ண ஆலயம் அமைத்து வணங்கிவந்த ஸ்ரீ நாராயண தொண்டர் என்ற மகான் ஆவர். இவர் கூறிய விபரமாவது:—

"நான் ஒரு கத்தோலிக்க சமயத்தை சேர்ந்தவன். ஒருமுறை எனது சொந்தக்கார குழந்தை ஒன்றுக்கு கடும் சுகயீனம் ஏற்பட்டு வைத்தியரும் கைவிட்ட நிலையில் களுபோவிலையில் ஒரு கோவிலில் வைத்திருப்பதாக அறிந்தேன். அக் குழந்தையை பார்ப்பதற்காக தெஹிவளையில் நிதிமாலயம் என்ற இடத்திலுள்ள அவ்விஷ்ணு கோயிலுக்கு சென்று அக்குழந்தையை வைத்திருந்தவர்களிடம் அளவளாவி "இங்கே இருப்பதால் நோயை மாற்ற முடியாது. ஏதும் பிறவைத்தியம் செய்யுங்கள் என்றும் சைவ கோயில்களில் எனக்கு நம்பிக்கை இல்லை என்றும் கூறிவிட்டு புறப்பட ஆரம்பித்தபோது இருட்டி வெகு நேரமானமையால் இரவு அவ்விடம் தங்கி, மறுநாள் காலை செல்லும்படி அங்குள்ளோர் வேண்டினர். எனவே கோயில் வாசலில் படுத்துறங்கும் சமயம் நள்ளிரவில் வாசலில் நின்ற பெரிய அரசமரத்தில் சோதிமயமான காட்சி தோன்றி 'குழந்தையின் நோய் மூன்று நாட்களில் சுகமாகும். நீ மேற்கொண்டும் பிரபஞ்சத்தில் உழலாது எனது நாமத்தை உச்சரித்து நிறைவுபெறுக என்று கூறி மறைந்தது. நான் இதனை மற்றவர்களுக்கும் எடுத்துக்கூறி மூன்று நாட்களும் கோவிலில் நின்று குழைந்தையின் நோய் மாறவே ஆச்சரியப்பட்டு மறுநாள் எனது தொழில், வியாபாரம் யாவற்றையும் உறவினரிடம் ஒப்படைத்து துறவியாக வெளிப்பட்டநிலையில் தெய்வாதீனமாக கொட்டாஞ்சேனையில் வசித்துவந்த கோப்பாயை சேர்ந்த பெண்மணியை சந்திக்க அவர் தன்னை சிஷ்யையாக ஏற்கும்படி வேண்டி. இருவருமாக யாழ்ப்பாணம் வந்து கோப்பாயில் உரும்பிராய் ரோட்டில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் ஆலயம் அமைத்து வணங்கிவருகிறோம்" என கூறி முடித்தார்.

இம்மகான் கண்டோர் வியக்கும் வகையில் பல விழாக்களெடுத்து சிறப்புற நடாத்தி 1958ல் சமாதியெய்தினர். அதை தொடர்ந்து இவரின் சிஷ்யை பூசை நடாத்தி சமாதியெய்தியபின் மறுஅடியார்கள் நடாத்தி வருகின்றனர்:—

நிதிமாலயம் சென்று வணங்கும் ஒருவர் மட்டுமல்லாது செல்லும் அனைவரும் தத் தமது துயர்தீர்ந்து, மன ஆறுதல் பெற்று வருவதை கண்டும் கேட்டும் இருக்கிறேன்.

அரிய மானிடப்பிறவி பெற்றவர் செய்யவேண்டிய முக்கியகடமை இறைவழிபாடு அதன் சிறப்பும், நன்மையும் எண்பெருக்கு ஆகும். அதற்குரிய உபாசர மூர்த்தியும் குரு வும் கிடைக்கப்பெறுவர் என்பதற்கு.

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் வணங்கிவர
வார்த்தை சொல்ல குருவும் வாய்க்கும் பராபரமே, என்பதும்

இன்னும்

அவரவர் மாமதமதறிவறி வகை வகை
அவரவர் இறையவர் என அடிஅடைவர்கள்
அவரவர் இறையவர் இறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே
என்ற நம்மாழ்வார் அருள் வாக்கும் சான்றுகும்.

''ஆத்ம ஆனந்தத்தில் ஆழ்ந்த முனிவர்க்ள் எல்லாப்பற்றும் நீங்கியவர் எனினும் உருக்கிரமனுகிய பகவானிடத்தில் எந்த காரணமும் இல்லாமல் ஆழ்ந்த பற்று வைக்கின் றனர்'' அப்படிப்பட்டது ஸர்வேஸ்பரனுன ஹரியின் குணம் என்று சூத முனிவர் கூறு கின்ருர்.

அருள் மிகு நிதிமாலய தேவஸ்தானமும் அடியார்களும் ஸர்வேஸ்பரனுன பரமாத் மாவின் திருவருள் நிறைந்தவர்களாகி எல்லா பேறும் பெற்று வாழ ஸ்ரீ திருவின் நாய கனே வேண்டுகின்ருேம்.

---



பிரபல வர்த்தரும்

சீதக்காதியன்ன

கொடை வள்ளலுமாகிய

## திரு. G. நாராயணசாமி

அவர்கள்.

# நாரணர் புரிந்த நாடகம்

## நவநீதன்

நாளும் தாம் வழிபடும் தெய்வமாகிய பரமசிவனுக்கு நெஞ்சிலோர் ஆலயம் அமைத்துப் புகழ் கொண்டவர் பூசலார் நாயனர். இவ்வாறே தமது இஷ்டதெய்வமாகிய செங்கமல வல்லிக்குக் கோயிலமைக்கவேண்டுமென நெடுநாட் கனவுகண்டவர் பிரபல வர்த்தரும் சீதக்காதியன்ன கொடை வள்ளலுமாகிய திரு நாராயணசாமி அவர்கள். தெகிவளை நெடுமால் கோவிலில் விஷ்ணு பிரான் தனித்தவராகவே விளங்குவதறிந்து அவர் மனம் குளிர்விக்க மகாலக்ஷ்மியை எழுந்தருளச் செய்ய எண்ணி அதற்கான கோவிலையும் கட்டுவித்தனர் திரு நாராயணசாமி அவர்கள். கோயிலில் பிரதிஷ்டை செய்வதற்கு மகாலக்ஷ்மியின் சிலா விக்கிரகமும் தயாரிக்கப் பெற்றது.

இந்நிலையில் திருப்பதி தேவஸ்தானம் மகாவிஷ்ணுமூர்த்தியின் சிலைமட்டுமன்றி பத்மாவதி அம்மையின் விக்கிரகத்தையும் வழங்குவதாக அறிவித்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்தது. இதனல் இரு அம்மன் சிலைகளையும் எங்கே தாபிப்பது என்ற ஒரு புதுப் பிரச்சினை தோன்றலாயிற்று. மூலமூர்த்தி இருக்கும் கர்ப்பக்கிரகத்துக்கு இருபாலுள்ள மண்டபங்களில் இரு சக்திகளையும் தாபிப்பதே உசிதம் என வைஷ்ணவ ஆகமத்தில் வல்ல ஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். கோயிலின் வடபாலமைந்துள்ளதாகிய, மகாலக்ஷ்மிக்கு திரு நாராயணசாமி அவர்களால் அமைக்கப் பெற்ற மண்டபத்தில் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக உற்சவ மூர்த்தியை எழுந்தருளச் செய்யலாம் என்பதும் குருக்கள் அவர்களின் ஆலோசனையாயிற்று. வைஷ்ணவ வேத சாஸ்திரங்களில் வல்லவராய் விளங்குவதோடு மகா கும்பாபிஷேகத்தினை நிறைவேற்றும் பொறுப்பினையும் சுவாமி விஸ்வநாதக் குருக்கள் ஏற்றுக்கொண்டுள்ளமையின் அவர் ஆலோசனைப் படியே இரு சக்தியரும் மூலமூர்த்தியின் இருபாலும் தாபிக்கப் பெறுகின்றனர்,

மகாலக்ஷ்மிக்கென அமைக்கப்பெற்ற சந்நிதியில் அவ்வம்மையாருடன் பத்மாவதியம்மையாரையும் உடனுகக்கொண்டு உற்சவ மூர்த்தியாக எழுந்தருள விஷ்ணு பிரான் புரிந்த நாடகத்தை என்னென்பது? ஒருவருக்கென அமைத்த கோவிலில் மூவர் எழுந்தருளும் விதமே கோவிலைத் தம் செலவில் அமைத்துக் கொடுத்த திரு நாராயணசாமியின் உள்ளத்திலும் வேங்கடவர் குடிகொள்வார் போலும். மகாலக்ஷ்மிக்கென அமைத்த கோவிலில் உற்சவ மூர்த்திகள் குடிகொண்டதும், திருப்பதியிலிருந்து எழுந்தருளிய பத்மாவதி அம்மை மூலவருக்கருகே குடிகொள்ள எண்ணியதும் கண்டு அவர் எழுந்தருளத் திருவுளங் கொண்ட சந்நிதியையும் புனருத்தாரணம் செய்துதந்த நாராயணசாமி அவர்களின் வள்ளன்மையை எவ்வாறு பாராட்டுவது?

# கயிலையை வெருவல் கண்டோன்

## (வித்துவான்: திருமதி. வசந்தா வைத்தியநாதன்)

"காயத்தாற் பெரியர் வீரம் கணக்கிலர் உலகம் கல்லும்
ஆயத்தார் வரத்தின் தன்மை அளவற்றார்."

என்று வீரத்தின் தலைநின்ற அநுமனே, "இலங்கை வாழ் அரக்கர்கள், கல்லெனத் திரண்ட தோளும், கனல் உமிழும் கண்களும், எல்லையிறந்த வீரமும் உடையவர்கள்." என்று வாயாரப் புகழ்கின்றான். மாற்றார் படைக்கலங்கள் தங்கள் மேனியில் விளைத்த வீரத் தழும்புகளையே விழுமிய செல்வமாக மதிக்கும். தானவர்களின் தனிப்பெருந்தலைவனே, விண்ணவர்களையும், மண்ணவர்களையும் தன்னடிப்படுத்திய "தசமுகன்". அந்திமாலை வந்துற்றபொழுது அமரர்கள் நிரைநிரையாக நிருதர் கோனின் சபைக்கு ஓடுகின்றார்களாம்.

"சித்திரப் பத்தியில் தேவர் சென்றனர்
இத்துணை தாழ்ந்தன முனியு மென்றுதம்
முத்திர ரங்களும் முடியின் மாலையும்
உத்தரீ யங்களும் இரிய ஓடுவார்."

இவ்வாறு விண்ணவர்களும் வெருவி ஓட இராவணன் ஆண்டது அடாத செயல் என்றாலும், இத்தகைய கொடிய குணங்களின் ஊடே, நீரோட்டமாக ஒருசில நற்குணங்களும் அவனிடம் அமையாமல் இல்லை. வெய்ய விடம் உள்ள நாகத்திடமே இசைக்கு மயங்கும் இனிய பண்பும் இருக்கிறது. அருந்த முடியாத உவர் கொண்ட ஆழ்கடலின் அகட்டினுள்தான் ஆணிமுத்துக்கள் உருக்கொள்கின்றன. அதைப்போன்று அரக்கர் கோனிடமும் இயல்பாகவே சில இனிய குணங்கள் கால்கொண்டிருந்தன. அத்தகைய அருங்குணங்களுள் தலையாயது பேராண்மை. ஒரு சிறு சான்று ........ ஒருமுறை உலகினைத் தாங்குகின்ற திசையானைகள் எட்டும் இலங்கை வேந்தனுடன் மாறு கொண்டன. வேழமும், வேந்தனும் போர் புரியும் அழகினைப் பாருங்கள்.

"தோடுழு தண்தார் வண்டும் திசையானை
 மதந் துதைந்த வண்டும் சுற்றி
மாடுழுத நறுங்கலவை வயக்களிற்றின்
 சிந்து ரத்தை மாறு கொள்ளக்
கோடுழுத மார்பானே, கொலையுழுத
 வடிவேலின் கொற்ற மஞ்சித்
தாள் தொழுத பகை வேந்தர்
 முடியுழுத தழும்பிருந்த சரணத் தானே."

என்று நெஞ்சாரப் போற்றுகின்றார் கம்பநாடர். மன்னனின் தாரில் தங்கிய வண்டுகள், மாவின் மதம் உண்ட வண்டுகளுடன் இகல் விளைக்கின்றன. கரியின் கோட்டில் உள்ள சிந்துரமும், காவலரின் கலவைச் சாந்தும், இடம் மாறுகின்றன. மன்னவனின் மார்பைப் பிளக்கக் கருதிய வேழத்தின் வலிய கொம்புகள், உரத்தினைப் பிளக்க வலியற்று பொடிப்பொடியாய் உதிர்ந்தனவாம். எத்தகைய பேராண்மை! ஆண்மையின் நிலைக்களமல்லவா அரக்கர் கோமான்: உரத்தின் உரத்தைப் பார்த்த நாம், அவனது தோளின் வன்மையைக் காண வேண்டாமா.

இதோ! விண்ணிற்கும், மண்ணிற்குமென ஓங்கியுயர்ந்த கயிலை வெற்பு. பெருமானும் பெருமாட்டியும் ஏகாந்தமாயிருக்கும் வேளை. இந்த நிலையில் ஓர் துணுக்கம். வெற்பு அசைகின்றது. அன்னை வெருவி ஐயனை ஆரத் தழுவுகின்றாள். மலையில் வாழும் மாதவரும், மற்றவரும் மயங்குகின்றனர் அசலம் அசைவதைக் கண்டு அஞ்சுகின்றனர். உண்மையை உணர்ந்த பெருமானே. தனது காற் பெருவிரலை ஊன்றி நடுக்கத்தைத் தவிர்க்கின்றார். மலையின் கீழே பார்த்தால் .. இராவணன்!! பொறியில் சிக்கிய பூனையின் நிலை. விண்ணிலே விரைந்த தன் விமானத்திற்கு ஊற்றினை விளைத்த வெள்ளி வெற்பை, ஈசன் உறையும் இருங்குன்றம் எனவும் எண்ணாது தனது இருபது தோள்களால் தூக்கினான். இறுதியில் அகப் பட்டுக் கொண்டு, சாமகானம் பாடி விடுதலை பெறுகின்றான். செய்யத்தகாத செயல் என்றாலும், செயற்கருஞ் செயல் என்றதால் தசக்கிரீவனின் புகழ் தாரணி முழுதும் பரவிற்று.

இந்தச் செய்தியை, ஆரணியத்தில், அஞ்சன வண்ணனின் அழகில் மயங்கி, மாற்றுருக் கொண்டு வந்த சூர்பனகையை, சாகுத்தன், "மாதே! நீயார்." என்று வினவிய இடத்து,

"..........................................................திக்கின்.
மாவெலாம் தொலைத்து
வெள்ளிமலை யெடுத்து உலகம் மூன்றும்
காவலான் பின்னை, காமவல்லியாம் கன்னி"

கயிலையை வெருவல் கண்டானின் இளையள் என்று, தலை நிமிர்ந்து உரைக்கின்றாள்.

செவ்விய மனத்தினளாகிய சீதையை, சிறைவிடுக்கும் பொருட்டு நடந்த வெம்போரில், இராகவனின் வாளிகள், கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் சானகியை, மனச்சிறையில் கரந்த காதல் உள்ளிருக்கும் என்று கருதி, எள் இருக்கும் இடமின்றி இலங்கையர் கோனின் மேனியைச் சல்லடைக் கண்களாகத் துளைத்தெடுக்கின்றன. வாரணம் பொருத மார்பனும், வரையினை எடுத்த தோள்களை உடையவனுமான இராவணன், வீரத்தை களத்தே போட்டு விட்டு வெறுங்கையோடு இலங்கை புகுகின்றான். செக்கழுத்தும், பீடு நடையும் கொண்டு, கண்டார் நடுங்கும் காலனாகத் திரிந்த அந்த மாநகரத்துள், பெருமையற்று, மேனிதளர்ந்து, ஆவி சோர்ந்து, மண்ணில் விழிபுதைத்து வரும் அவன் பரிதாப நிலையைப் பாருங்கள்.........

"மாதிரம் எவையும் நோக்கான்
வள நகர் நோக்கான்; வந்த
காதலர் தம்மை நோக்கான்
கடற் பெருஞ் சேனை நோக்கான்
தாதவிழ் கூந்தன் மாதர்
தனித் தனி நோக்கத் தானப்
பூதல மென்னு நங்கை
தன்னையே நோக்கிப் புக்கான்."

மண்ணையும், விண்ணையும் ஒருகுடைக் கீழ் ஆண்ட தன் கொற்றம், மனிதர்களாலும், குரங்குகளாலும் கொள்ளப்பட்டதை நினைக்கின்றான். அந்த நிலையிலும். மாற்றார்கள் பழிப்பார்களே! மண்ணிலுள்ளோர் தூற்றுவார்களே! வானவரும், தானவரும். வேடிக்கை பார்ப்பார்களே! என்பதற்கு அந்த மாவீரன் மனம் கலங்கவில்லையாம். பின் எதற்குக் கலங்கினான்...

"வானகு மண்ணு மெல்லா நகும்நெடு வயிரத் தோளான்
தானகு பகைஞ ரெல்லா நகுவரென் றதற்கு நாணான்
வேனகு நெடுங்கட் செவ்வாய் மெல்லியல் மிதிலை வந்த
சானகி நகுவ ளென்றே நாணத்தால் சாம்புகின்றான்."

இப்படி எரியும் மலேயென மனம் அழன்ற போதிலும், மாலியவானிடம், தன் பகைவனை, தாசரதியின் ஆற்றல்களை வெளியிடும்பொழுதுதான், தோல்வியிலும், பகையின் வீரத்தைப் போற்றும் குணக் குன்றுன, மண்டோதரியின் மணுளனைச் சந்திக்கின்றோம்.

"இந்திரன் குலிச வேலும்
    ஈசன்கை இலேமூன் றென்னும்
மந்திர அயிலு மாயோன்
    வளை யெஃகின் வரவும் கண்டேன்
அந்தரம் நீளி தம்மா!
    தாபதன் அம்புக் காற்று
நொந்தனன் யான் அலாது
    ஆரவை நோக்க கிற்பார்."

தேவர் மூவரினும் வலிமை மிக்க கொண்டல் வண்ணனின், பகழியின் பெருமையை, காய்த்தல் உவத்தலில்லாது உரைக்குமிடத்திலும் "நாசம் வந்துற்ற போது, நல்லதோர் பகையைப் பெற்றேன்." என்று இறும்பூதுற்று, மனம்திறந்து மொழியுமிடத்திலும், உண்மை வீரனுக்குரிய குணங்கள் விளக்கம் பெறுகின்றன.

இராவணன் சிறந்த சிவபக்தன். வெண்ணீறு துதைந்த மேனியனுய் விளங்கினுன். இதனை, ஞான போனகராம், காழிப்பிள்ளையார், "மந்திரமாவது நீறு," என்றெடுத்து, "இராவணன் மேலது நீறு." என்று ஏற்றம் கூறுகின்றுர் எனில் இராவணனின் பெருமைக்கு இதனிலும் சான்று வேண்டுமா? மாதொரு பாகனை மனக் கோயிலில் இருத்தி வழிபட்டான் மாமன்னன். பண்ணென்ற இசைபாடும் அடியவர்கட்கு, விண்ணையும், மண்ணையும் அளித்து மணிகண்டனின் பெருமையை, யாழில் இசைத்து இதயம் பூரித்தான். சிறந்த சிவஞானச் செல்வனுக்கு, இல்லக் கிழத்தியாய் அமைந்த மண்டோதரியின் பெருமையை, மாணிக்கவாசகரே புகழ்கின்றுர் எனில் அப்பெருமாட்டியின் பெருமை என்னென்பது.

இறைவனுல், "இராவணன்" என்ற நாமமும், நெடிய நாளும், கொடிய வாளும் அருளப்பெற்றவன் அரக்கர்கோன். தான் இறப்பது உறுதி, என்று திண்ணமாகத் தெரிந்து, இராகவனுடன் போர் புரியப் போந்த நிலேயிலும், இருமைக்கும், இன்பம் நல்கும் ஈசனை மறந்தானில்லே. சிவபூசை செய்துவிட்டே போர்க்களம் ஏகுகின்றுன்.

"ஈசனை இமையா முக்கண்
    இறைவனை இருமைக் கேற்ற
பூசனை முறையிற் செய்து
    திருமறை புகன்ற தானம்
வீசினன் இயற்றி மற்றும்
    வேட்டன வேட்டோர்க் கெல்லாம்
ஆசற நல்கி ஒல்காப்
    போர்த் தொழிற் கமைவதானுன்."

இராவணன் இறைவிருப்புடன் கூட இசைவிருப்பும் கூடியவன். இதனை தனது வீரக்கொடியாக, வீணைக்கொடியை அமைத்ததினின்றே அறியலாம். மேலும், நாதப்பிரும்மமாக விளங்கும் நாரத முனிவரே, தம் மூக்கினுச்சியில் சுட்டுவிரல் சேர்க்குமளவு, இசையில் தன்னிகரற்று விளங்கினுன். இலங்காபுரி எங்கும், மகர வீணையின், மந்திர ஒலியும், ஆடலும், பாடலும் நிறைந்து இந்திரபுரியாக விளங்கியதை இராம தூதனே கூறுகின்றுன். கயிலேயை வெருவல் கண்டோன், கண்ணுத லோனை வெற்றி கொண்டதும் சாம கீதத்தினுல் தானே! இவ்வாறு பேராண்மையும், பெருமிதமும், இறை நலத்துடன், இசை நலமும் வாய்க்கப் பெற்றவனுய் இருந்தும், அரக்கர் கோன் அறத்தைப் பகையாகப் பெற்றதாலேயே அழிந்தான் என்பது வரலாறு நமக்கு உணர்த்தும் உண்மை.

வணக்கம்!

# ஸ்ரீ விஷ்ணு ஆலய வழிபாட்டு முறை

சேங்காலிபுரம் S. B. கல்யாணராம பட்டாச்சாரியார்

ஸ்ரீயப் பதியான ஸ்ரீபகவான் ஸ்ரீநாராயணன் வைகுண்டம் எனும் தனது இருப்பிடத்தை விட்டு இப்பூவுலகை அடைந்துள்ளார். சாதாரண மனிதர்களும் பகவானைத் துதிக்கவும் பிரார்த்திக்கவும் வசதியாக ஆங்காங்கு ஆலயங்களை எழுப்பி அவ்விடங்களில் பகவானை சிலாரூபத்தில் வைத்துள்ளார்கள். பகவானைத் துதிப்பது, தரிசிப்பது, ஆலயங்களுக்குத் தொண்டு செய்வதுபோன்ற காரியங்களால் பகவானது அருளைப் பெற்று க்ஷேமங்களை அடையவேண்டும். இப்படி வழிபாடு செய்வதை முறையோடும் பக்தி சிரத்தையுடனும் செய்வதால் விரைவில் பலன் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

## விஷ்ணு ஆலய வழிபாடு

சரீர சுத்தி செய்து கொண்டு ஆசாரத்துடன் வணக்கத்துடன் பெரிய கோபுர வாசல் வழியாக உள்ளே சென்று துவஜஸ்தம்பத்தின் அல்லது பலிபீடத்திற்கு முன் நான்கு தடவை நமஸ்காரம் செய்யவேண்டும். பிறகு ஸ்ரீ கருடாழ்வார் முன் கைகூப்பி நின்று,

1. வைநதேய மஹா பாக விஷ்ணு வாஹ நமோஸ்துதே/ நாராயணஸ்ய ஸேவார்த்தம் அனுக்ஞாம் தாது மர்ஹனி//
2. கருடம் வரதம் தேவம் ஸ்ரீ விஷ்ணுப் பிரிய வாஹனம்/ சர்ப்பாதி விஷ ஹர்த்தாரம் சிரஸாத்வாம் நமாம்யஹம்//

என்று வணங்கிவிட்டு பிறகு ஸ்ரீவிஷ்ணு (வரதராஜப் பெருமான்) சந்நிதியில்

விஷ்ணும் சதுர்ப்புஜம் தேவம் சங்கசக்ர கதாதரம்
பக்தாபீஷ்டப்ரதாதாரம் வரதம் த்வாம் நமாம்யஹம்!

என்று தோத்திரம் செய்துகொண்டு பிறகு ஸ்ரீநிவாசன் சந்நிதியில்,

ஸ்ரீநிவாஸம் ஸ்ரியாயுக்தம் வேங்கடேசம் சதுர்புஜம்
பக்தானும் இஷ்டதம் நாதம் ஜகதாம்த்வாம் நமாம்யஹம்/

என்று வணங்கிவிட்டு ஸ்ரீராமர் ஸந்நிதியில்

சூர்யவம்ச ஸமத்பூதம் ஸீதாலக்ஷ்மண ஸம்யுதம்
த்ருத கோதண்ட ஹஸ்தாப்ஜம்ராமம்த்வாம் ப்ரணமாம்யஹம்!

என்று துதித்துப் பிறகு ரெங்கநாதர் சந்நிதியில்,

சேஷதல்ப சயானம்த்வாம் ஸ்ரீபூமி ஸஹிதம் ப்ரபும்
ப்ரஹ்மாதி சுரநாதம் தம் ரங்கநாத மஹம் பஜே!

என்று சொல்லி பிறகு ஸ்ரீ கிருஷ்ணன் சந்நிதியில்,

யசோதா வத்ஸலம் ராஜகோபாலம் யதுவம்சஜம்
ருக்மணீ சத்யபாமாப்யாம் ஸஹிதம் கிருஷ்ணமாச்ரயே!

என்று தோத்திரம் செய்து பிறகு ஸ்ரீநரசிம்மர் சந்நிதியில்,

துஷ்டானும் பீகரம் தேவம் சிஷ்டானும் அபயங்கரம்
ப்ரஹ்லாத வரதம் விஷ்ணும் ஸ்ரீந்ருஸிம்ம மஹம்பஜே!

என்று வணங்கிவிட்டு மஹாலக்ஷ்மி சந்நிதியில்

பத்மஸ்திதாம் பத்மஹஸ்தாம் வரதாம் வரரூபிணீம்
விஷ்ணு வக்ஷஸ்திதாம் தேவீம் மஹாலக்ஷ்மீம் அஹம்பஜே!

விஸ்வமாதர் நமஸ்துப்யம் தாரித்ரியம் நாச யாசுமே
அஷ்டமூர்த்தே நமாமித்வாம் அஷ்டைச்வர்யம் ப்ரயச்சமே

என்று பிரார்த்தித்து பிறகு ஸ்ரீ ஆண்டாள் சந்நிதியில்

துளஸீவன சஞ்ஜாதாம் விஷ்ணுஸித்த ப்ரியாத்மஜாம்
ஸ்ரீ கோபாலப்ரியாம் தேவீம் கோதாம்தாம் ப்ரணமாமியஹம்

என்று வணங்கிவிட்டு ஸ்ரீ ஆஞ்சனேயர் சந்நிதியில்

அஞ்சனுதனயம் வீரம் ராமதூதம் மஹாமதிம்
ஹனுமந்தம் நமாமித்வாம் பலம்புத்திம் ப்ரயச்சமே

என்று வணங்கிவிட்டு மீண்டும் கருடாழ்வார் சந்நிதி வரை வந்து நான்கு பிரதக்ஷணம் செய்து கொண்டு பலிபீடத்துக்கு முன்னல் நமஸ்காரம் செய்துகொண்டு வரவேண்டும்.

(இவைகளில் இருக்கும் சந்நிதிகளுக்கு உகந்த ஸ்தோத்திரங்களைச் சொல்லவும்)


With Best Compliments

from

GOPALAN TRADING COMPANY

IMPORTERS, EXPORTERS & DEALERS IN CEYLON PRODUCE
COCONUT OIL, POONAC ETC.

*149, Dam Street,*
*COLOMBO 12.*

Telephone: 34419

# கண்ணன் — நண்ணினார்க்கு இனியன்; எளியன்

— திருமதி புவனேஸ்வரி அருணாசலம் —

ஆயர் குலத்துதித்த மாயவன் கண்ணன். அவன் புரிந்த அற்புதச் செயல்களை வாயாரப் பாடுவதில் குதூகலம் கொள்ளுவர் குழந்தைகள்; பேசரிய மகிழ்ச்சி பெறுவர் பெண்கள். பக்தமணிகளோ வெளில் பரந்தாமனின் புகழைப் பாடுந் தொறும் கேட்குந் தொறும் பரவசநிலை யடைவர். பல்வேறு மொழிகளிலே பல தரப்பட்ட பாவடிவங்களின் பாடல்நாயகனாகத் திகழ்பவன் கண்ணன். கண்ணன் என்றதும் அன்று ஆனினம் மேய்கை மறக்கச் செய்த கோவலர்க்குக் களிப்பூட்டி, கோபியரை ஆடவைத்த கானமழை காதில் ஒலிப்பது போன்றதோர் உணர்வு. மாயவனின் லீலைகளும் நினைவில் நிழலாடுகின்றன. அவன் இயற்றிய ஒவ்வொரு லீலையிலும் மந்திரசக்தி மின்வீசியது. அவன் சிரித்தபோது அவனது குமுத மலர் வாய்க்குள் மலர்தலையுலகத்தையே கண்டாள் யசோதை. அவன் தீராத விளையாட்டுப் பிள்ளைதான். ஆனால் கண்ணனின் விளையாட்டுக்களிலெல்லாம் முனிவரும் தேவரும் மெச்சும் அற்புதங்கள் புதைந்து கிடந்தன.

பாரதி கூறுமாப்போல் நண்பனாய் மந்திரியாய், நல்லாசிரியனுமாய், பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய் வந்து, நம்பினோர் வாழ்விலே நலமளிக்கும் தன்மையன் கண்ணன். "இதயந்தோறும் இருப்பவன் யான்; அனைத்தையும் துறந்து என்னை அடைக்கலமாய் நண்ணி இன்பம் காண்க" எனப் பகவத் கீதையில் பார்த்த சாரதியாய் நின்று பரந்தாமன் கூறினான். அவ்வாறே தமக்கு இனியவை எனக் கருதிய அனைத்தையும் கைவிட்டு அவனை அடைதற்கு அவாவிய அடியார்களும், காதலர்களும் அநந்தம். பக்தை மீரா தான் வரித்த மன்னனைத் துறந்து, அரச போகத்தை ஒதுக்கி, கிரிதரன்பால் கிறிகொண்டிருந்தாள். ஆண்டாள் எனும் அரியபொற்பாவை, அறியாப்பருவந் தொட்டே தேவகி மைந்தன்பால் சிந்தனையைப் பறிகொடுத்து, கற்பனையில் மாலை மாற்றிக் கடிமணம் புரிந்து அவனுடைமையாயினாள். இவர்களைப் போன்று பரந்தாமனிடம் பக்திபூண்டு, அவனது கைங்கரியத்திலேயே இன்பங்கண்ட மெய்யடியார் எண்ணிறந்தவர்.

இந்து இல்லங்களில் தெய்வீகமும் இன்பமும் பரிமளிக்கும் பல்வேறு பாவனைகளில் கண்ணன் கொண்டாடப்படுகிறான். ஆலிலையில் படுத்திருக்கும் குழந்தைக் கோலத்தில், தவழ்ந்து வரும் உருவில், உறியில் தயிர் களவாடும் தோற்றத்தில், வேய்ங் குழல் ஊதும் வண்ணவடிவில், ராதையுடன் சல்லாபிக்கும் காட்சியில், பார்த்த சாரதியாய்த் தேரோட்டும் பாங்கில் இன்னும் எத்தனையோ கோலங்களில் தீட்டப்பெற்ற சித்திர உருவங்கள் மூலம், கண்ணன் இன்றும் எண்ணற்றோர்க்குப் புத்துணர்வும் புதுப் பொலிவும் ஊட்டுகிறான்.

கண்ணன் காத்தற்கடவுளாகிய விஷ்ணுவின் 'பூரண அவதாரம்' எனப் புராணங்கள் பேசும். பதினெண்புராணங்களுள் வைணவம், பாகவதம் நாரதீயம், காருடம் என்பன விஷ்ணு புராணங்கள். இவற்றுள் பாகவதம் கண்ணபிரானின் வரலாற்றை விரிவாகக் கூறுகிறது. அத்துடன் மகா பாரதத்திலும் கண்ணனின் அருட்செயல்கள் அழகுற விளக்கப்பட்டுள்ளன "நீ பாரத அமரில் யாவரையும் நீறாக்கிப் பூபாரம் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா" என்ற சகாதேவன் கூற்றில் கிருஷ்ணனின் திரு அவதார நோக்கம் புலப்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

வட மதுரையில் வசுதேவனுக்கும் தேவகிக்கும் கண்ணன் எட்டாவது குழந்தையாய் அவதரித்தமை, கண்ணனால் தனக்கு

*With Best Compliments*

*from*

**SEVEN SEAS (EXPORT) CEYLON**

P. O. Box No. 1751

COLOMBO

SRI LANKA.

Telephone: 29307

25655

22576

85040

Cable: SESEX

Telex: 1254

வரவிருந்த அழிவை எண்ணி மாமனாகிய கம்சன் இழைத்த இன்னல்கள், கோகுலத்திலே யசோதை மைந்தனாய் வாழ்ந்த கண்ணன் ஆற்றிய அற்புதச் செயல்கள் அனைத்தும் பலரும் அறிந்தவையே. பிள்ளைப் பராயந்தொட்டே ஆடல்கள் புரிவது போன்று அக்கிரமஞ்செய்தோரை அழித்துத் தனது அவதார நோக்கத்தைச் சிறிது சிறிதாகச் செயற்படுத்திவந்தான்.

ஆயினும் கிருஷ்ணாவதாரத்தின் நோக்கம் பூரணமாவது மகாபாரதத்திலேயே எனலாம். 'ஆபத் பாந்தவனாகிய கண்ணனது கருணைத்திறம் பாரதத்தில் சூதுபோர் நிகழ்ச்சியில் காட்டப்படுகிறது. சூதில் திரௌபதியையும் தம்மிடம் பெற்றுக் கொண்ட துரியோதனாதியர், அவளை மானபங்கப்படுத்தத் துணிந்தனர் பாண்டவர் வாளாவிருப்பது கண்டு மனங் கலங்கிய பாஞ்சாலி பரந்தாமனிடம் ஆன்மார்த்தமாகச் சரண்புகுந்து அவனது ஆயிரம் நாமங்களையுஞ் சொல்லி அழுது முறையிட்டாள். அபயக்குரல் கேட்ட கண்ணன் அவையோர்க்கு வெளிப்படாது துணை நின்று, அவள் மானத்தைப் பேணினான்:-

"அருமறை சொல்லிய நாமம் ஆயிரமும்
உரைத்தழைக்க அமரர் போற்றும்
திருமலர்ச்செஞ் சேவடியோன் திகழ்
செவியில் இவன்மொழி சென்றிசைத்த
காலை
மருமலர்மென் குழல்மானின் மனம்
நடுங்காவகை மனத்தே வந்துதோன்றி
கரிய முகில் அனையானும் பிறரெவர்க்கும்
தெரியாமல் கருணை செய்தான்."

என இந்நிகழ்ச்சியை வில்லிபாரதம் போற்றுகிறது. பாரதத்தில் கண்ணனுக்கும் அருச்சுனனுக்கும் உள்ளதொடர்பு தனித்தன்மை வாய்ந்தது. இருவரும் ஒருங்கே 'நரநாராயணர்' என அழைக்கப் படுவர் இத்தொடர்பில். நரன் என்பது ஜீவாத்மாவையும் நாராயணன் என்பது இறைவனையும் குறிக்கும். ராதாகிருஷ்ணன் ஆகிய நாயகி நாயக பாவத்தின் பிறிதொரு தோற்றமே இது. பேர்படைத்த விஜயனொடு மும்மைநெடும் பிறவியிலும் பிரியானாகியும், சீர்படைத்த சேனையினால் தேர் ஊர்தற்கிசைந்தும் பார்த்தனோடு தோழமை கொண்டு பழகினான் கண்ணன். மகாபாரதப் போரின்போது பார்த்தனுக்குத் தேரூர்ந்த வேளையில்தான் பகவத்கீதை போதிக்கப்பட்டது. பாலப் பருவ லீலைகள் மூலம் யசோதை முதலாய அன்னையரைப் பரவசப்படுத்திய நவநீத சோரனாகவும், கானத்தாலும் சிருங்காரத்தாலும் ராதையையும் கோபியரையும் வசமிழந்து தம்பால் லயிக்கச் செய்த முரளீதரனாகவும் விளங்கிய கண்ணன், அருச்சுனனுக்கும் அவன்வழி அவனி முழுவதற்கும் ஞானகுருவாயினன். கீதையமுதம் எந்நாட்டவர்க்கும் எக்காலத்திற்கும் பொருந்தும் ஞானவாழ்வுக்கான நெறியைப் போதிக்கின்றது. இவ்வாடலெல்லாம், ஆன்மாக்களின் பக்குவ நிலைக்கேற்ப, பரந்தாமனின் அருள்புரி திறத்தையே காட்டுகின்றன.

நித்தியனாய், முத்தனாய், ஞானசொரூபனாயிருக்கும் பரந்தாமன், பரம்பொருளுக்கே இயல்பான சர்வசக்தியோடும் அகண்டாகார வடிவினனாய்த் தோன்றுவானெனில், அவனது ஆற்றல் மக்களது அறிவுக்காட்சிக்கு அப்பாற்பட்டதாகிவிடும். அவனது அருள்பிரவாகமும் மக்கள் முகந்து கொள்ளவியலாதவாறு, அதிவேகமும் பெருக்கும் உடையதாய் திணற அடித்து விடும். ஆதலின் இறைவன் கண்ணன் எனும் காட்சிக்கினிய கொண்டாடத்தகு நீலமேனிக் கோலத்தனாய் அவதரித்து அறம் தழைக்க அருள் பாலித்தான். நாமும் அன்போடு அவன் கழல் துதித்து அருள் நாடி நிற்போம்.

அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக்
கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவதேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.

# WORSHIP OF KRISHNA

(by V. SIVARAJASINGAM)

The Supreme deity of the Hindus manifests itself in three forms, namely Brahma, Vishnu and Siva, the Creator, the Preserver and the Destroyer respectively. It is an accepted view of the Hindus that the Supreme as Vishnu assumed different forms to accomplish different purposes for the good of mankind. Krishna is one of those avatars of Vishnu. He came as the son of Devaki and Vasudeva. Krishna himself had innumerable forms. But they were not like our forms which are fallible. His form is infallible. Our form has a beginning whereas His form has no beginning. It is Ananta.

When Maha Vishnu took Avatar as Krishna 5000 years ago, He displayed his manifestation as The Absolute through his various accomplishments. In his childhood he killed many powerful demons. He lifted Govardhana Hill to protect the cows from rain. He enticed the animals with the melody of His flute. Several other frolicsome gambols he played as a cowherd have been the source of many aesthetic creation by poets composers and painters. He danced with the Gopis in Brindawan without reproach. Although the Gopis approached Him with amorous love, the relationship between Him and the Gopis was impeccable and prophylactic. The dance symbolises the fact that even impure souls (the Gopis) became purified as a result of their association with the Lord.

But it was as the designer of the battle of Kuruksethra, that Lord Krishna displayed his manifestation as the Supreme. During his incarnation as Krishna, the Lord found this planet submerged in a whirlpool of chaos and all the disciplines of life had become distorted. He found a devastation was necessary to re-establish disciplined life. And he chose Arjuna his most confidential friend and devotee. He explained to Arjuna that the lust for self-and-sense-gratification causes material bondage. The human form of life offers one a chance to get out of this entanglement, through self-realization. Self-realization means understanding of the fact that the living entity, as everything else, emanated from the Absolute, who is the cause of all causes and realizing the need for re-establishing the lost relationship between the entity and the Lord. This, Krishna clearly told Arjuna is only possible through self-dedication to the Lord Absolute, One should fasten himself to the worship of Him (Krishna) and fully surrender unto Him.

The simple way to worship the Supreme Lord in this age of disturbance is to hear and chant about His great activities and accomplishments. Chanting the name of the Lord as a means of prayer has been in practice even before the Vedic age. By hearing and chanting of the leelas of the Lord one becomes cleansed of all undesirable things. In this way transformation of man's nature is effected to attain the sublime which is the purpose of religion.

# மகா விஷ்ணு

# அர்ச்சனைக்குரிய நாமங்கள்

1. ஓம் விஷ்ணவே நம:
2. ஓம் நாராயணாய நம:
3. ஓம் வாஸுதேவாய நம:
4. ஓம் த்ருவாய நம:
5. ஓம் அச்யுதாய நம:
6. ஓம் ஹ்ருஷீகேசாய நம:
7. ஓம் புருஷோத்தமாய நம:
8. ஓம் லக்ஷ்மீபதயே நம:
9. ஓம் கோவிந்தாய நம:
10. ஓம் சங்கசக்ரதராய நம:
11. ஓம் ஜகந்நாதாய நம:
12. ஓம் பரமாத்மனே நம:
13. ஓம் யோகேச்வராய நம:
14. ஓம் ஆதிதேவாய நம:
15. ஓம் ஆதிமூலாய நம:
16. ஓம் த்ரிவிக்ரமாய நம:
17. ஓம் ஜனார்தனாய நம:
18. ஓம் பத்மநாபாய நம:
19. ஓம் கேசவாய நம:
20. ஓம் ஹரயே நம:
21. ஓம் தர்மஸம்ஸ்தாபகாய நம:
22. ஓம் துஷ்டநிக்ரஹகாரிணே நம:
23. ஓம் சிஷ்டரக்ஷகாய நம;
24. ஓம் க்ஷேத்ரபாலகாய நம:
25. ஓம் ஸர்வதோ முகாய நம:
26. ஓம் ஸத்யதர்மபராயணாய நம:
27. ஓம் மஹாயஜ்வனே நம:

# அஷ்ட லக்ஷ்மி ஸ்தோத்திரம்

## ஆதிலக்ஷ்மி

ஸுமநஸ வந்தித ஸுந்தரி மாதவி
சந்த்ர ஸஹோதரி ஹேமமயே
முநிகண மண்டித மோக்ஷ பிரதாயினி
மஞ்ஜுள பாஷிணி வேதநுதே
பங்கஜ வாஸிநி தேவஸுபூஜித
ஸத்குண வர்ஷிணி சாந்தியுதே
ஜயஜய ஹே மதுஸூதன காமினி
ஆதிலக்ஷ்மீ ஸதா பாலயமாம்

## தான்யலக்ஷ்மி

அயிகலி கல்மஷ நாசிநி காமிநி
வைதிக ரூபிணி வேதமயே
க்ஷீர சமுத்பவ மங்கள ரூபிணி
மந்த்ர நிவாஸிநி மந்த்ரநுதே
மங்கள தாயிநி அம்புஜ வாஸிநி
தேவ கணாச்ரித பாதயுதே
ஜயஜய ஹே மதுஸூதந காமிநி
தான்யலக்ஷ்மீ ஸதா பாலயமாம்

## தைர்யலக்ஷ்மி

ஜயவர வர்ணிநீ! வைஷ்ணவி பார்கவி
மந்த்ர ஸ்வரூபிணி மந்த்ரமயே
ஸுரகண பூஜித சீக்ரபலப்ரத
ஜ்ஞான விகாஸிநி சாஸ்த்ரநுதே
பவபய ஹாரிணி பாப விமோசநி
ஸாது ஜநாச்ரித பாதயுதே
ஜயஜய ஹே மதுஸூதந காமிநி
தைர்யலக்ஷ்மீ ஸதா பாலயமாம்

## கெஜலக்ஷ்மி

ஜயஜய துர்கதி நாசினி காமிநி
ஸர்வபல ப்ரத சாஸ்த்ரமயே
ரதகஜ துரகபதாதி ஸமாவ்ருத
பரிஜன மண்டித லோகநுதே
ஹரிஹர ப்ரும்மஸு பூஜித ஸேவித
தாப நிவாரணி பாதயுதே
ஜயஜய ஹே மதுஸூதந காமிநி
கெஜலக்ஷ்மி ரூபேண பாலயமாம்.

## ஸந்தானலக்ஷ்மி

அயிககுக வாஹநி மோஹிநி சகரிணி
ராக விவர்த்திநி ஜ்ஞானமயே
குணகண வாரிதி லோக ஹிதைஷிணி
ஸ்வரஸப்த பூஷித கானநுதே
ஸகல ஸுராஸுர தேவ முநீச்வர
மாநவ வந்தித பாதயுதே
ஜயஜய ஹேமது ஸூதந காமிநி
ஸந்தான லக்ஷ்மீது பாலயமாம்

## விஜயலக்ஷ்மி

ஜய கமலாஸநி ஸக்கதி தாயிநி
ஜ்ஞான விகாஸிநி கானமயே
அனுதின மர்ச்சித குங்கும தூஸர
பூஷித வாஸித வாத்யனுதே
கனகதாரா ஸ்துதி வைபவ வந்தித
சங்கர தேசிக மான்ய பதே
ஜயஜய ஹே மதுஸூதக காமிநி
விஜயலக்ஷ்மீ ஸதா பாலயமாம்

## வித்யாலக்ஷ்மி

ப்ரணத ஸுரேச்வரி! பாரதி! பார்க்கவி
சோக விநாசநி! ரத்னமயே
மணிமய பூஷித கர்ணவிபூஷண
சாந்தி ஸமாவ்ருத ஹாஸ்யமுகே
நவநிதி தாயிநி கலிமல ஹாரிணி
காமித பலப்ரத ஹஸ்தயுதே
ஜயஜய ஹே மதுஸூதந காமிநி
வித்யா லக்ஷ்மீ ஸதா பாலயமாம்

## தனலக்ஷ்மி

திமிதிமி திந்திமி திந்திமி திந்திமி
துந்துபி நாதஸூ பூர்ணமயே
குமகும குங்கும குங்கும குங்கும
சங்க திநாத ஸுவாத்யநுதே
வேத புராணே திஹாஸ ஸுபூஜித
வைதிக மார்க்க ப்ரதர்சயுதே
ஜயஜய ஹேமது ஸூதந காமிநி
தனலக்ஷ்மீ ரூபேண பாலயமாம்

*With the Best Compliments*

*of*

# K. G. INDUSTRIES

*LITHO PRINTERS & MANUFACTURERS OF:*
*PILOT FOUNTAIN & BALL POINT PENS,*
*K. G. FOUNTAIN PENS,*
*CORRUGATED BOXES*
*and*
*GUMMED TAPE*

**K. G. INDUSTRIES**
545, Sri Sangaraja Mawatha,
Colombo 10.

T/P: **21668/21669**

*With Best Compliments*

*from*

# SRI PONNAMBALAM & SONS

*Dealers in Gunny Bags*

**322 Negombo Road**

**PELIYAGODA**

Telephone: **070-288**

*With Best Compliments*

*from*

# MAHARAJAH STORES

*Dealers in Gunny Bags*

**211, Negombo Road,**
**PELIYAGODA.**

*With Best Compliments*

*from*

# KUMARI TRADING CO.

**Dealers in Gunny Bags**

312/5, Cyril C. Perera Mawatha,
COLOMBO 13.

Telephone: **35296**

*With Best Wishes*

*from*

# P. SITHAMBARAM

129, Chekku Street,
Sri Kathiresan Street,
**COLOMBO 11.**

With Best Compliments

from

Udaya Jewellers

Leading Jewellery Merchant

*53, & 55, Sea Street,*
*COLOMBO 11.*

*With Best Wishes*

*from*

# M. MAHALINGAM

*84 Ratnam Road*
*COLOMBO 13*

Telephone: **35296**

*With Best Compliments*

*from*

**DORAI ARUL & CO. LTD.**

93, Keyzer Street,
Colombo 11.

Telephone: **24588**

With Best Compliments

from

**N. VEERAPANDIAN**

*With Best Compliments*

*from*

# KUNDANMALS

*With Best Compliments*

*from*

# S. T. CHANDRA BOSE

86, Ratnam Road,
Colombo 13.

Telephone: 35296

With Best Compliments

from

# V. SELVADURAI & SONS

*Dealers in Gunny Bags*

478/1, G. Cyril C. Perera Mawatha,
**COLOMBO 13.**

*With Best Compliments*

*from*

K. Narayanasamy

*414/16, Cyril C. Perera Mawatha,*

*COLOMBO 13.*

*With the Best Compliments*

*of*

# SARATHA STORES

**Dealers in Textiles and Ready Made Garments**

*96 and 98, York Street,*
*COLOMBO 1.*

Dial: **22075**

*With the Best Compliments*

*of*

# VIJEYA TRADING CO.

Dealers in Tea Chest

*39/10, Iceland Building,*
*Galle Face,*
*Colombo 3.*

Telephone: **24604**

*With Best Compliments*

*from*

**SEVEN SEAS (EXPORT) LTD.**

64, KEYZER STREET,
COLOMBO 11.

Telephone: **29307**
**25655**
**22576**
**85040**

Cable: SESEX
Telex: 1254

With Best Compliments

from

# SAVOY PAINT CENTRE

DEALERS IN ALL KINDS OF PAINTS

565, Galle Road,
Wellawatte,
COLOMBO 6.

*Telephone:* **87642**

*Ananda Press, Colombo 13.*

எவரும் முன்வரவில்லை. இது ஒரு பெருங் குறை யென்றே சொல்லலாம். காரைநகர் ஸ்ரீமத் கா. சிவசிதம்பர ஐயரவர்கள் முனீசுரர் நவமணி மாலையினை (1887) இயற்றியுள்ளார். கொழும்பு மு. சரவணமுத்துப்பிள்ளையவர்கள் முனியேசுர தீர்த்த யாத்திரை வழிநடைப் பதம் எனும் நூலினை (1897) இயற்றியுள்ளார். கொக்குவிற் குகதாசர் ச. சபாரத்தின முதலியார் முன்னை நாதசுவாமி பேரிலும் வடிவழகியம்மைபேரிலும் ஆசிரிய விருத்தங்கள் இயற்றியுள்ளார். கொக்குவில் சி. சிலம்புநாதபிள்ளையவர்கள் (1) முனீசுரத்து வடிவழகியம்மை ஆசிரிய விருத்தமும் பதிற்றந்தாதியும் (2)முனீஸ்வர ரூஞ்சல் எனும் நூல்களை இயற்றியுள்ளார். கொழும்பு அ. வயித்திலிங்கம் அவர்கள் முனீசுரவந்தாதி பாடியுள்ளார். புழுதிவயல் எஸ். ஆர். தம்பு அவர்கள் முனீஸ்வர வடிவழகி பதிகம் இயற்றியுள்ளார். இன்னும் பல நூல்களுள.

உலகில் உற்பவித்த மக்கள் யாவரும் இறைவனின் பிள்ளைகள் என்பதற்கும், இறைவனின் சந்நிதானத்தில் சாதி, சாகிய, மத பேதங் கடந்து நின்று மக்கள் யாவரும் வழிபடலாம் என்பதற்கும் வடிவழகியின் சந்நிதானம் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. ஒரு முறை அந்தப் புனித தலத்தைத் தரிசித்தால், ஆண்டு தோறும் அல்லது அடிக்கடி தன்னகத்தே இழுக்கும் காந்த சக்தி வாய்ந்தது. நீங்கள் ஒருமுறை போய்ப் பாருங்கள்.

போற்று முனீசன்றன் பொன்னடியை நெஞ்சேநீ
மாற்றும் பிறவி மயல்.

— முனீசுரர் நவமணிமாலை

# ஆலயத்தின் தத்துவப்பொருள்

★

எந்த ஓர் இயக்கத்தை மனிதன் தொடங்கினாலும், அதனை வளர்த்து வைத்துப் பயன் பெற்றாலும் அந்த இயக்கத்துக்கு ஒரு தத்துவப் பொருளைக் காண்பது அவனுடைய நுட்ப அறிவின் ஆற்றல் என அறியவேண்டும். அப்படிப்பட்ட நுண்ணிய அறிவுடைய மனிதன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தான் வளர்த்த சமய நிலையங்களுக்கு ஒரு தத்துவப் பொருளைக் காணமாட்டானா? ஒப்புவமைகளை வைத்துக்கொண்டு அரிய தத்துவப் பொருள்களை அவன் அங்கேயும் காண்பான் அல்லவா? ஆகவே, சமய நிலையங்களில் மிகச் சிறந்ததாகும் கோயில் அமைப்பின் தத்துவப் பொருளை அவன் கண்டுகொண்டது ஒரு வியப்பன்று. கோயில் இறைவன் எழுந்தருளும் இல்லம் ஆகும். (கோ + இல்). மனிதன் வசிக்கும் இருப்பிடம் அவனுடைய வீடு ஆகும். மனிதனுடைய செல்வ நிலைக்குத் தக்கவாறு அவன் வசிக்கும் வீடும் இருக்கும். அது குடிசையாகவும் மாளிகையாகவும் இருக்கலாம். அதுபோலவே இறைவனுடைய கோயிலும் அதன் சூழ்நிலையைப் பொறுத்துச் சாதாரணமாக ஒரு நிலைமுதல் ஏழு நிலைமாடம் வரை உயர்ந்திருக்கும். இது சாதாரண உவமையாகும். இதனினும் உயர்ந்த ஓர் உவமை உண்டு. கோயில் இறைவன் உறைவிடம் ஆகின், மனிதனுடைய உடல் அவனுடைய உயிர் அல்லது ஆன்மா வசிக்கும் அரிய இருப்பிடம் ஆகும் அல்லவா? இதனை உயர்ந்த ஞானிகளும் உணர்ந்திருக்கின்றார்கள். ஒப்புயர்வற்ற சித்தர் திருமூலநாயனார் இவ்வுவமையைக் கூறுகின்றார்:

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

— வி. எம். இராமச்சந்திரன் செட்டியார்